விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 பங்குனி 13 ஞாயிற்றுக்கிழமை (26.03.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 097

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(ஜி-7907)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

## இராணுவத்தை தண்டிக்க முடியாது
# அரசியல் கைதிகள் குற்றவாளிகள்தான்!
## யாழில் சந்திரிகா கருத்து



(யாழ்ப்பாணம்)

இந்த நாட்டை போர்க்காலத்தில் பாதுகாத்த இராணு வீரர்களுக்கு எதிராக நல்லாட்சி அரசாங்கம் ஒரு போதும் சட்ட நடவடிக்கை எடுக்காது என தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதியும் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத் துக்குமான பணியகத்தின் தலைவருமான சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க, தமிழ் அரசியல் கைதிகள் என தற் போது சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரும் ஏதோவொரு வகையில் குற்றவாளிகள்தான் எனவும் குறிப் பிட்டுள்ளார். (04-ம் பக்கம் பார்க்க)

## 24 ஆயிரத்து 562 பேருக்கு டெங்கு

(கொழும்பு)

இந்த வருடத்தின் இது வரையிலான காலப் பகுதிக்குள் டெங்கு நோயினால் சுமார் 24 ஆயிரத்து 562 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவற்றுள் அதிகமானவர்கள் மேல் மாகா ணத்திலேயே இனங்காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று நாட்களுக்கு மேலாக காய்ச்சல் இருக்கும் பட்சத்தில் உடனடியாக 16☛

## கருக்கலைப்பு வீதம் அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் வருடாந்த பிறப்பு வீதத்தை விட கருக்கலைப்பு எண்ணிக்கை அதிகரித்துள்ள தாக இலங்கை குடும்ப அமைப்புச் சங்கத்தின் மருத்துவப் பணிப்பாளர் ஹரிஸ்சந்திர யகந்தா வல தெரிவித்துள்ளார்.

கருக்கலைப்பு காரணமாகவே தாய்மாரின் இறப்பு வீதத்தில் இலங்கை மூன்றாம் இடத்தில் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாதுகாப்பற்ற பாலியல் தொடர்பு 15☛

### யுத்த பாதிப்புக்களை சீர்செய்ய
## இலங்கை இன்னும் செயலாற்ற வேண்டும்

(பிரிட்டன்)

யுத்தம் காரணமாக ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பில், அதனை சீர்செய்வதற்கு இலங்கை இன்னும் பல்வேறு கருமங்களை நிறை வேற்ற வேண்டியுள்ளது என பிரித்தானிய வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அமைச்சர் பரோனஸ் ஜொய்சி அனேலி தெரி வித்துள்ளார்.

இலங்கை தொடர்பில் ஜெனிவா 04☛

## மக்களின் கோரிக்கையை புறந்தள்ளும் அரசு -மகிந்த



(கொழும்பு)

அரசாங்கம் நாட்டு மக்களின் கோரிக் கைகளுக்கு செவி சாய்க்காமல் செயற்ப டுவதாக நாடாளும ன்ற உறுப்பினர் மகி ந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

வெலிவேரிய பிர தேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரி வித்தார்.

நாட்டு மக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்காமல் நல்லாட்சி 15☛

## மக்களின் நிலங்களை விரைவில் விடுவியுங்கள்
### ஆனந்தன் எம்.பி வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

மன்னார் முள்ளிக்குளம் கிராம மக்களின் வாழ்வாதாரமான விவசாயம் மற்றும் மீன் பிடி ஆகிய இரண்டு பிரதான தொழில்களும் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருப்பதால் உடனடியாக குறித்த மக்களின் நிலங்களை விடுவிக்க அரசு துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட 15☛

## மேஜர் மகேஸ் –விக்கி சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பாதுகாப்பு படை களின் கட்டளை தளபதியாக இருந்து பதவி உயர்வு பெற்ற மேஜர் 15☛

## கருணா சவால்!

(கல்குடா)

தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின ருக்கு அரசியல் ஆளுமை, சாணக் கியம் இருந்தால் கும்புறுமூலை மது பான உற்பத்தி தொழிற்சாலையின் நிர்மாணப் பணி களை நல்லாட்சியி டம் 15☛

## மக்கள் ஏமாற்றம்

(கரணவாய்)

சந்திரிகாவின் வரவிற்காக இர ண்டு மணித்தியா லங்கள் காத்திருந்த பொதுமக்கள் பெரும் ஏமாற்றம் அடைந்த னர்.


வடமராட்சி தொண்டைமானாறு பகுதியில் உள்ள குள த்திற்கான 04☛

## மங்களவின் பதவியை பறியுங்கள்!

(கொழும்பு)

மங்கள சமரவீரவை வெளிவிவகார அமைச்சர் பதவியிலிருந்து விலக்க வேண்டுமென முன்னாள் இராஜதந்திரியும் கூட்டு 15☛

# “மாவீரர்கள் வாழ்ந்த வீர மண்ணை வணங்கி தரிசிக்க நினைத்திருந்தேன்”
### அரசியலாக்கி தடுத்து விட்டீர்கள் – ரஜினி உருக்கம்



(சென்னை)

நான் இலங்கை யில் நடைபெறும் விழாவில் கலந்து கொள்வதைத் தற் போது தவிர்க்கிறேன். இனி வரும் காலங்க ளில் இலங்கை செல் வதை அரசியலாக்கி அங்கு என்னை போகவிடாமல் செய் துவிடாதீர்கள் என்று தென்னிந்திய நடிகர் சூப்பர் ஸ்டார் ரஜினி காந்த் உருக்கமாக வேண்டுகோள் விடு த்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று சனிக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை 15☛

### அமெரிக்க காங்கிரஸிடம்
## முன்னேற்றம் குறித்து இலங்கை எடுத்துரைப்பு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தின் கடந்த கால முன்னேற்றங்கள் குறித்து அமெரிக்க காங்கி ரஸ் பிரமுகர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டுள் ளதாக அமெரிக்காவுக்கான இலங்கை தூதர கம் தெரிவித்துள்ளது.

காங்கிரஸ் கட்சி பிரமுகர்களுடன் கடந்த வாரம் இடம்பெற்ற சந்திப்பின்போது அமெரிக் காவுக்கான இலங்கை தூதுவர் 15☛

## கட்டுத்துப்பாக்கி வெடித்து இளைஞர் படுகாயம்

(மல்லாவி)

மதவாச்சி பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள பூனாவை கோம்ப கஸ்கடுவ என்ற இடத்தில் வயல் வேலைக்கு சென்ற இளைஞர் ஒருவர் மிருகங்களை வேட்டை யாடுவதற்காக உருமறைப்புச் செய்யப்பட்டு மறைத்து வைத்தி ருந்த கட்டுத்துப்பாக்கியில் சிக்கிக் கொண்டதால் துப்பாக்கி வெடித்து இளைஞரின் கால்கள் படுகாயம டைய நேரிட்டுள்ளது.

படுகாயமடைந்த இளைஞர் வவுனியா மாவட்ட பொது வைத் தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக வவு னியா பொலிஸ் நிலையத் தகவ லில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இச்சம்பவம் நேற்று சனிக்கி ழமை பிற்பகல் இரண்டு 15☛

## ஜனாதிபதி நேற்று நாடு திரும்பினார்

(கொழும்பு)

60வருட ரஷ்ய- இலங்கை நட்புறவை மேலும் நூறு வருட ங்களுக்கு முன்னெ டுத்துச் செல்லும் வகையில் சிறப்பாக வளர்த்துக்கொண்டு இலங்கை தாய்நாட் டுக்குத் தேவையான பல்வேறு அபிவிரு த்தி நன்மைகளைப் பெற்றுக்கொண்டு ரஷ்யாவுக்கான மூன்று நாள் உத்தி யோகபூர்வ விஜய த்தை வெற்றிகர மாக முடித்துக்கொ ண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன நேற்று நாடு திரும்பினார். 04☛

### புலிகளின் தாக்குதலில்
## கண்ணை இழந்த சந்திரிகா கோபம் கொள்ளவில்லை!
### நல்லெண்ணத்தில் செயற்படுகிறார் – கூரே



(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தாக்குதலில் முன்னாள் ஜனாதிபதி சந் திரிகா கண்ணை இழந்த போதிலும், அவருக்கு தமிழ் மக்கள் மீது 15☛


## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

## மரண அறிவித்தல்

### குமாரவேலு சிறீபாஸ்கரன் (கண்ணன்)

பிறப்பு 28 - 04 - 1968



இறப்பு 13 - 03 - 2017

பருத்தித்துறை வராத்துப்பளையைப் பிறப்பிடமாகவும், டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரவேலு சிறீபாஸ்கரன் (கண்ணன்) 13.03.2017 திங்கட்கிழமை டென்மார்க்கில் காலமானார்.

அன்னார் குமாரவேலு -யோகமலர் தம்பதியினரின் அன்பு மகனும் வதனியின் பாசமிகு கணவரும், கிருசாந், பிரியனா ஆகியோரின் அன்புத் தந்தையும், சுபாஸ்கரன், சசிகரன், பிரபாகரன், காலஞ்சென்ற உசா ஆகியோரின் சகோதரரும் வதனா, மஞ்சு, லக்சிகா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று மதியம் 2 மணியளவில் (26.03.2017) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(8416) தகவல்:- குடும்பத்தினர்

**New Sky Computer Training Centre**

குறுகியகால கணினி வகுப்புக்கள்

* Word 2016 - 3 Weeks
* Excel 2016 - 3 Weeks
* PowerPoint - 2 Weeks
* Photoshop CC - 3 Weeks
* CorelDraw X7 - 3 Weeks
*Indesign CC, Illustrator CC, PageMaker
*Kids Programe - சிறுவர்களுக்கானது

Internet & E-mail - 2 Weeks

TP:0212215992, 0779672038

இல.71ம பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் (யாழ் மாநகர சபைக்கு முன்னால்)

(C-7918)

## வீடு விற்பனை

இருபாலை பழைய வீதியில், 2 பரப்புடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. (3 அறை, Hall) தரகர்கள் தேவையில்லை.

**0774013062, 0767079792**

(8411)

சேவைநலன் பாராட்டும் 60வது பிறந்ததின நல்வாழ்த்தும்




வேலணை பிரதேச சபையில் பிரதம முகாமைத்துவ உதவியாளராக சேவையாற்றி 2017.03.26-ம் திகதி இன்று சேவையிலிருந்து ஓய்வுபெறும்

### திருவாளர் ஐயாத்துரை குருச்சந்திரநாதன்

அவர்கள் தனது சேவைக்காலத்தில் எமது சபைக்கு ஆற்றிய சேவையை பாராட்டுவதுடன் அவரின் ஓய்வுக்காலம் சீருடனும் சிறப்புடனும் அமைய வேண்டும் என்று நயினை நாகபூசணி அம்பிகையைப் பிரார்த்திக்கின்றோம்.


செயலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்
பிரதேச சபை, வேலணை.

(8417)

31ம் நாள் நினைவுகளும்

## அந்தியேட்டியம்

தோற்றம் 01 - 12 - 1941



மறைவு 24 - 02 - 2017

குரும்பைகட்டி, புலோலியைச் சேர்ந்த கிளி/பாரதி மகா வித்தியாலயத்தில் வர்த்தக பாடத்தைக் கற்பித்து வருகின்ற ஆசிரிய நண்பனாகிய சி. ஜெயச்சந்திரன் அவர்களது தந்தை அமரர் ஆறுமுகம் சின்னத்துரை அவர்களது 31ம் நாள் நினைவலைகளும் அந்தியஸ்டி கிரியைகளும் இன்று. (26.03.2017 ஞாயிற்றுக்கிழமை)

நாட்கள் முப்பத்தொன்று ஆனது
மாநிலத்தில் நீங்கள் பிரிந்து
தீராத துயரத்தில் தேம்புகின்றோம்
நாம் இங்கு
உறவுகளைத் தவிக்கவிட்டு
இமைகளை மூடிவிட்டாய்
நினைவிழந்து செயலிழந்து
நிர்க்கதியாய் நிற்கின்ற உறவுகளுக்கு
ஐயாவின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்

அமரர்
**ஆறுமுகம் சின்னத்துரை**

இவ் நிகழ்வினை நினைவுகூரும்...
ஆசிரிய நலன்புரிச் சங்கம்
கிளி/பாரதி மகா வித்தியாலயம்
பாரதிபுரம், கிளிநொச்சி.

(C-7915)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்





எங்கள் இனிய நண்பர்
திரு. **சி. சிதம்பரநாதன்**
அவர்களின் அன்பு மகள்

**செல்வி**
### சி. இலக்கியா

The Sustainability Research Network USA எனும் நிறுவனத்தால் சர்வதேச அளவில் நடத்தப்பட்ட "போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இரசாயன தாக்கங்களும் தீர்வுகளும்" எனும் ஆய்வுக் கட்டுரை போட்டியில் முதலிடம் பெற்று கௌரவிக்கப்பட்டமைக்காக பாராட்டுவதுடன் இவர் மேலும் பல சாதனைகள் புரிந்து உயர்ந்திட வாழ்த்துகிறோம்.

**வாழ்த்துவோர் :**
நமணன், நமணா, சங்கீர்த்தனா, கிருத்திகா, லிதுனன்

(C-7913)

| 5ம் ஆண்டு நினைவில் | 7ம் ஆண்டு நினைவில் | 20ம் ஆண்டு நினைவில் |
| --- | --- | --- |
| தோற்றம் 1946 - 02 - 02 | தோற்றம் 1982 - 08 - 30 | தோற்றம் 1981 - 05 - 03 |
| மறைவு 2012 - 02 - 12 | மறைவு 2010 - 04 - 13 | மறைவு 1997 - 04 - 08 |
|  |  |  |
| அமரர் சின்னத்துரை கணபதிப்பிள்ளை | அமரர் பிரபாகரன் பிறேமலோஜினி | அமரர் கணபதிப்பிள்ளை பிரதீபன் |

பூத்த நினைவது வாடுமுன்னே
பூமியை விட்டு போனவர்களே
பூவுலகின் வாழ்வை முடித்துவிட்டு
புண்ணிய தேவனாய் ஆனவர்களே
உங்கள் நினைவாய் பூஜைகள்

முச்சாக எம்முள்ளே
நாற்றாக ஆனவர்களே
மூவுலகின் தெய்வமாய்
எம்முள்ளே நிறைந்தவர்களே
காற்றாக சுவாசமாய்
எம்முள்ளே வாழ்பவர்களே
வீற்றிருந்து விளக்கேற்றி
காத்திருப்போம் உங்களுக்காய்
கண்களிலே காட்சி தர வருவீர்களா!

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்
சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.

(C-7916)

# எமது பரம்பரைக் காணிகளிலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிடம் வலி.வடக்கு மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நாம் பரம்பரையாக வாழ்ந்த காணிகளில் இருந்து இராணுவம் வெளியேற்றப்பட்டு காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் மயிலிட்டி, பலாலி உட்பட காணிகளை இழந்த மக்கள் முன்வைத்துள்ளனர். மக்களுடைய கோரிக்கைகளை அடுத்து தான் அடுத்த தடவை வரும்போது நல்ல முடிவோடு வருவதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா உறுதியளித்துள்ளார்.



நேற்று யாழ்ப்பாணம் வருகைதந்த அவர் பளை வீமன்காமத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்துக்கான அடிக்கல்லை நாட்டி வைத்த பின்னரே இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

30 வருட காலமாக எமது வழ்விடங்கள் விடுவிக்கப்படவில்லை. நாங்கள் அகதி முகாம்களிலும், வாடகை வீடுகளிலும் தங்கியுள்ளோம். இந்த நிலையில் தான் எங்கள் இடங்களில் அபிவிருத்தி நடைபெறுகின்றது. நாம் சொந்த இடத்தில் மீள்குடியேறமுடியாத நிலையில் எமது இடங்களில் அபிவிருத்தி எதற்கு?

எமது சொந்தக் காணிகள், எமக்கு வேண்டும் இந்த கோரிக்கையைத்தான் கடந்த 3தசாப்த காலமாக முன்வைத்து வருகின்றோம். ஆனாலும் எமது கோரிக்கையை அரச தலைவர்கள் கண்டுகொள்ளவில்லை.

புதிய அரசாங்கத்தின் கீழ் ஓரளவு காணிகள் விடுவிக்கப்பட்டாலும், மக்களுடைய காணிகள் விடுவிக்கப்படவில்லை. மயிலிட்டியில் இதுவரை ஒரு துண்டுகாணியும் விடுவிக்கப்படவில்லை. இதனால் எமது காணிகளை பார்க்க முடியாத நிலையும் உள்ளது.

எமது காணிகளை விடுவிப்பதாக ஜனாதிபதி பல தடவை உறுதியளித்திருந்தார். ஆனால் அவர் எமக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறிவிட்டார். ஜனாதிபதி எம்மை ஏமாற்றிய நிலையில் நீங்கள் தான் எமது காணிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாங்கள் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு செல்ல வேண்டுமானால் 20 கிலோ மீற்றர் சுற்றிவரவேண்டியுள்ளது. எமது காரணிகளும், வீதிகளும் விடுவிக்கப்பட்டால் சில கிலோமீற்றர் தூரத்தில் தெல்லிப்பழை வைத்தியசாலையை சென்றடைந்து விடலாம். நாங்கள் மீளக்குடியேற முடியாமைக்கு இராணுவத்தினரே காரணம். அவர்கள்தான் எமது நிலத்தை பறித்து வைத்துள்ளார்கள் என அப்பகுதி மக்கள் கூறினர்.

இதற்கு பதிலளித்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, போரின்போது படையினர் வசமிருந்த பெரும்பாலான காணிகள்தற்போது விடுவிக்கப்பட்டுள்ளன. எனினும் மக்களுடைய காணிகளை வழங்குவதற்கு தமது அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்த அவர்,

இராணுவத்தின் வசமுள்ள காணிகளின் விபரங்களையும் கேட்டறிந்து அடுத்த முறை யாழ்ப்பாணத்திற்கு வரும்போது நல்ல செய்தி கூறுவதாகவும் தெரிவித்தார். (இ-4)

# ஆசியாவில் சிறந்த நிதியமைச்சருக்கான விருது ரவி கருணாநாயக்க வசமானது



ஆசிய பசுபிக் வலையத்தின் சிறந்த நிதி அமைச்சர் விருதினை நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்று முன்தினம் பெற்றுக் கொண்டார்.

குறித்த விருதினைப் பெற்றுக் கொள்வதற்காக ரவி கருணாநாயக்க பிரித்தானியா சென்றிருந்தார். இந்த நிலையில் அவர் நேற்று முன்தினம் குறித்த விருதை பெற்றுக் கொண்டார்.

பிரித்தானியாவின் த பேங்கர் சஞ்சிகை 2017ஆம் ஆண்டிற்கான ஆசிய பசுபிக் வலையத்தின் சிறந்த நிதி அமைச்சராக இலங்கையின் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவை தெரிவுசெய்தது.

புதிய பொருளாதார புரட்சி ஒன்றிற்காக இலங்கை மக்கள் மத்தியில் உள ரீதியிலான மாற்று சிந்தனைகளை தோற்றுவிக்கும் வகையிலான பொருளாதார கொள்கையினை நடைமுறைப் படுத்தியமையால் அவருக்கு இந்த விருது கிடைக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இரகசிய கூலிப்படைகளை ராணுவம் உருவாக்க முடியும்

## கோத்தபாய ராஜபக்ஷ கூறுகிறார்



(கொழும்பு)

இரகசிய கூலிப்படைகளை உருவாக்க இராணுவத்திற்கு முடியும். அது குறித்து இராணுவத் தளபதி அறிந்து வைத்திருப்பது அவசியம் என்பதோடு, அந்தப் படை சார்ந்த எழுத்து மூலமான ஆவணங்கள் இராணுவத் தலைமையகத்தில் பேணப்பட வேண்டும் என்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எனினும் தான் பதவிவகித்த காலத்தில் அப்படிப்பட்ட கூலிப்படைகளை இயக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஆட்சியில் இரகசிய கூலிப்படைகளை வைத்து பலரை வெள்ளை வானில் கடத்திக் கொலை செய்ததாக முன்னாள் முப்படைத் தளபதியும், நல்லாட்சி அரசாங்கத்தின் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்கோ அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் குறித்த விவகாரம் தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)

# இலங்.-பாக்.சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்

## பிரதமர் நவாஸ் வலியுறுத்து

இலங்கை - பாகிஸ்தான் நாடுகளுக்கிடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்த வேண்டும் என பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

ஒப்பந்தம் ஊடாக இரு நாட்டு மக்களும் முழுமையான பிரதிபலனை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் பாகிஸ்தான் பிரதமர் குறிப்பிட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. இலங்கை, பாகிஸ்தான வர்த்தக முதலீட்டாளர்கள் சங்கத்தின் தலைவர் (Iftikhar Aziz) இப்டிகார் அஸிஸை நேற்று முன்தினம் சந்தித்த போதே அவர் மேற்கண்ட விடயங்களைதெரிவித்துள்ளார்

சுவிட்ஸர்லாந்தில் இடம்பெற்ற உலக பொருளாதார மாநாட்டின் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையை பாகிஸ்தான் பிரதமர் இதன்போது நினைவு கூர்ந்துள்ளார்.

அத்துடன், சார்க் அமைப்பின் நோக்கத்தை அடைய, இலங்கை மற்றும் பாகிஸ்தானின் ஆதரவு முக்கியமானது என பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் கூறியுள்ளார். (இ-7)

# துறைமுக ஒப்பந்தத்தை தயாரிக்கும் குழுவிலிருந்து சம்பிக்க விலகினார்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தை, சீன வணிக நிறுவனத்துக்கு பரிமாற்றம் செய்வதற்கான ஒப்பந்தத்தை தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட 7 அமைச்சர்கள் கொண்ட குழுவிலிருந்து, அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க விலகிக் கொண்டுள்ளதாக, அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஒரு அமைச்சரவை அமைச்சர் என்ற வகையில், ஒப்பந்தத்தை தயாரிக்கும் போது, தன்னால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள், நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் எனவே, இந்தக் குழுவிலிருந்து வெளியேறியுள்ளதாகவும் அமைச்சர் ரணவக்க, ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார். இந்த ஒப்பந்தைத் தயாரிப்பதற்கு, அமைச்சரவை அமைச்சர்கள் நியமிக்கப்பட்டு, அதற்காக தலைமைத் தாங்குவதற்காக, அமைச்சர் சரத் அமுனுகம நியமிக்கப்பட்டிருந்தார். மேலும், மலிக் சமரவிக்கிரம, அர்ஜுன ரணதுங்க, சுசில் பிரேமஜயந்த, பாட்டலி சம்பிக்க ரணவக்க, மகிந்த அமரவீர, சாகல ரத்நாயக்க ஆகியோர் நிமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



## மக்கள்...

அடிக்கல் நாட்டுவதற்கு சந்திரிகா வருவதாக தெரிவிக்கப்பட்டதையடுத்து இரண்டு மணித்தியாலங்களாக கால் கடுக்க நின்றவர்கள் பெரும் ஏமாற்றம் அடையநேரிட்டுள்ளது.

இதைவிட பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டதுடன், மோப்ப நாய் கொண்டுவந்தும் சோதனையிடப்பட்டது.

தொண்டைமானாற்று பகுதியில் சிறிய பற்றைகள் காணப்பட்டதனால் விஷேட அதிரடிப்படையினர் அழைக்கப்பட்டு சோதனைகள் இடம் பெற்றன.

வீதிகளில் போக்குவரத்து பொலிஸார் நெடுநேரமாக காவல் நின்றிருந்தனர். இந்நிலையில் சந்திரிகா வரமாட்டார் என தெரிவிக்கப்பட்டதையடுத்து போக்குவரத்து பொலிஸார் உள்ளிட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் விலக்கிக் கொள்ளப்பட்டன. (செ-60)

## இலங்கை இன்னும் ...

மனித உரிமை சபையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில்,

இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் குறித்த சில முக்கிய விடயங்களை ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையின் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார். அதன்படி ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கு அளித்த வாக்குறுதிகளை இலங்கை அரசு காலதாமதமின்றி நிறைவேற்ற வேண்டும் எனவும் அதில், தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வரவேற்கப்பட வேண்டியது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## ஜனாதிபதி நேற்று ...

43 வருடங்களுக்குப் பின்னர் இலங்கை அரச தலைவர் ஒருவர் ரஷ்யாவுக்கு மேற்கொண்ட உத்தியோகபூர்வ விஜயம் இதுவாகும். ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் விசேட அழைப்பின் பேரில் இந்த விஜயத்தை மேற்கொண்ட ஜனாதிபதிக்கு கிரம்ளின் மாளிகையில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அவர்களினால் பலத்த வரவேற்பு வழங்கப்பட்டது.

இச்சந்திப்பின் போது இலங்கையின் கல்வி, விவசாயம், சுற்றுலா, கைத்தொழில், மின்சக்தி தேசிய மற்றும் பிராந்திய பாதுகாப்பு தொடர்பில் ரஷ்ய ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தினார்.

சுமார் இரண்டு மணித்தியாலத்திற்கும் அதிக நேரம் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் இருந்து.

ரஷ்ய ஜனாதிபதி புடின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஒரு வரலாற்று முக் கியத்துவம் வாய்ந்த நினைவுப் பரிசையும் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## அரசியல் கைதிகள் ...

முன்னதாக யாழ்.வந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற மேற்படி பணியகத்தின் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியிருந்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

கடந்த 30 வருட கால போர்ப்பாதிப்பு தொடரபில் எல்லோருக்கும் தெரியும். தற்போதைய அரசு அதை பற்றி கவலைப்படுகின்றது. அதற்கான தீர்வு பற்றியும் ஆலோசிக்கின்றது. வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பல விடயங்களை இங்கு சுட்டிக் காட்டியிருந்தார்.

அவற்றில் பல விடயங்களை செய்ய வேண்டியுள்ளது என்பதனை ஏற்றுக்கொள்கின்றேன். காணாமல் போனோர்க்கு என்ன நடைபெற்றது என்பதை அறிந்து கொள்வது, இராணுவம் பிடித்து வைத்துள்ள மக்களுடைய காணிகளை மீள ஒப்படைத்தல்என்பவை செய்யப்பட வேண்டிய பிரதான விடயங்களாக உள்ளன.

காணாமல்போனோர் விடயம் நாட்டில் பாரதூரமான பிரச்சினையாக உள்ளது. இந்த விடயம் தொடர்பில் நேர்மையான செயல் திட்டத்தை முன்னெடுப்பதாக நாட்டு மக்களுக்கும் சர்வதேசத்திற்கும் அரசாங்கம் உறுதியளித்துள்ளது. காணாமல் போனோர் விடயம் தொடர்பில் இராணுவம் மற்றும் பொலிஸாரிடம் கலந்துரையாடி திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

முதலில் யார் காணாமல்போனார்கள் எவ்வாறு காணாமல் போனார்கள் என்பது தொடர்பில் அறியவுள்ளோம். இது தொடர்பான சட்டமூலம் ஒன்றுக்கு நாடாளுமன்றத்தின் அனுமதி கிடைத்துள்ளது. ஜனாதிபதி கையொப்பமிட்டு அது நடைமுறைப்படுத்தப்படும் நிலையில் உள்ளது. புதிய அரசாங்கம் நாட்டின் அனைத்து மக்களுடைய நலன் சார்ந்து பல நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்ற போதிலும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன வாதத்தையும், மத வாதத்தையும் தூண்டிக்கொண்டுள்ளார். இதனால் எல்லாவற்றையும் உடனடியாகவே செய்ய முடியாத தடை ஏற்படுகின்றது.

பிரிவினைவாதிகள் குறிப்பிடுவது போன்று போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை நடத்தி இராணுவத்தினர் எல்லோருக்கும் மரணதண்டனை வழங்குவது எமது அரசாங்கத்தின் நோக்கமல்ல. தற்போது காணாமல் போனோருக்கு என்ன நடந்தது என்பது தான் அவர்களது உறவினர்களின் கேள்வியாக உள்ளது. மாறாக குற்றவியல் தண்டனை ஒன்றை யாருமகோரவில்லை.

போர்க்காலத்தில் இந்த நாட்டை பாதுகாத்த இராணுவ வீரர்களுக்கு எதிராக நடவடிகக்கை எடுக்க அரசு எப்போதும் தயாராக இல்லை. புலம்பெயர் மக்கள் கூறுவதற்கு தலையாட்ட முடியாது. வேண்டுமென்றால் புலம்பெயர் மக்கள் பொருளாதார திட்டத்தோடு இணைய வேண்டும் என்றார் சந்திரிகா.

இதேவேளை குற்றவாளிகள் என இனங் காணப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளே சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றனர் என தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க,

நல்லாட்சி அரசாங்கம் என்பதற்காக குற்றவாளிகளை விடுவிக்கவேண்டும் என்று இல்லை. குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டியவர்களே எனவும் தெரிவித்துள்ளார்.

பொன்னாலையில் நேற்று உவர்நீர்த் தடுப்பணைக்கான வேலைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நடைபெற்றது அந்த நிகழ்விலும் கலந்து கொண்ட முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிடம்,

நல்லாட்சி அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதுடன் தமிழ் அரசியல கைதிகளை விடுதலை செய்யும் என்று நம்பியே தமிழ் மக்கள் வாக்களித்தார்கள். ஆனால், யுத்தம் முடிவடைந்து 7 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் அந்த யுத்தத்தைக் காரணம் காட்டிக் கைது செய்யப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் ஏன் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை என தமிழ் அரசியல் கைதியாக தடுத்துவைக்கப்பட்டிருந்து விடுவிக்கப்பட்ட நபர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

அத்துடன் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கொலைசெய்ய முயன்றார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்தவரை ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்துள்ளார். அதேபோன்று நீங்கள் ஜனாதிபதியாக இருந்தபோது உங்கள் மீதான கொலை முயற்சியில் ஈடுபட்டார்கள் என்று குற்றம் சுமத்தப்பட்டவர்கள் இன்று தண்டனை அனுபவித்து வருகின்றனர். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் கலந்துரையாடி அவர்களை விடுவிக்க நீங்கள் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்றும் அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

அந்தக் கேள்விகளை செவிமடுத்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவற்றுக்கு பதிலளிக்கும்போதே மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் தனது பதிலில் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்தின்போது படையினர் குற்றம் இழைத்தனர் எனக்கூறி அவர்களுக்கு தண்டனை பெற்றுக்கொடுக்கவேண்டும் என நீங்கள் கூறுகின்றீர்கள். அவர்கள் குற்றம் செய்திருந்தால் தண்டிக்கப்படவேண்டும். எனினும் எமது அரசாங்கத்தின் நோக்கம் இராணுவத்தினரை தண்டிப்பது அல்ல. தமிழ் அரசியல்கைதிகள் என்று தற்போது சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள அனைவரும் ஏதோவொரு வகையில் குற்றவாளிகள் என இனங் காணப்பட்டவர்களே எனவும் சந்திரிகா அங்கு மேலும் தெரிவித்தார் (செ-4,9)

## ஊடகவியலாளர் மீதான தாக்குதலுக்கு கண்டிப்பு



(ஏறாவூர்)

மட்டக்களப்பு, கல்குடா பொலிஸ் பிரிவு கும்புறுமூலை பகுதியில் வைத்து, செய்தி சேகரிக்கச் சென்ற சுதந்திர ஊடகவியலாளர்கள் மீது கடந்த 21ஆம் திகதியன்று தாக்கப்பட்டு அச்சுறுத்திய சம்பவம் நல்லாட்சிக்கு எதிரானது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்துள்ளார்.

இது விடயமாக தொடர்ந்து கருத துத் தெரிவித்த அவர்,

மக்களின் விருப்பத்திற்கு மாறாக மதுசார உற்பத்தி நிலையம் ஒன்று கல்குடா - கும்புறுமூலையில் ஆரம்பிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருவது கவலையளிக்கிறது.

இந்த விடயத்தை அறிந்து மேற்படி ஊடகவியலாளர்கள் தகவல்களை சேகரிக்கச் சென்றுள்ளார்கள். அந்த வேளையில் அவர்கள் அடிதடிகாரரர்களால் தாக்கப்பட்டுள்ளார்கள்.

இத் தாக்குதலானது நல்லாட்சி என்ற சொல்லுக்கு எதிரான தாக்குதலாகவே நான் பார்க்கின்றேன். மேலும் போதையற்ற நாட்டை உருவாக்கப் போகின்றேன் என திடசங்கற்பம் பூண்ட ஜனாதிபதி யின் கருத்துக்கு எதிரான தாக்குதலாகவும் இது அமைந்துள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவம் அரசாங்கம் நிறைவேற்றியுள்ள தகவலறியும் உரிமைச் சட்டம், ஊடக சுதந்திரம் பற்றிக் கேள்வி எழுப்புகின்றது.

இப்படியான செயற்பாடுகள் கடந்த காட்டாட்சி முறையில் தான் அதிகமாக நடைபெற்றன. இப்படியான நிலைமை ஏற்படாமல் தடுக்க வேண்டியது அரசின் பொறுப்பாகும். தாக்கியவர்கள் கைது செய்யப்பட்டமை நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டமை போன்ற செயற்பாடுகள் வரவேற்கத் தக்கவையாகும்.

ஆனால், இப்படியான அடி தடிகாரரர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. மக்களை அழிவுப்பாதைக்குக் கொண்டு செல்லும் மதுச்சாலைகள் சிறுபான்மையினர் வாழும் பிரதேசங்களில் திட்டமிட்டு அதிகமாக திறக்கப்பட்டு வருகின்றன. இவற்றை மக்கள் பிரதிநிதிகளாகிய நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோமென அவர் மேலும் தெரிவித்தார். (5)


சிவமயம்

# மரண அறிவித்தல்

அகம் மகிழ — உளம் குமுற

1958 03 28 — 2017 03 24



யாழ்ப்பாணம் கோப்பாயைப் பிறப்பிடமாகவும்
கற்குழி வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட
தம்பிராசா ஸ்ரீஸ்கந்தராஜசெல்வம்
(புகையிரதநிலைய ஊழியர்)

யாழ்ப்பாணம் கோப்பாயைப் பிறப்பிடமாகவும் கற்குழி வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட தம்பிராசா ஸ்ரீஸ்கந்தராஜசெல்வம் (புகையிரத நிலைய ஊழியர்) 24.03.2017 அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா செல்வவதியின் அன்பு மகனும், உருத்திரவதனியின் அன்புக் கணவரும், ஜெயரூபி, ஜெயதீபா, ஜெயறஞ்சன், ஜெயராஜ் (Dialog நிறுவன உத்தியோகத்தர்), ஜெயக்காந் (வ/தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற குகறாஜ செல்வம், செல்வராஜி, ஸ்ரீராஜசெல்வி, வினாயக செல்வம் மற்றும் காலஞ்சென்ற செல்வரூபன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் மதியழகன் (சுரேஸ்) (எவரெடி தனியார் நிறுவன உரிமையாளர்), குயின்சி (பல்கலைக்கழக மாணவி) றூபன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சுவேதன், சது, யதுசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் 26.03.2017 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை கற்குழி வவுனியாவில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு யாழ்ப்பாணம் கோப்பாய் இந்து மயானத்தில் நடைபெறும்.

தகவல் :
மருமகன் சுரேஸ் மற்றும்
குடும்பத்தினர்

(C - 7919)



வாடிக்கையாளர்களே! புதுக்கணக்கை முன்னிட்டு
விசேட தள்ளுபடி விலைகள்

A4 பேப்பர் - April Brand 515/= 80gsm
- paper one Brand 515/= 80gsm
- paper one Brand 485/= 70gsm
- paper one Brand 675/= 100gsm All purposes
- Bright - white 80gsm 475/=

லீகல் பேப்பர் - Paper one 790/=
A3 பேப்பர் - Paper one 1150/=

இவற்றைவிட A4 கலர் பேப்பர் அனைத்து வகையான அளவுடைய பைக்கற்றுக்களிலும்
(1X100) கலர்பேப்பர் - 210/=
(1X250) கலர்பேப்பர் - 450/=
(1X500) கலர்பேப்பர் - Light - 750/=
- Dark - 850/=
பிறிசில் போட் - Light Colour 11.50
- Dark Colour 12.50, 14.50

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212,K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
T.P : - 0212225542

(C - 7914)

# புலிகளின் விருந்தோம்பல் பண்பு சிறப்பானது

## அமைச்சர் மலிக் நினைவுபடுத்தல்

தமிழீழ விடுதலைப்புலிகள் எந்தவொரு இக்கட்டான சூழ்நிலையில் இருந்தாலும் தமது விருந்தோம்பல் பண்பை சிறப்புடன் மேற்கொள்வார்கள் என தெரிவித்த மூலோபாய அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தகத்துறை சார் அமைச்சர் மலிக் சமரவிக்ரம, அவர்களுடன் இருந்த காலத்தில் தான் உணர்ந்தவற்றை நினைவுபடுத்துவதாகவும் தெரிவித்துள்ளார்.

2000 ஏற்றுமதியாளர்களை ஸ்தாபிப்பதற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் தேசிய ரீதியிலான முதலாவது விழிப்புணர்வு செயலமர்வு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதில் உரையாற்றுகையில்

யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள் புத்திசாலிகள். கடுமையாக உழைக்கக் கூடியவர்கள். கடந்த காலத்தில் எனது தந்தை யாழ். மாவட்ட பதில் அரச அதிபராக கடமையாற்றிய போது விடுமுறை நாட்களில் இங்கு தங்கு வோம். அனைத்து இடங்களுக்கும் சென்ற நினைவு உள்ளது.

தமிழ் மக்கள் சிறந்த விருந்துபசார பண்புள்ளவர்கள் மிகவும் சந்தோசத்துடன் உபசரிப்பவர்கள். கடந்த 2002 இல் ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியில் இருந்த போது வடக்கில் கிளிநொச்சியில் உள்ள சமாதான செயலகத்துக்கு வந்திருந்தேன். அப்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் தமிழ்ச் செல்வனை சந்தித்தேன். எனக்கு சிறப்பான விருந்துபசாரம் இடம்பெற்றது. அதை மறக்க முடியாது உங்களுக்கும் நினைவு படுத்த விரும்பு கிறேன்.

இக்கட்டான சூழ்நிலையிலும் தமிழ் மக்கள் விருந்தோம்பல் பண்பை கைவிட மாட்டர்கள் என்பதை அறிந்து கொண்டேன். அதை நான் பாராட்ட விரும்புகிறேன். சமாதான செயலகத்துக்கு சென்ற போது ஒரு நாள் என்னை தங்கிச் செல்லுமாறு தமிழ்ச்செல்வன் கேட்டுக் கொண்டார்.

அப்போது தான் எனக்கு அறிந்து கொள்ள முடிந்தது எத்தகைய துன்ப கரமான சூழ்நிலையில் அவர்கள் இருக்கிறார்கள் என்று. ஏனெனில் மிகவும் கஷ்டமான இடமாக இருந் தது. மின்சார வசதிகள் கூட அங்கு இருக்கவில்லை. அவ் வாறான இடத்திலேயே அவர் கள் வாழ்ந்து வந்தார்கள்.பின்னர் 2009 ஆம் ஆண்டும் விஜயம் செய்தேன். தற்போது வருகை தருவதில் மகிழ்ச்சி அடைகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)


# ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு வெளிநாடு செல்ல நீதிமன்று அனுமதி

(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ 3 மாத காலம் வெளிநாடு செல்வதற்கு நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ விடுத்த கோரிக்கைக்கு அமைய குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த வழக்கு விசாரணையை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு ஒத்திவைத்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஜோன்ஸ்டன்பெர்னாண்டோ பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் சேர்த்த சொத்துக்கள் தொடர்பில் சரியான ஆதாரங்களை சமர்ப்பிக்க தவறிய குற்றச்சாட்டின் பேரில் தொடரப்பட்ட 5 வழக்குகள் தொடர்பிலேயே பிரதம நீதவான் குறித்த அறிவித்தலை விடுத்துள்ளார். (இ-7)






# ஹோட்டல் முகாமைத்துவம் குறித்து ஆறு மாத காலப் பயிற்சி நெறிகள்

யாழ். மாவட்ட சர்வோதய நிறுவனத்தால் ஹோட்டல் முகாமைத்துவம் தொடர்பான 6 மாத காலப்பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ்மாவட்ட சர்வோதய இணைப்பாளர் எஸ்.யுகேந்திரா அறிவித்துள்ளார்.

இப்பயிற்சி நெறிக்கு க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களிலும் சித்தியடைந்த ஆங்கில அறிவுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

இப்பயிற்சி இலவசமாக இடம்பெறவுள்ளதுடன் பயிற்சியில் இணைபவர் ளுக்கு சீருடை, பயணக்கொடுப்பனவு வழங்கப்படுவதுடன் பயிற்சி முடிவில் சான்றிதழும் வேலைவாய்ப்பும் பெற்றுக் கொடுக்கப்படும் எனவும் இணைப்பாளர் அறிவித்துள்ளார். இப்பயிற்சியில் இணைய விரும்புவர்கள்தபால்மூலமோ, நேரிலோ நெடுங்குளம் சந்தி, கண்டி வீதி, அரியாலை எனும் முகவரியில் அமைந்துள்ள யாழ்.மாவட்ட சர்வோதய நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியும் அல்லது 021 221 1213 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3,134)

## முட்கம்பிகள் வழங்கல்

(தெல்லிப்பழை)

சாவகச்சேரி சரசாலைப் பகுதி சிறுதானியப் பயிர்ச் செய்கையாளர்கள் 70 பேருக்கு முட்கம்பிகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சரசாலை வடக்கு நித்திலா மகளிர் சங்க மண்டபத்தில் சாவகச்சேரிப் பகுதி விவசாயப் போதனாசிரியர் திருமதிஜெயசுதா தலைமையில் வைத்து வழங்கப்பட்டன.

இவை வடமாகாண விவசாய அமைச்சின் அனுசரணையில் கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்தும் நோக்கில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. (இ-3-23)

## காசி பாண சிவலிங்கம் பிரதிஷ்டை

வித்துவ சிரோன்மணி சி. கணேசையரின் நினைவாலயத்தில் காசி பாண சிவலிங்கம் பிரதிஷ்டை இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு மருதடி வறுத்தலைவிளானில் இடம் பெறும் இந்நிகழ்வில் கணேசையரின் மேக தூத காரிகை உரை நூல், கணேச மணியின் வாழ்க்கைத் தமிழ்ப் பணி போன்ற நூல்கள் வெளியிடப்படவுள்ளன.

மேலும், கணேசையரின் மாணவனான ச.விநாயகமூர்த்தியின் சிறப்புரை,பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜாவின் சிறப்புரை என்பன இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இங்கு புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# இராசி பலன்

26.03.2017

(பங்குனி 13, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.16 மணிக்கு

திரயோதசி முற்பகல் 11.21 மணிவரை

சதயம் பிற்பகல் 3.27 மணிவரை

சுபநேரம் 9.15-10.45 மணிவரை

இராகுகாலம் 4.45-6.15 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சூரி, புத, சுக் | செவ் | | |
| கேது சந் | கிரகநிலை சந்திராஷ்டமம் ஆயிலியம்,மகம் | | |
| | | | ராகு |
| | சனி | | குரு |

**மேடம்:** தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

**இடபம்:** பூர்வீக சொத்துக்களால் ஆதாய முண்டு, வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், தந்தை வழி உறவில் அனு கூலமுண்டு.

**மிதுனம்:** எதிலும் அவசரத்தைக் குறைப்பது நல்லது, வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், திடீர் பயணங்கள் ஏற்படலாம், பகையொன்று நட்பாகலாம்.

**கடகம்:** ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் எற்பட்டு மறையும், மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வது நல்லது, உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம்.

**சிம்மம்:** கனவு பலிதமுண்டு, சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள்

**கன்னி:** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், கூட்டு முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**துலாம்:** சுபகாரியப்பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும்.


**விருச்சிகம்:** இல்லம் தேடி இனிய தகவல்கள் வந்து சேரலாம், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், கௌரவமான நாள்.

**தனுசு:** குடும்பத்தார் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், உடன் பிறப்புக்கள் அனுசரணையாக நடந்து கொள்வர்.

**மகரம்:** காணாமல் போன பொருளொன்று மீண்டும் கிடைக்கும் வாய்ப்புண்டு, முன்கோபமும் அலைச்சலும் ஏற்படலாம், எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டும் நிலை ஏற்படலாம்.

**கும்பம்:** புதிய பொறுப்புக்களால் வேலைச்சுமை அதிகரிக்கலாம், உறவினர்கள் சந்திப்பால் திடீர் செலவுகள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் நிலையுண்டு.

**மீனம்:** உறவினர் சிலரின் அன்புக் கட்டளைக்கு அடிபணிய நேரிடலாம், தூரதேசத்திலிருந்து வரும் செய்திகள் ஆச்சரியப்பட வைக்கும், பயணங்களால் தேகநலன்கள் பாதிக்கப்படலாம்.



பளை வீமன்காமத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்றையதினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் தேசிய ஒருமைப் பாட்டிற்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தின் தவிசாளரும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கலந்துகொண்டு சுகாதார நிலையத்துக்கான அடிக்கல்லை நாட்டிவைத்ததோடு, நினைவுக் கல்லையும் திரைநீக்கம் செய்தார். நேற்று முற்பகல் 11 மணியளவில் நடந்த இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், தெல்லிப்பழை பிரதேச செயலர் ஸ்ரீமோகன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

(படங்கள் :- உ.சாளின்,மகாலிங்கம்)

## வகுப்பறைக் கட்டடத் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தியாலயத்தின் புதிய வகுப்பறைக் கட்டடத் திறப்பு விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் வித்தியாலய அதிபர் ஜே.ஏ.தவநாயகம் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா, சிறப்பு விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா ஆகியோர் கலந்து கொள்வர். (இ-12)




## முதலாம் ஆண்டு பூர்த்தி விழாவும் நன்கொடையாளர் கௌரவிப்பும்

(யாழ்ப்பாணம்)

வெளிச்சம் அறக்கட்டளையின் முதலாம் ஆண்டு பூர்த்தி விழாவும் நன்கொடையாளர் கௌரவிப்பு நிகழ்வும் இன்று காலை 9 மணிக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் அறக் கட்டளையின் தலைவர் பா. லம்போதரன் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம், சிறப்பு விருந்தினராக தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ். இராதாகிருஸ்ணன், இலங்கை செஞ்சிலுவைச் சங்க செயலாளர் சி.விஸ்வராசா, வவுனியா மாவட்ட சமூக சேவை அதிகாரி எஸ். வாசன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-12)

## 5ம் ஆண்டு நிறைவும் கால்கோள் விழாவும்

பொற்பதி அறிவாலயத்தின் 5ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வும் சரஸ்வதி முன்பள்ளியின் 32ஆவது கால்கோள் விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பொற்பதி வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள பொற்பதி அறிவாலயத்தில் இடம்பெறும். பொற்பதி அறிவாலய சரஸ்வதி முன்பள்ளி நிலையத் தலைவர் சண். வாமதேவன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், சிறப்பு விருந்தினர்களாக சங்கானை பிரதேச செயலர் ஏ.சோதிநாதன், பொறியியலாளர் எஸ்.லிங்கேசன், யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்திய கலாநிதி திருமதி லிங்கேசன் சசிகலா, யாழ். கிருபா லேணர்ஸ் உரிமையாளர் அ.கிருபாகரன், கௌரவ விருந்தினர்களாக திருநெல்வேலி தேனு களஞ்சிய உரிமையாளர் ரி.மோகன்ராஸ், திருநெல்வேலி செல்வா எலெக்ரிக்கல்ஸ் உரிமையாளர் எஸ்.சுரேஸ்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)


## சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை தீவிரம்

(யாழ்ப்பாணம்)

வலம்புரியில் வெளிவந்த செய்தியையடுத்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நந்தகுமார் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டார். சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் டெங்கு நுளம்பு பெருகுவதற்கான சூழல் காணப்படுகின்றது. இதனை சீர் செய்ய இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என வலம்புரியில் செய்தி வெளியாகியிருந்தது.

இதையடுத்து அங்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நேரடியாக சென்ற பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியசாலையின் குறைகள் தொடர்பாக பார்வையிட்டார். டெங்கு நுளம்பு பெருகுவதற்கான குழிகளை பார்வையிட்டு பைக்கோ இயந்திரம் மூலம் உடனடியாகவே குறித்த குழிகளை மூடி வைத்தியசாலையை சுத்தப்படுத்துமாறு பணித்தார். இதற்கான நிதி; திணைக்களம் மூலம் உடனடியாக .வழங்கப்படும் எனவும் வைத்தியசாலை நிர்வாகத்திடம் தெரிவித்துள்ளார். அதுமட்டுமில்லாமல் வைத்தியசாலையில் உள்ள குறைகள் உடனடியாக நிவர்த்தி செய்யப்பட்டு மக்களுக்கு நம்பிக்கையான, திருப்தியான சேவைகள் வழங்கப்பட வேண்டும் என வைத்தியசாலை நிர்வாகத்திடம் கேட்டுக்கொண்டுள்ளார். (இ-89)

## விபத்தில் இளைஞனுக்கு காயம்



அளவெட்டி டச்சு வீதி ஓமான் சந்திப்பகுதியில் மோட்டார் சைக்கிளும் துவிச்சக்கரவண்டியும் மோதி விபத்துக்குள்ளாகின. டச்சு வீதியில் வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் காட்டுத்துண்டிப்பகுதியில் இருந்து வந்த துவிச்சக்கர வண்டியம் மோதிக் கொண்டதால் இவ் விபத்து ஏற்பட்டது. இவ்விபத்தின் போது மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த பெண் காலில் சிறு காயமடைந்துள்ளதுடன் துவிச்சக்கரவண்டியில் வந்த காட்டுத்துண்டி அளவெட்டி மேற்கைச் சேர்ந்த சண்முகராசா சதுர்சன் (வயது -16) என்பவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனமதிக்கப்பட்டுள்ளார். (இ-23)

## சிறுவர் இல்லத்தில் தகராறு; இளைஞனுக்கு மறியல்

சிறுவர் இல்லத்தில் தகறாலில் ஈடுபட்ட இளைஞனை நாளை மறுதினம் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதவான் எஸ். யூட்சன் உத்தரவிட்டார். இச்சம்பவம் கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்றது. கடந்த 2016ஆம் ஆண்டு 14 வயதுச் சிறுமியும் 21 வயது இளைஞனும் காதல் திருமணம் செய்யமுற்பட்டனர். பெண்ணின் பெற்றோர்தெல்லிப்பழைப்பொலிஸ் நிலையத்தில் வழங்கிய முறைப்பாட்டினை அடுத்து ஏழாலையைச் சேர்ந்தகுறித்த இளைஞனை கைது செய்து மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்திய போது 45 நாட்கள் தடுத்து வைக்கப்பட்டு பின் பிணையில் விடுவிக்கப்பட்டார். பெண் சிறுவர் இல்லத்தில் சேர்க்கப்பட்டார். பின்னர் மார்ச் மாதம் குறித்த இளைஞன் அப்பெண் தங்கியுள்ள சிறுவர் இல்லத்திற்குச் சென்று தகராறில் ஈடுபட்டார். குறித்த பெண்ணின் பெற்றோர் மீண்டும் மல்லாகம் நீதிமன்றில் முறைப்பாடு செய்திருந்தனர். குறித்த இளைஞனை நீதிமன்றில் முற்படுத்துமாறு பணித்தமைக்காக இளைஞனை தெல்லிப்பழைப் பொலிஸார் கைது செய்து மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தினர். மல்லாகம் நீதிமன்ற நீதவான் எஸ்.யூட்சன் குறித்த இளைஞனை நாளை மறுதினம் 28 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (இ-3,23)



சுற்றுச் சூழலை பாதுகாப்பதற்கும் பொலித்தீன் பாவனையை இல்லாது ஒழிப்பதற்குமான நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நெல்லியடி நகர்ப் பகுதியில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கரவெட்டி பிரதேச செயலர் ச. சிவசிறி, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைச் செயலாளர் வினோராஜ், வட மாகாண சபை உறுப்பினர் சி.அகிலதாஸ், வர்த்தக சங்கச் செயலர் சுரேரஞ்சன், கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி யோகநாதன் மற்றும் கரவெட்டி சுகாதார உத்தியோகத்தர் கள், மாணவர்கள், கிராம சேவையாளர், பொதுமக்கள் ஆகியோரின் பங்களிப்புடன் நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட பிளாஸ்ரிக் பொருட்கள் கரவெட்டி பிரதேச சபையிடம் ஒப்படைக்கப்பட்டது.

(படங்கள்:-மகாலிங்கம்)

## சட்டவிரோதமாக மணல் அகழ்வு; சாரதிக்கு 50,000 ரூபா அபராதம்

. சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட ஹன்டர் சாரதி ஒருவருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி நளினி கந்தசாமி உத்தர விட்டார்.

சட்டவிரோத மணல் அகழ்ந்து அதனை எடுத்து வந்த போது குறித்த நபரை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டதன் அடிப்படையில் 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் மணலையும் பறிமுதல்செய்யுமாறு நீதிபதி உத்தரவிட்டார். (இ-60)

## தேனில் கலப்படம் ரூ.3000 அபராதம்

நெல்லியடி நகரில் கலப்படம் செய்த தேனை விற்பனை செய்தவருக்கும் அதை வாங்கி வர்த்தக நிலையத்தில் வைத்திருந்தவருக்கும் தலா 3000 ரூபா வீதம் அபராதம் விதித்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி நளினி கந்தசாமி உத்தரவிட்டார். கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் வர்த்தக நிலையம் ஒன்றில் மரீனா தேன் கண்டுபிடிக்கப்பட்டது.

பகுப்பாய்வில் அது கலப்படம் செய்யப்பட்ட தேன் எனத் தெரிய வந்ததையடுத்து கடையில் வைத்திருந்த வர்த்தகருக்கும் அதனை விற்றவருக்கும் கடந்த வியாழக்கிழமை நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் இருவருக்கும் தலா 3000 ரூபா அபராதம் விதித்து நீதிபதி உத்தரவிட்டார். (இ-60)


## விநியோகஸ்தர்கள் தேவை

கடந்த 26 வருடங்களாக தகவல் தொழில்நுட்ப மற்றும் வலுசக்தி சார்ந்த உற்பத்தி பொருட்களை இறக்குமதி மற்றும் சந்தைப்படுத்தும் நாங்கள், எமது வியாபார பங்குதாரர்களுடன் நன்மதிப்பையும் நல்லுறவையும் பேணி வருகிறோம்.

எம் விநியோகஸ்தர்கள் தனிமனிதர்களாய் தொடங்கிய அவர்களது வலையமைப்பு இன்று 25 இற்கும் மேற்றப்பட்ட பணியாளர்களுடன் வெற்றிகரமாக இயங்கி வருகிறது.

அந்தவகையில் INDOASIAN உற்பத்தி பொருட்களின் (mcb/rccb) ஏகவிநியோகஸ்தர்களான நாங்கள் எங்கள் வலையமைப்பை விஸ்தரிக்கும் வகையில் நாடு முழுவதும் விநியோகஸ்தர்களை வரவேற்கிறோம்.

தெரிவுசெய்யப்படும் விநியோகஸ்தர்களிடமிருந்து...
01. வங்கிப்பிணை
02. களஞ்சிய வசதி
03. விநியோகஸ்திற்கான வாகனம்
முதலியவற்றை எதிர்பார்க்கிறோம்

மேலதிக தகவல்களுக்கு
077 2 919 046 அழைக்கவம்

INDOASIAN MAKES SENSE
Debug Group of Companies
(சு-81)


## மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

கச்சேரி நல்லூர் வீதி, பாணன்குளம் நாச்சி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

இதனை முன்னிட்டு நாளை திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு கச்சேரி நல்லூர் வீதியுள்ள மூத்தவிநாயகர் ஆலயத்திலிருந்து கொடிச்சீலை தேரில் எடுத்துவரப்படும்.

இதேவேளை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி மாலை 6 மணிக்கு சப்பறத் திருவிழாவும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும், 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (இ-3)


### வீட்டுப் பணியாளர் தேவை

யாழ்ப்பாணம் நயினாதீவில் உள்ள வீடு ஒன்றில் தங்கியிருந்து வேலை செய்யக் கூடிய வீட்டுப் பணியாளர் (ஆண்/பெண்) தேவை. வயதெல்லை 55 தொடக்கம் 70. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு :
077 169 7816
(8402)

### வீடு வாடகைக்கு

கந்தர்மடம் சந்தியிலிருந்து 100M துூரத்தில் இந்து மகளிர் பாடசாலைக்கு அண்மையில் மூன்று அறைகள், ஹோல், சமையலறை, இணைந்த குளியலறை, கழிப்பறையுடன் கூடிய வீடு சுத்த சைவ போஜனகாரர்களுக்கு மட்டும் சித்திரை மாதம் முதல் வாடகைக்கு தரப்படும்.

நேரில் தொடர்பு கொள்ளவும்.
வாகீஸ்வர சர்மா, கை.தொ.இல.
077 442 4227, 076 805 1637
(8400)






One Week Course - Full Time

வேலை வாய்ப்புடனான

**Video Editing**

With DSLR Camera Training

DMI COMPUTER EDUCATION

Int. to Digital Video, Adobe Premiere cc, Adobe Photoshop cc
Pinnacle Studio, After effects, Adobe Audition cc, Studio Project
Advance Video editing
Visual Effect DSLR Camera HD Video editing

Free
# Softwares
# Effect plugins
# Background Video

(7904)

**DMI COMPUTER EDUCATION**

| | | | | |
|---|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, | M.M.V. வீதி, | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் | No.19, A9 வீதி, |
| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
| 021 222 4403 | 021 226 2470 | 021 227 0775 | 021 224 1970 | 021 228 5655 |




## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா:செவ் 4 இல்<br>தகைமை/தொழில்:A/Lசுவிஸ் NOT PR<br>தொ.இ: B/7122 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா:செவ் 8 இல்<br>உயரம்: 161cm<br>தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/7114 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>c a uk ; 168CM<br>தகைமை/தொழில்:கனடாகுடியுரிமை<br>தொ.இ: B/7125 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா:செவ் 8 இல்<br>உயரம்: 4'3"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/7117 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 69 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BA/ அரசதொழில்<br>தொ.இ: B/7128 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/7118 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/Lபிரான்ஸ் PR<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/7129 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 39 சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/7123 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

## சிறைச்சாலைகளுக்கு இனி குண்டுதுளைக்காத பேருந்து



(கொழும்பு)

சிறைவைக்கப்படும் குற்றவாளிகள் மற்றும் பாதாளக் குழு உறுப்பினர்களைக் கொண்டு செல்வதற்காகச் சிறைச்சாலை திணைக்களத்தினால் குண்டு துளைக்காத பேருந்துகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

கேகாலை சிறைச்சாலையின் உதவி கண்காணிப்பாளரின் எண்ணக்கருவுக்கு அமைய, சிறைச்சாலை பாவனைக்காக இருந்த பேருந்தை நவீனமயப்படுத்தி, குண்டுதுளைக்காத வகையில் குறித்த பேருந்து வடிவமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பேருந்து ஒன்றை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதாயின் சுமார் 20 இலட்சம் வரை செல்வாகும் எனவும், இந்த பேருந்தை நவீனமயப்படுத்த 7 இலட்சம் ரூபாய் மாத்திரமே செலவானதாகவும் சிறைச்சாலை அமைச்சின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். (இ-7)


## பிரேரணை அமுலாக்கத்தை கண்காணிக்க

# ஐ.நா.சபை அதிகாரிகள் குழு 6 தடவைகள் இலங்கை வரும்

(கொழும்பு)

இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் பிரகாரம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை அலுவலகத்தின் அதி காரிகளைக் கொண்ட குழுவினர் ஆறு தடவைகள் இலங்கைக்கு விஜயம் மேற் கொள்ளவுள்ளனர்.

மேலும் இந்த புதிய பிரேரணையை அமுலாக்கம் செய்வதற்காக 3 இலட்சத்து 62 ஆயிரம் டொலர்கள் தேவைப்படுவதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை செயலகம் அறிவித்துள்ளது.



இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.


இலங்கை தொடர்பாக ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் பிரகாரம் அந்தப் பிரேரணையை நிறைவேற்றுவதற்காக 3 இலட்சத்து 62 ஆயிரம் டொலர்கள் தேவைப்படுகின்றன.

மேலும் இலங்கை எவ்வாறு 2015 ஆம் ஆண்டு பிரேரணையை மதிப்பீடு செய்வதற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமை அலுவலகத்தின் அதிகாரிகளைக் கொண்ட குழுவினர் ஆறு தடவைகள் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர். 14 நாட்களில் இந்த விஜயங்கள் அமையவுள்ளன.

கடந்த வியாழக்கிழமை இலங்கை தொடர்பான பிரேரணை வாக்கெடுப்பின்றி ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# விமலின் உண்ணாவிரதத்திற்கு வயிறு கோளாறுதான் காரணம்

## சரத் பொன்சேகா சீண்டல்



(கொழும்பு)

உணவில் ஏற்பட்ட வயிறு கோளாறு காரணமாகவே விமல் உண்ணாவிரதம் இருக்கின்றார் என அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

விமல் வீரவன்சவின் உண்ணாவிரதம் தொடர்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், உணவு ஒவ்வாமை ஏற்பட்டால் நாமும் இரண்டு மூன்று தினங்களுக்கு உண்ணாமல் இருப்போம். அது ஒன்றும் ஆபத்தான விடயம் அல்ல.



கடந்த சில மாதங்களுக்கு முன்னர் எனக்கும் இவ்வாறு வயிறு கோளாறு ஏற்பட்டது. அதனால் நானும் உண்ணாமல் இருந்தேன். ஆனால் நீர் ஆகாரங்கள் எடுத்துக் கொண்டேன்.

அவ்வாறான ஒரு செயலையே இப்போது விமலும் செய்து கொண்டு வருகின்றார்.

இது ஒன்றும் அவ்வளவு பெரிய ஆபத்தான விடயம் அல்ல.

அதேபோன்று மகிந்த ராஜபக்ஷவிற்கு உள்ள மிகப் பெரிய பிரச்சினை கடந்த காலத்தை மறந்து விடுவதே எனவும் சரத் பொன்சேகா தெரிவித்தார். (இ-7)

# விமலின் பிணை மனு தீர்ப்பு ஒத்திவைப்பு

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவின் பிணை மனு மீதான தீர்ப்பு எதிர்வரும் ஏப்ரல் 14ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தனது மகள், உடல் நலக் குறைவு காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதால் தனக்கு பிணை வழங்குமாறு கோரி, மனுத்தாக்கல் செய்துள்ளார். எனினும் இந்த மனு மீதான தீர்ப்பை கோட்டை நீதவான் நீதிமன்ற நீதவான், ஒத்திவைத்துள்ளார்.

இதேவேளை, தன்னை பிணையில் விடுதலை செய்யுமாறு கோரிக்கை விடுத்து, சிறைச்சாலையில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 30 | 80 | 50 | 40 | 100 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 80 | 100 | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 90 | 100 | 120 | 200 | 80 |
| தக்காளி | 120 | 100 | 90 | 100 | 100 | 120 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 50 | 60 | 80 | 80 | 70 |
| கோவா | 40 | 100 | 20 | 40 | 40 | 80 | 40 |
| கரட் | 100 | 100 | 80 | 70 | 70 | 160 | 70 |
| பூசணி | 60 | 80 | 30 | 60 | 60 | 80 | 60 |
| புடோல் | 100 | 80 | 50 | 120 | 60 | 80 | 70 |
| வாழைக்காய் | 80 | 80 | 50 | 50 | 60 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 140 | 80 | 60 | 80 | 120 | 70 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 75 | 90 | 90 | 100 | 90 |
| பாகற்காய் | 140 | 300 | 150 | 280 | 180 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 150 | 80 | 100 | 80 | 160 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | - | 60 | 80 | 100 | 100 |
| பயற்றங்காய் | 160 | 160 | 110 | 100 | 80 | 160 | 140 |
| லீக்ஸ் | 80 | 100 | 60 | 100 | 80 | 120 | 80 |
| பீற்றூட் | 60 | 100 | 40 | 60 | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 180 | 200 | 80 | 160 | 120 | 160 | 100 |
| முருங்கைக்காய் | 300 | 600 | 400 | 400 | 250 | 400 | 400 |
| போஞ்சி | 200 | 200 | 50 | 240 | 160 | 200 | 120 |
| கத்தரிதம்புள்ள | 70 | 20 | 10 | 60 | - | 40 | 80 |
| கீரை - 1பிடி | 50 | 20 | 20 | 30 | 30 | 40 | 40 |
| தேசிக்காய் | 100 | 80 | 100 | 100 | 70 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 80 | 50 | 70 | 70 | 50-60 | 60 |
| இராசவள்ளி | 200 | 300 | 180 | 200 | 200 | 200 | 120 |
| வெங்காயப்பூ | 160 | 100 | 40 | 100 | 100 | 200 | 60 |
| முள்ளங்கி | 60 | 100 | 25 | 60 | 60 | 80 | 70 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 15 | 30 | 40 | 20 | 40 |
| வல்லாரை | 10 | 20 | 15 | 20 | 20 | 20 | 25 |
| ஈரப்பலா | - | 60 | 50 | 60 | 50 | 100 | 100 |

# இலங்கை - ரஷ்ய தலைவர்களுக்கிடையில் இருதரப்பு நல்லுறவுக்கான புதிய அத்தியாயம்



(கொழும்பு)

இலங்கை மற்றும் ரஷ்ய தலைவர்களுக்கிடையில் இருதரப்பு நல்லுறவுக்கான புதிய அத்தியாயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ரஷ்ய வெளி விவகார பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் ரஷ்ய தலைவர்களுக்கு இடையிலான நட்புறவு மேலும் பலமடைந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ரஷ்யாவுக்கு விஜயத்தை மேற்கொண்டதன் மூலம் இரு நாடுகளுக்கு இடையிலான இராஜதந்திர உறவுகள் மேலும் பலமடைந்துள்ளன. இரு நாடுகளுக்கும் இடையில் முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டுள்ளன. இது இலங்கைக்கும், ரஷ்யாவுக்கும் இடையில் நிலவும் இருதரப்பு நல்லுறவின் புதிய அத்தியாயமாக கருதலாம் என்று திரு மகிய லோவ் தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் ரஷ்ய நாடுகளுக்கிடையில் இருதரப்பு தொடர்புகள் ஆரம்பிக்கப்பட்டு 60 வருடங்கள் பூர்த்தியடைவதை முன்னிட்டும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ரஷ்யாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை கௌரவிக்கும் வகையிலும் ரஷ்யாவின் Ritz Ritz Carlton ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட வைபவத்தின் போதே ரஷ்ய பிரதியமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# இலங்கைத் தமிழர்களின் உரிமைகளை பாதுகாக்க இந்தியா கடமைப்பட்டுள்ளது

## அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் சுஷ்மா தெரிவிப்பு

(சென்னை)

போரின் போது, நிராயுதபாணிகளான தமிழர்களுக்கு எதிராக இலங்கை படையினர் இழைத்ததாக குற்றம் சாட்டப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பாக இந்தியா கவலையையும், வலியையும் உணர்கிறது என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார்.

இந்திய நாடாளுமன்றத்தின் மேலவையான ராஜ்ய சபாவில் நேற்று முன்தினம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் டி.ராஜா, அண்டை நாடான இலங்கையில் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களை நிறுத்தி, இலங்கைத் தமிழர்களின் நலன்களை பாதுகாப்பது தொடர்பான இந்திய அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"இலங்கையில் உள்ள தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு இந்தியா கடமைப்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தை வேதனையுடன் எழுப்பியுள்ள உறுப்பினர்களுடன் அதே வலியுடன், அரசாங்கமும் தன்னை இணைத்துக் கொள்கிறது.

இலங்கையில் உள்ள தமிழர்களின் நலன்களை பாதுகாப்பதே எமது நோக்கம்.

இதனை கட்டாயப்படுத்தி அல்லது நட்பு நாடுகளுடன் இணைந்து செயற்பட்டு என இரண்டு வழிகளில் அடைய முடியும்.

இந்தப் பிரச்சினை எழுந்து கொண்டிருக்கும் போது, ஒருமித்த நிலையை உடைத்துக் கொள்வதில்லை என்று முடிவு செய்துள்ளோம். அதனுடன் இணைந்து செல்வோம்.

முன்னைய அரசாங்கங்கள் இலங்கைத் தமிழருக்கு எதிரான மனித உரிமை மீறல்களை நிறுத்துமாறு பிரச்சினை எழுப்பியிருந்தன. ஆனால், எந்தவொரு இருதரப்பு கூட்டங்களிலும், இந்த விவகாரம் குறித்து பிரச்சினை எழுப்பப்பட்டதில்லை.

திரும்பத்திரும்பக் கொண்டு வரப்படுவதால், இலங்கைத் தமிழர்களின் கரிசனை தொடர்பான தீர்மானம் குறித்து எமக்கு திருப்தியில்லை.

ஐ.நா ஒரு காலவரம்பை நிர்ணயித்துள்ளது, அதற்குள் இலங்கை தனது கடப்பாட்டை நிறைவேற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இந்தியாவின் அணுகுமுறையானது, ஆக்கபூர்வமானதும், ஒத்துழைப்பு இணக்கப்பாட்டுடனும், மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் ஊக்குவிக்கவும் முடியும் என்ற உறுதியான நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்துள்ளது.

தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியுள்ள இலங்கை, இரண்டு ஆண்டுகளுக்குள் தமிழர்களின் நலன்களை பாதுகாப்பது தொடர்பான வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாக உறுதியளித்துள்ளது.

ஒரு பக்கத்தில் இது ஒரு நம்பிக்கை. மற்றொரு பக்கத்தில் ஐ.நாவின் முன்பாக அளித்துள்ள வாக்குறுதியாகும்.

அங்கு சில சாதகமான மாற்றங்கள் கூட நிகழ்ந்துள்ளன. அதில் மிகப் பெரியது, இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவராக தமிழ்க் கட்சியின் தலைவர் இருக்கிறார்.



இலங்கை, இந்தியாவின் நெருங்கிய அண்டை நாடு. அந்த நாட்டின் முன்னேற்றங்களில் இந்தியா ஈடுபாடு காட்டாமல் இருக்க முடியாது.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் சமத்துவம், பாதுகாப்பு, நல்லிணக்கத்துடனும், செழிப்பு மற்றும் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையிலும், இலங்கைத் தமிழர்கள் உள்ளிட்ட அனைத்து மக்களையும் உள்ளடக்கிய, பல மொழி, பல இன மற்றும் பல மத குணாம்சத்தை பாதுகாக்கும் இலங்கையின் முயற்சிகளை இந்தியா எப்போதும் ஆதரித்து வந்துள்ளது.

மதிநுட்பத்துடனும், அதன் தலைமைத்துவத்தின் அரசியல் விருப்புடனும், மக்களின் ஆதரவுடனும், இலங்கை உண்மையான நல்லிணக்கத்தையும் அபிவிருத்தியையும் அடையும் என்று நம்புகிறோம்.

நல்லிணக்கப் பொறிமுறைக்கான கலந்தாய்வு செயலணியின் அறிக்கையைத் தழுவியதாகவும், காலவரம்புடன் கூடிய இடைக்கால நீதிக்கான விரிவான மூலோபாயம் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமை அறிக்கையில் பட்டியலிடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# சீனாவின் நிதி, நிபுணத்துவ உதவியுடன் இலங்கையில் ஊடகப் பயிற்சி அகடமி

(கொழும்பு)

இலங்கையில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள ஊடக பயிற்சி அகடமிக்கு நிதியுதவியையும் நிபுணத்துவ ஆற்றலையும் வழங்குவதற்கு சீனா முன்வந்துள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பான இலங்கையின் ஊடகத்துறை அமைச்சருக்கும் சீன அரச பிரதிநிதிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன.

சீனா வெளியீட்டு மற்றும் ஊக்குவிப்பு சமூகத்தின் தலைவர் ஷிசு சூ தலைமையிலான குழுவினருடன் இந்தப் பேச்சுக்கள் இலங்கை நாடாளுமன்ற வளாகத்தில் இடம்பெற்றுள்ளன.

இதன் போதே, இலங்கையில் புதிதாக அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள ஊடக பயிற்சி அகடமிக்கான நிதியுதவியையும் நிபுணத்துவ ஆற்றலையும் வழங்குவதற்கு சீனா முன்வந்துள்ளது. (இ-7)

# உலங்குவானூர்தி பராமரிப்பு நிலையத்தை இலங்கையில் அமைக்க ரஷ்யா திட்டம்

(கொழும்பு)

இலங்கையில் பயன்படுத்தப்படும் ரஷ்யத் தயாரிப்பு உலங்குவானூர்திகளின், பராமரிப்பு சேவை நிலையம் ஒன்றை இலங்கையில் அமைப்பதற்கான யோசனையை ரஷ்யா முன்மொழிந்துள்ளது.

இராணுவ தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான ரஷ்யாவின் சமஷ்டி சேவை பிரதித் தலைவர் மிகெய்ல் பெருக்கோவ் இந்த முன்மொழிவைச் செய்துள்ளதாக ரஷ்யாவின் ஸ்புட்னிக் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.



மலேசியாவில் நடைபெறும் லிமா - 2017 இராணுவ கண்காட்சியில் பங்கேற்றுள்ள இராணுவ தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான ரஷ்யாவின் சமஷ்டி சேவை பிரதித் தலைவர் மிகெய்ல் பெருக்கோவ் இதுதொடர்பாக தகவல் வெளியிடுகையில், உலங்குவானூர்தி பராமரிப்பு சேவை நிலையம் ஒன்றை அமைப்பதற்கான திட்டத்தையும், கவசவாகனங்களுக்கான உதிரிப் பாகங்களை வழங்குவதற்கான திட்டம் ஒன்றையும் இலங்கையிடம் சமர்ப்பித்திருப்பதாக தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 12 எம். ஐ-8 மற்றும் எம்.ஐ-17 போக்குவரத்து உலங்குவானூர்திகள் 6, எம்.ஐ-24 பி தாக்குதல் உலங்குவானூர்திகள் மற்றும் 36 பி.எம்.பி-காலாட்படை சண்டை வாகனங்கள் மற்றும் 50 பிரிஆர்-80 துருப்புக்காவி கவசவாகனங்கள் என்பன தற்போது பயன்பாட்டில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஹைரம் ஒரு தகவல்

### திருமண அன்பளிப்பு

அமெரிக்கக் கோடீஸ்வரர் கார்னீகி. பெண்கள் கல்லூரி ஒன்றில் சொற்பொழிவாற்றச் சென்றிருந்தார். தம் முன்னே அமர்ந்திருக்கும் பெண்களைக் கவனித்தார். அத்தனை பேரும் இளம் பெண்கள். அழகுத் தோற்றமுடன் அவர்கள் காட்சி அளித்தார்கள்.

அவர்களைப் பார்த்து கார்னீகி, நீங்கள் எல்லோரும் மணப் பெண்களைப் போல் தோற்றம் அளிக்கிறீர்கள். உங்களில் யாரேனும் திருமணம் செய்து கொள்ள விரும்புவீர்களாயின் எனக்கு அறிவியுங்கள். அதற்கான உதவியை நான் செய்கிறேன் எனத் தெரிவித்தார்.

அவர் இவ்வாறு கூறியதுதான் தாமதம். அடுத்த நாள் அக்கல்லூரிப் பெண்களிடமிருந்து கட்டுக்கட்டாகக் கடிதங்கள் வரத் தொடங்கின. அவற்றில் ஒவ்வொரு பெண்ணும் தான் காதல் கொண்டுள்ள இளைஞன் பெயரைத் தெரிவித்து, அதற்கு உதவியைக் கோரியிருந்தார்கள்.


கார்னீகி ஒவ்வொருவருக்கும் திருமண அன்பளிப்பு உதவியாக 500 டொலர் காசோலைச் சீட்டை அனுப்பி வைத்தார். மணமான பெண் ஒருத்தி இவருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தாள். அவள் அக்கடிதத் தில் தனக்குத் திருமணம் ஆகிவிட்டதாயும் இவ்வாறு கார்னீகியின் உதவி கிடைக்குமெனத் தெரிந்திருந்தால் தனது திருமணத்தைக் காலம் தள்ளி வைத்திருக்கக் கூடுமென்றும் தெரிவித்து ஆற்றாமைப்பட்டிருந்தாள்.

கார்னீகி அவளை ஏமாற்றத்துக்குட்படுத்தவில்லை. அவளுக்கும் 500 டொலருக்கு ஒரு காசோலை அனுப்பி வைத்தார்.

கவிஞர் தே.ப.பெருமாள்

# இலங்கைக்கு ரஷ்யாவின் ஜிபாட் 3.9 போர்க்கப்பல்கள்

## இறுதிக்கட்டத்தில் பேச்சுக்கள்



இலங்கைக்கு ஜிபாட் 3.9 (Gepard 3.9) ரகத்தைச் சேர்ந்த போர்க்கப்பல்களை வழங்குவது தொடர்பான உடன்பாடு குறித்த பேச்சுக்கள் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

மலேசியாவின் லங்காவி நகரில் நடந்து வரும் லிமா-2017 எனப்படும் அனைத்துலக கடல்சார் மற்றும் விமான கண்காட்சியில் பங்கேற்றுள்ள, இராணுவ தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான ரஷ்யாவின் சமஷ்டி சேவை பிரதித் தலைவர் மிகெய்ல் பெருக்கோவ், ரஷ்ய ஊடகமான ஸ்புட்னிக்கிற்கு இது தொடர்பான தகவலை வெளியிட்டுள்ளார்.

இலங்கை தரப்புடன் இணைந்து வரைவு உடன்பாடு தயாரிக்கப்பட்டுள்ளது. சில தொழில்நுட்ப விபரங்கள் பற்றிய கலந்துரையாடல்கள் மாத்திரம் இறுதிக்கட்டத்தில் இருக்கின்றன என்று மிகெய்ல் பெருக்கோவ் தெரிவித்துள்ளார்.

ஜிபாட் 3.9 போர்க்கப்பல்கள், போர்க்காலத்தில், எதிரிகளின் விமானங்கள், கப்பல்கள், நீர்மூழ்கிகளை எதிர்த்துப் போரிடக் கூடியவை. பாதுகாப்பு வழங்கல், ரோந்துக் கடமைகள், தரையிறக்க நடவடிக்கைக்கான சூட்டாதரவு, கண்ணிவெடிகளை விதைத்தல் போன்றவற்றில் இந்தக் கப்பல்களை ஈடுபடுத்த முடியும்.

வியட்நாமுக்கு இரண்டு ஜிபாட் 3.9 போர்க்கப்பல்களை 2011ஆம் ஆண்டு ரஷ்யா வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வெலிவேரிய துப்பாக்கிச் சூடு; 3 ராணுவ அதிகாரிகள் கைது

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் வெலிவேரிய, ரதுபஸ்வெலவில் சுத்தமான குடிநீருக்காக போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி 3 பேர் கொல்லப்படவும், 30 பேர் காயமடையவும் காரணமாக இருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் இலங்கை இராணுவ அதிகாரிகள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

2013 ஆம் ஆண்டு ஓகஸ்ட் முதலாம் திகதி நடந்த இந்த சம்பவம் தொடர்பாக, வாக்குமூலம் அளிப்பதற்காக இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த ஸ்ராவ் சார்ஜன்ட் சிறிசேன, கோப்ரல் லலித்கே, கோப்ரல் திலகரத்ன ஆகியோர் நேற்றுமுன்தினம் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

அங்கு நடத்தப்பட்ட விசாரணைகளை அடுத்து மூன்று இராணுவ அதிகாரிகளும் கைது செய்யப்பட்டு, கம்பஹா நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர். இதையடுத்து மூவரையும், ஏப்ரல் 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அதேவேளை, இந்தச் சம்பவத்தின் போது, இராணுவத்தினருக்கு சுடுமாறு உத்தரவிட்ட பிரிகேடியர் தேசப்பிரிய குணவர்த்தன உள்ளிட்ட உயர் அதிகாரிகளைக் கைது செய்யும் நடவடிக்கைகள் இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ரூபாவின் பெறுமதியை மத்திய வங்கி நிர்வகிப்பதில்லை-ஆளுநர் விளக்கம்



டொலருக்கு எதிராக ரூபாவின் பெறுமதியை நிர்வகிப்பது மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படுவதில்லை என்று மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி கூறியுள்ளார்.

மத்திய வங்கியினால் அது நிர்வகிக்கப்படுமானால் அந்நியச்செலாவணி வீணாக செலவிடப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி இவ்வாறு கூறியுள்ளார்.

இதுதவிர செலாவணி கையிருப்பு வீழ்ச்சியடைவது, நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய நெருக்கடி ஏற்படுவதற்கு காரணமாக அமையும் என்று அவர் தெரிவித்தார். (இ-7)

# தேசிய சேவை மேன்மை விருது



இலங்கையில் இந்து சமய அறநெறிக் கல்விக்கு உன்னதமான பங்களிப்பைச் செய்தவர்களை தெரிவு செய்து வருடந்தோறும் வழங்கப்பட்டு வரும் தேசிய சேவை மேன்மை விருது-2016 கிளிநொச்சி மாவட்டத்தில் ஓய்வுநிலை சைவசமய ஆசிரிய ஆலோசகரான திருமதி சோமசேகரம் செல்வராணிக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்து சமய அலுவலகள் அமைச்சினால் கொழும்பு பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வின் போதே கிளிநொச்சியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சோ. செல்வராணிக்கு அறநெறிக் கல்விச் சேவையை பாராட்டி இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. (இ-312)

# பாராளுமன்ற பிரதிநிதிகளின் வாகனக் கொள்வனவிற்காக 7808 கோடிரூபா நிதிகோரல்

## குறை நிரப்புப் பிரேரணை சபையில்

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தனின் வீட்டினை புனரமைப்பு செய்வதற்கு 2 கோடியே 15 இலட்சம் ரூபா நிதி கோரப்பட்டுள்ளது.

அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களுக்கான வாகனங்கள் கொள்வனவு செய்வதற்கான குறைநிரப்பு பிரேரணை நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இதன் போதே இரா.சம்பந்தனின் வீட்டினை புனரமைப்பு செய்வதற்கு குறித்த நிதி கோரப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில்நேற்று முன்தினம் பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலகவால் குறித்த பிரேரணை சபையில் முன்வைக்கப்பட்டது.

குறித்த குறைநிரப்பு பிரேரணையின் பிரகாரம்,

கல்வி இராஜாங்க அமைச்சர் வி.ராதாகிருஷ்ணனுக்கு 3 கோடியே 98 இலட்சம் ரூபா,

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவிற்கும் பிரதி அமைச்சர் பைசல் முஸ்தபாவிற்கும் 8 கோடியே 20 இலட்சம் ரூபாவும்,

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் நவீன் திஸாநாயக்கவிற்கு 4 கோடி, விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் எம்.எம். ஹரீஸிற்கு 3 கோடியே 82 இலட்சம்,

பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத் துறை பிரதி அமைச்சர் கருணாரத்ன பரணவிதாரணவிற்கு 4 கோடியே 30 இலட்சம் ரூபா,

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் றிசாத் பதியுதீன் மற்றும் பிரதி அமைச்சருக்கு 8 கோடியே 60 இலட்சம் ரூபா, பிரதி அவை தலைவர் செல்வம் அடைக்கலநாதனுக்கு 4 கோடியே 20 இலட்சம் ரூபாவுமாக மொத்த வாகன கொள்வனவுக்காக 37 கோடியே 97 இலட்சம் ரூபா நிதி கோரப்பட்டுள்ளது.

இவ்வாறு அபிவிருத்தி மற்றும் வாகன கொள்வனவிற்காக 7808 கோடியே 51 இலட்சத்து 79 ஆயிரத்து 213 ரூபா கோரிக்கை விடுத்து குறை நிரப்பு பிரேரணை சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# தமிழும் சிங்களமும் அரச மொழிகளாக இருக்க வேண்டும்

## அமைச்சர் மனோ தெரிவிப்பு



(கொழும்பு)

சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளும் அரச மொழிகளாக இருக்க வேண்டும் என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.


பல மொழிகளை பேசும் இயலுமை மக்களுக்கு இருப்பது முக்கியமானது எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது நாட்டு மக்களுக்கு இடையில் நெருக்கமான புரிந்துணர்வை ஏற்படுத்த உதவியாக இருக்கும் எனவும் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார். (இ-7)

### வெலிக்கடை பகுதியில் விசேட சுற்றிவளைப்பு 25 பேர் சிக்கினர்

வெலிக்கடை பகுதியில் கஞ்சா மற்றும் ஹெரோயின் வைத்திருந்த 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸார் நேற்று மேற்கொண்ட திடீர் விசேட சுற்றிவளைப்பின் போதே குறித்த 25 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில் கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# விமல் வீரவன்சவின் உயிருக்கு ஆபத்தாம்



வெலிக்கடை சிறைச்சாலையில் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நேற்று நான்காவது நாளாகவும் போராட்டத்தை முன்னெடுத்தார்.

இந்த நிலையில், விமல் வீரவன்சவின் உடல் நிலை குறித்து வைத்தியர்கள் நேற்று முன்தினம் இரவு பரிசோதித்துள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பத்ம உதேசாந்த தெரிவித்துள்ளார்.

விமல் வீரவன்சவின் உயிர் ஆபத்தான நிலையில் உள்ளதாகவும், அதனால், அவர் தொடர்பில் எடுக்கவேண்டிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என பத்ம உதே சாந்த அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, விமல் வீரவன்சவின் பிணை கோரிக்கை மனு மீதான தீர்ப்பு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 03 ஆம் திகதி வழங்கப்படவுள்ளதாக கொழும்பு கோட்டை நீதவான் நேற்று முன்தினம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

### 4 ஆம் நாளாகவும்

# பன்னங்கண்டி மக்களின் போராட்டம் தொடர்கின்றது





(பரந்தன்)

கிளிநொச்சி பன்னங்கண்டி மக்கள் தொடர்ந்தும் நான்காவது நாளாக நேற்றும் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இப் போராட்டம் கடந்த 22 ஆம் திகதி ஆரம்பமாகி இரவு- பகலாக நடைபெற்று வருகின்றது.

இதில் சரஸ்வதி, கமம் ஜொனிக் குடியிருப்பு ஆகிய பிரதேச மக்கள் தமது குடியிருப்புக் காணிக்கான ஆவணம் மற்றும் அடிப்படை வசதிகள், நிரந்தர வீட்டுத் திட்டம் என்பன இதுவரை கிடைக்கவில்லை.


எனவே இவ்வளவு காலமும் அடிப்படை உரிமை இல்லாத மக்களாக வாழ்ந்து விட்டோம். இனியும் வாழ முடியாது. தயவு செய்து எமக்கான காணி உரிமத்தை வழங்குங்கள் எனக்கோரி கவனஈர்ப்புப் போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளனர்

அத்துடன் தமக்கான காணி உரிமம் கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர். (2-15-312)




# ‘பலதரப்பு செயற்பாட்டின் ஊடாக மோதல் திரிபுக்கான முனைப்பு’

## வவுனியாவில் நேற்று கலந்துரையாடல்



இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் “பலதரப்பு செயற்பாட்டின் ஊடாக மோதல் திரிபுக்கான முனைப்பு” எனும் செயற்றிட்டத்தை அறிமுகப்படுத்தல் மற்றும் அதன் நோக்கத்தையும் பெறுபேற்றையும் இனங்காணுதல், எதிர்கால செயற்றிட்டங்களை தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் ஒன்று வவுனியா சுவர்க்கா விடுதியில் நடைபெற்றுள்ளது.

இக் கலந்துரையாடல் நேற்று சனிக்கிழமை காலை ஆரம்பமாகி நண்பகல் வரையில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

மூன்று தசாப்தமாக நடைபெற்ற இனரீதியான யுத்தம் முடிவடைந்து 7 வருடங்களை கடந்துவிட்ட நிலையிலும் கூட யுத்தம் காரணமாக ஏற்பட்ட பல சிக்கல்கள் இன்னும் தீர்க்கப்பட வேண்டியுள்ளது.

நடை பெற்று முடிந்த யுத்தம் காரணமாக வடக்கு- கிழக்கில் வாழும் பல குடும்பங்கள் இடம் பெயர்ந்து சிதறிப் போயுள்ளன. இதனால் குடும்பத்தின் பிரதான உழைப்பாளர்களை இழந்த காரணத்தால் தற்போதுள்ள உறுப்பினர்களின் வாழ்க்கை நிலையில் பல சிக்கல் ஏற்பட்டுள்ளன.

இதேவேளை, காணாமல் போனோர் மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் வாழ்வுத் தகவல்களை உறுதிசெய்து கொள்வது பிரதான பிரச்சினையாகும்.

அதுபோல தனிமைப்பட்டுள்ள பிள்ளைகள் மற்றும் பெண்கள் பல்வேறு கஷ்டங்களுக்குள்ளாகும் அவல நிலை காணப்படுகின்றது.

குறிப்பாக எமது நாட்டில் வாழும் பல்லின மக்கள் மத்தியில் கடந்த காலங்களில் அதிகமாக வளர்ந்த நம்பிக்கையீனம், சந்தேகம், அச்சம், மனவிரிசல் முழுமையாக நீங்கி விடவில்லை.

இவை போன்ற பல விடயங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக தீர்க்கமான செயல்முறைகள் தொடர்பாக கலந்துரையாடும் கூட்டமே நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் சர்வ மதத்தலைவர்கள், கிராம மட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பாடசாலைகளின் ஆசிரியர்கள், சமய ஆர்வலர்கள், பல்கலைக் கழக மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டுள்ளனர். (2-15-250)

# 34 நாட்கள் கடந்தும் அரசு மௌனம் காக்கிறது

## கிளிநொச்சியில் தொடர்கிறது போராட்டம்





(பரந்தன்)

கிளிநொச்சியில் முன்னெடுக்கப்படும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டம் 34 ஆவது நாளாக தொடர்கின்றது.

கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று சனிக்கிழமை 34 நாளாக தீர்வின்றி தொடர்கிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடுதலையையும் வெளிப்படுத்தலையும் வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் கடந்த மாதம் 20 ஆம் திகதி அன்று காலை கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட தொடர் கவனயீர்ப்பு போராட்டமே இரவு பகலாக தொடர்கின்றது. (2-312)

# சாதகமான பதில் கிடைத்தால் மட்டுமே போராட்டத்தைக் கைவிடுவோம்

## உறவுகள் வவுனியாவில் ஒருமாத காலமாக உணவுத் தவிர்ப்பில்





(மல்லாவி )

வவுனியா மாவட்டத்தில் இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட நிலையிலும் மற்றும் ஏனைய வழிகளாலும்வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஒன்றிணைந்து தமக்கு தீர்வு கிடைக்கும் வரையில் முன்னெடுத்திருக்கும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்று சனிக்கிழமை 30 ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

“காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக தீர்க்கமான முடிவை தெரிவிக்க வேண்டும், “அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும்”

“பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும்”

ஆகிய மூன்று கோரிக்கைகளை முன்வைத்தே கவனயீர்ப்புப் போராட்டம் நடை பெற்று வருகின்றது .

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரால் வழங்கப்பட்ட உறுதி மொழிக்கு அமைவாக கொழும்பில் இடம் பெற்ற பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்படாத நிலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஒன்றிணைந்து மீண்டும் தமது போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

ஜனாதிபதி அல்லது பிரதமர் அல்லது எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரில் ஒருவர் நேரில் வந்து சாதகமான பதில் வழங்கும் பட்சத்தில் மட்டுமே தமது போராட்டத்தை நிறுத்துவதாகவும், அதுவரை தமது உறவுகளைத் தேடிய போராட்டம் தொடரும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்துள்ளனர். (2-15-250)

# மர்மப்பொருட்கள் குறித்து அவதானம்

## பொலிஸார் எச்சரிக்கை

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவில் உள்ள கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்புக்கு மக்களின் காணிகளை இராணுவத்தினர் கையளித்துள்ள நிலையில், மக்கள் தமது காணிகளில் துப்புரவு வேலைகளைச் செய்த போது வெடி பொருட்கள் நிலத்தில் புதையுண்டு இருப்பதை அவதானித்து விட்டு அது தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையப் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இது தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையப் பொலிஸார் தெரிவிக்கையில்,

இக் காணிகளை இராணுவத்தினர் விடுவித்த நிலையில் அவற்றை மனித நேயக் கண்ணிவெடிப் பொருட்களை அகற்றும் பிரிவினரின் பணி நடைபெற முன்பாக காணிகளுக்குள் உரிமையாளர்கள் சென்று குடியேறியுள்ளதால் இந் நிலை தோன்றியுள்ளதாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந் நிலையில், நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை விடுவிக்கப்பட்ட சில காணிகளில் இருந்து வெடிப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

எனவே பொதுமக்கள் தங்கள் காணிகளை துப்புரவு செய்யும் போது மர்மப் பொருட்களை கண்டால் அதனை பரீட்சித்துப் ப்ார்க்க வேண்டாம் எனவும் கழிவுப் பொருட்களுக்கு தீ மூட்டும் போது மிகவும் அவதானமாக இருக்குமாறும், குறிப்பாக சிறுவர்களை மர்மப் பொருட்களை எடுத்து விளையாடுவதை தடுக்கும் வகையில் அவதானத்துடன் இருக்குமாறு பொலிஸார் இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளார்கள். (2-15)

# வீதியைப் புனரமைக்க மக்கள் கோரிக்கை




பூநகரி – மன்னார் பிரதான வீதியில் பல்லவராஜன் கட்டு சந்தியில் இருந்து வேரவில் கிராமம் வரையான 10 கிலோ மீற்றர் வீதி பயணிக்க முடியாதவாறு சேதமடைந்து காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ் வீதியை வேரவில், கிராஞ்சி, பொன்னாவெளி, பலாலி, வலைப்பாடு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தினமும் பெரும் அசௌகரியங்களுடன் பயணித்து வருகின்றனர். எனவே உரிய தரப்பினர் இவ் விடயத்தில் அக்கறை கொண்டு புனரமைக்க முன் வரவேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-23)

## நில மீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள

# முள்ளிக்குளம் கிராம மக்களை புகைப்படமெடுத்து அச்சுறுத்தல்





மன்னார் மாவட்டத்திற்குட்பட்ட முசலி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட முள்ளிக்குளம் கிராமத்தில் கடற்படையினரால் கையகப்படுத்தப்பட்டு தற்போது கடற்படையினரின் பயிற்சி முகாமாக மாறியுள்ள தமது காணிகளை விடுவிக்கக் கோரியும் மீள்குடியேற்றம் செய்யுமாறு வலியுறுத்தியும் முள்ளிக்குளம் கிராம மக்களின் தொடர் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று மூன்றாவது நாளாகவும் தொடர்கின்றது.

இக் கவனயீர்ப்பு கடந்த 23 ஆம் திகதி முள்ளிக்குளம் கிராமத்திற்கு செல்லும் பிரதான நுழைவாயிலுக்கு முன்பாக ஆரம்பமாகி நேற்றும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில் கடற்படையினர் முகாமை விட்டு வெளியில் வந்து மக்களை தொடர்ச்சியாக புகைப்படம் எடுத்து அச்சுறுத்துவதாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து அருட்தந்தையர்கள், மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள், தொண்டு அமைப்புக்களின் பிரதிநிதிகள், மாகாண சபை உறுப்பினர் வைத்தியர் ஜீ.குணசீலன், மன்னார் நகர சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ்.ஆர்.குமரேஸ், மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் உள்ளிட்ட பலர் நேரடியாகச் சென்று மக்களை சந்தித்து கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற மக்களுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

எனினும் மக்கள் மூன்றாவது நாளாகவும் நேற்று சனிக்கிழமை குறித்த போராட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்த நிலையில் அம்மக்களை அவ்விடத்தில் இருந்து வெளியேற்றும் வகையில் தொடர்ச்சியாக கடற்படையினர் செயற்பட்டு வருகின்றனர் என சுட்டிக் காட்டப்படுகின்றது.

இரவு நேரங்களில் புகைப்படம் எடுத்தல், வீதிக்கு முன் வந்து மக்களை புகைப்படம் எடுத்தல், கடற்படை முகாம் நுழைவாயிலில் அதிகளவான கடற்படையினர் ஒன்று கூடி கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற மக்களை அவதானித்தல், போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற மக்களுக்கு ஆதரவு தெரிவித்து போராட்டம் இடம் பெறும் இடத்திற்கு வருகின்ற பிரதிநிதிகளை புகைப்படம் எடுத்தல், அவர்களின் விபரங்களை பதிவு செய்தல் போன்ற நடவடிக்கைகளை தொடர்ச்சியாக கடற்படையினர் மேற்கொண்டு வருகின்றனர் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும் கடற்படையினர் எவ்வாறான அச்சுறுத்தல்களை தமக்கு கொடுத்தாலும் தாம் போராட்டத்தை கைவிடப்போவதில்லை எனவும், நிலம் மீட்கப்படும் வரை போராட்டம் தொடரும் என கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற முள்ளிக்குளம் மக்கள் தெரிவித்துள்ளனர்.

கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களை சந்தித்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் கருத்து தெரிவிக்கையில்,

தமது நில மீட்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற மக்களின் போராட்டமானது நியாயமானது.

இரண்டாவது நாளாகவும் தமது போராட்டத்தை அமைதியான முறையில் முன்னெடுத்துள்ளனர். கடற்படையினர் தொடர்ச்சியாக தம்மை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொள்வதாக அந்த மக்கள் முறையிட்டுள்ளனர்.,

அமைதியான முறையில் தமது உரிமைக்காக போராடும் மக்களை யார் அச்சுறுத்தினாலும் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

பொலிஸார் பலர் அப் பகுதியில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் கடற்படைக்கு பாதுகாப்பு வழங்குகின்றார்களா? அல்லது மக்களை அச்சுறுத்தும் வகையில் செயற்படுகின்றார்களா? என்பது தெரியவில்லை.

கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களை பாதுகாக்க வேண்டியது பொலிஸாரின் கடமை. எனவே மக்களின் போராட்டத்திற்கு நாம் தொடர்ந்தும் பல்வேறு வகையில் ஆதரவை வழங்குவோம் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் மேலும் தெரிவித்தார். (2-4-9-15)

## மூடப்பட்ட கிளைகளைத் திறந்து செயற்பாடுகளை முன்னெடுங்கள்

### பொதுமக்கள் கோரிக்கை

(குருமன்காடு)

வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்குட்பட்ட பல கிளைகள் மூடப்பட்ட நிலையில் காணப்படுவதால் வேலைவாய்ப்பு முடக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

வவுனியா பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்திற்குட்பட்ட 35 கிளைகள் கடந்த காலங்களில் இயங்கி வந்த நிலையில் தற்போது 10 கிளைகள் மட்டுமே இயங்கு நிலையில் காணப்படுகின்றது.

கிராம மட்டங்களில் காணப்பட்ட பல கிளைகள் மூடப்பட்டமையினால் அப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை மேற்கொண்டுள்ளதுடன் வேலைவாய்ப்புகளும் முடக்கப்படும் நிலை காணப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலகத்தினரின் சீரான வழிநடத்தலின்மை மற்றும் சங்க நிர்வாகத்தின் பரந்துபட்ட பொருளாதாரம் சார் பார்வையின்மையே இதற்கான காரணமெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை வவுனியா பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்குட்பட்ட பல வர்த்தக நிலைய கட்டடங்கள் சீரான கேள்வி கோரல்கள் மூலம் காலத்திற்குக் காலம் விடப்படாமையினால் சில தனிப்பட்ட நபர்கள் அதனை உரிமை கோரும் நிலையும் காணப்பட்டு வருகின்றமையும் சங்கத்தின் வருமான இழப்பிற்கு காரணமாகியுள்ளது.

இந் நிலையில் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபை கூட்டம் இடம்பெறவுள்ளதுடன் புதிய நிர்வாகத்தெரிவும் இடம்பெறவுள்ளமையினால் புதிய நிர்வாகம் மூடப்பட்ட கிளைகளை திறப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-250)




## உதவிப் பொருட்கள் வழங்கி வைப்பு

(மல்லாவி)

புளொட் இயக்கத்தின் ஜேர்மன் கிளையினரால் யுத்தத்தின் போது தமது மகனை பறிகொடுத்த நிலையில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் வயோதிபப் பெற்றோருக்கு வாழ்வாதார தொழில் முயற்சிக்குரிய உதவிப் பொருட்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதன்போது, மன்னார் வங்காலையைச் சேர்ந்த அன்னம்மா ஜோன் குலாஸ் என்ற வயோதிபக் குடும்பத்திற்கு 25 ஆயிரம் ரூபா பெறுமதியான அரைக்கும் இயந்திரம் (கிரைண்டர்) ஒன்றும் ஆயுள்வேத வைத்திய மருந்துப் பொருட்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மேற்படி உதவி வழங்கும் நிகழ்வில் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் மன்னார் மாவட்ட செயற்குழு உறுப்பினர் இரா.அந்தோனிப்பிள்ளை கலந்து கொண்டு உதவிப் பொருட்களை வழங்கி வைத்துள்ளார். (2-15)

## சர்வதேச காசநோய் தின விழிப்புணர்வுப் பேரணி

### மன்னாரில் நடைபெற்றது






(மல்லாவி )

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் மன்னார் மாவட்ட மார்பு நோய் சிகிச்சை பிரிவு ஆகியவற்றின் ஏற்பாட்டில் சர்வதேச காசநோய் தின விழிப்புணர்வு பேரணி நடைபெற்றுள்ளது.

இந்தப் பேரணியானது நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் யூட் ரதனி தலைமையில் ஆரம்பமாகி நடைபெற்றுள்ளது.

இதன்போது மன்னார் - தாழ்வுபாடு பிரதான வீதியில் உள்ள மன்னார் மாவட்ட மார்பு நோய் சிகிச்சை நிலையத்தில் இருந்து விழிப்புணர்வு ஊர்வலம் ஆரம்பமாகி பிரதான வீதியூடாக சென்று மன்னார் நகரப் பகுதியை அடைந்துள்ளது.

பின்னர் அங்கிருந்து மன்னார் பொது விளையாட்டு மைதான வீதியூடாக மீண்டும் மாவட்ட மார்பு நோய் சிகிச்சை நிலையத்தை வந்தடைந்தது.

இந்த விழிப்புணர்வுப் பேரணியில் கலந்து கொண்டவர்கள் காசநோய் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான பதாகைகளை ஏந்தியவாறு கலந்து கொண்டிருந்தனர். (2-15)

## சர்வதேச காசநோய் தினம் வவுனியாவில் அனுஷ்டிப்பு

(மல்லாவி)

சர்வதேச காசநோய் தின விழிப்புணர்வுப் பேரணி வவுனியா நகரப் பகுதியில் நடைபெற்றுள்ளது. இந் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றுள்ளது.

இந்த காசநோய் விழிப்புணர்வுப் பேரணியின் போது பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறும் பதாகைகளை ஏந்தியவாறும் காசநோய் சம்பந்தமான துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தவாறும் வவுனியா காசநோய் வைத்தியசாலை முன்பாக பேரணி ஆரம்பமானது. இப்பேரணி வவுனியா-மன்னார் வீதி வழியே சென்று குருமன்காட்டுச் சந்தியை அடைந்து பின்னர் அங்கிருந்து வவுனியா நகரப் பகுதியில் உள்ள அரச பேருந்து நிலையத்தை சென்றடைந்தது.

பின்னர் அங்கிருந்து வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையைச் சென்றடைந்தது.




இப் பேரணியின் போது காசநோயின் தாக்கம் தொடர்பில் அனைவரும் மேற்கொள்ளவேண்டிய சுகாதார நடவடிக்கைகள் தொடர்பிலான விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

இந் நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், சுகாதாரத்துறை சார்ந்த அனைத்து பிரிவினரும் மற்றும் வர்தகர்கள், ஆட்டோ உரிமையாளர்கள், பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

இந்தப் பேரணியின் ஆரம்ப நிகழ்வின் போது வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் கு. அகிலேந்திரன், வைத்தியர் கே. சந்திரகுமார், எஸ். சுப்பிரமணியம், பொது சுகாதார வைத்திய பரிசோதகர், காசநோய் பிரிவு வைத்திய அதிகாரி, தாதிய பயிற்சி கல்லூரி அதிபர், தாதிய பயிற்சி கல்லூரி மாணவர்கள், தாதியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-15)

பாம்பின் வாயில் தேரை;
தேரையின் வாயில் பல்லி
~ தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இராமா... இராமா... என்றழைத்த தேரையை இராமர் தன் அம்பால் குத்தினார்

ஒரு நாள் இராமபிரான் ஆற்றில் நீராடுவதற்காகச் செல்கிறார். நீராடுவதற்கு முன்னதாக தன் வசம் உள்ள அம்பை நிலத்தில் ஊன்றிவிட்டு நீராடச் சென்றார். நீராடி முடிந்த பின்னர் நிலத்தில் ஊன்றி வைத்த அம்பை இழுத்தெடுத்தார்.

அப்போது அம்பில் குத்துண்ட தேரை ஒன்று துடி துடித்துக் கொண்டிருந்தது. அதைக் கண்ட இராமர், தேரையே! நான் அம்பை நிலத்தில் ஊன்றும் போதும் உனக்கு ஏற்பட்ட ஆபத்தை என்னிடம் கூறியிருக்கலாமல்லவா? என்றார்.

அதற்கு அந்த தேரை, இராமா! எனக்குத் துன்பம் வரும் போதெல்லாம் இராமா... இராமா... என்றுதான் உச்சரிப்பேன். இப்போது அந்த இராமரே என்னைக் குத்தி வேதனைப்படுத்தும்போது நான் யாரைக் கூப்பிடுவது? அதனால்தான் பேசாமல் இருந்தேன் என்றது.

இராமனின் அம்பால் குத்துண்ட தேரை போலவே ஈழத் தமிழர்களும் உள்ளனர்.

தமக்கு துன்பம் வந்தபோதெல்லாம் ஈழத்தமிழர்கள் இந்தியா காப்பாற்றும், இந்தியா காப்பாற்றும் என்றே கூறி வந்தனர். ஆனால் அந்த இந்தியாவே துன்பம் இழைத்தபோது ஈழத் தமிழர்கள் என்ன செய்ய முடியும்?

அந்தத் தேரை கூட, இராமனின் அம்பு குத்திய போது இராமா என்று உரைக்காமல் மௌனம் காத்தது.

ஆனால் நாங்களோ இந்தியா நமக்கு வஞ்சகம் செய்கிறது என்று அறிந்தும் எங்களை இந்தியா காப்பாற்றும் என நம்புகிறோமே. அதுதான் நாங்கள் செய்த கர்மவினை.

கெடுதி செய்கிறவர்கள் உதவுவது போல காட்டிக் கொள்ள அவர்களை நம்புவதுதான் மிகப்பெரிய பாவவினை. அந்தப் பாவவினையை நாங்கள் இந்தியாவிடமிருந்து அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

இந்தியா நினைத்திருந்தால், தமிழ் மக்களை நிச்சயம் காப்பாற்றியிருக்க முடியும். ஆனால் இந்தியாவோ ஈழத்தமிழர்களின் கொட்டத்தை அடக்க வேண்டும் என்று முடிவு கட்டிக் கொண்டது.

ராஜீவ் காந்தியின் கொலைக்கு வஞ்சகம் தீர்க்க நினைத்த இந்தியா அதை கனகச்சிதமாக செய்து முடித்தது.

விடுதலைப் புலிகளை அழித்துக் கட்டுவது என்பதன் ஊடாக, இந்தியாவின் வஞ்சகம் நிறைவேறியது. இதில் பல்லாயிரக்கணக்காக தமிழ் மக்கள் பலியாகினர்.

இவை அனைத்தும் திருமதி சோனியா காந்தியின் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சியில் இருந்த போது நடந்தவை.

வெளியில் தெரியாமல் இலங்கை அரசுடன் இணைந்து, வன்னியில் பெரும் யுத்தம் நடப்பதற்கு துணை நின்று தமிழர்களுக்கு செய்ய வேண்டிய அழிவுகளை செய்து முடித்தது.

இப்போது பிரதமர் நரேந்திரமோடியின் ஆட்சி, இலங்கைத் தமிழர்களை இந்தியா கைவிடாது என்று சொல்லிவிட்டு சென்றவர், ஐ.நா கால அவகாசம் வழங்கும் வரை அமைதி காத்த மோடியின் அரசு இப்போது திருவாய் மலர்ந்திருக்கிறது.

ஆம், இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் ஈழத்தமிழர்கள் தொடர்பில் கவனம் செலுத்துவது இந்தியாவின் கடமை என்கிறார்.

காங்கிரஸ் பிரதமர் மன்மோகன் சிங்கின் ஆட்சியில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த சுஷ்மா சுவராஜ் ஈழத்தமிழர்களின் அவலம் அறிய இலங்கை வந்தவர். கூடவே யாழ்ப்பாணமும் வந்து போனவர்.

நீண்ட நாளின் பின்னர் அவர் திருவாய் மலர்ந்து ஈழத்தமிழர்களின் உரிமையைப் பாதுகாக்க இந்தியா கடமைப்பட்டுள்ளது என்கிறார்.

அட! அப்படியேதும் எண்ணம் இந்தியாவுக்கு இருந்தால் இரண்டு ஆண்டுகால அவகாசத்தை ஐ.நா வழங்குவதற்கு முன்னதாக அல்லவா அதைச் சொல்லியிருக்க வேண்டும். கால அவகாசத்தை தடுத்திருக்க வேண்டும்.

இதைவிட்டு இப்போது அவர் சொல்வது தோடுடைய செவியன்... பாடிய பெருமானாரை காத்தருளவோ! அல்லது ஆர்.கே.நகர் தேர்தலில் வாக்கெடுக்கவோ! யார் அறிவார் அச்சோவே!

## ரஷ்யாவுடனான உறவை அடுத்த நூற்றாண்டுக்கு முன்னெடுப்பதே நோக்கம்

### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

ரஷ்யா மற்றும் இலங்கைக்கு இடையிலான இருதரப்பு நல்லுறவை அடுத்த நூற்றாண்டுக்கு பலமாக முன்னெடுப்பதே அரசாங்கத்தின் நோக்கம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவில் மொஸ்கோ நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இலங்கையர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தனது இந்த விஜயம் தற்போதைய அரசாங்கம் சர்வதேச ரீதியில் முன்னெடுத்து வரும் கொள்கையை தெளிவாக எடுத்து காட்டுவதாக கூறிய ஜனாதிபதி, சர்வதேச ரீதியில் அரசாங்கத்தின் உறுதியான நிலைப்பாட்டை தெளிவுபடுத்துவதாக தெரிவித்தார்.

தானும் தனது அரசாங்கமும் மேற்குலக நாடுகளுடன் மட்டும் உறவைப் பேணுவதாக சிலர் பல்வேறு விமர்சனங்களை செய்கின்றனர்.

அவ்வாறான அனைத்து விமர்சனங்களையும் தான் நிராகரிப்பதாக தெரிவித்த ஜனாதிபதி, நடுநிலையான வெளியுறவு கொள்கையினால் அனைத்து உலக அரசுகளும் இன்று இலங்கையின் நட்பு நாடுகளாக மாறியுள்ளதாக தெரிவித்தார். (இ-7)

## பகவத்கீதை விளக்கவுரை

(யாழ்ப்பாணம்)

யாழ்.சின்மயா மிஷனில் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 7.45 மணி முதல் 8.45 மணி வரை யாழ்.சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியாரால் ஸ்ரீமத் பகவத்கீதை வாராந்த விளக்கவுரை நடத்தப்பட்டு வருகிறது.

இதில் இன்று ஸ்ரீமத் பகவத்கீதையின் ஏழாம் அத்தியாயமான "ஞான விக்ஞான யோகம்" பகுதியில் "உயிர்களுடைய அழிவில்லாத வித்து எது?" என்ற தலைப்பில் விரிவுரை நடைபெறும். (இ-3)

## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்மார்புநோய்ச் சிகிச்சை நிலையத்தினால் காசநோய் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள் மற்றும் திறந்த போட்டிகளாக நடத்தப்பட்டன. இப் போட்டிகளில் பாடசாலை மட்டத்தில் அனைத்து வினாக்களிற்கும் சரியான விடையை எழுதிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படுகிறது. இவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வு யாழ். மாவட்டத்தில் இடம்பெறவுள்ள காசநோய் தினத்தன்று வழங்கப்படும் இந் நிகழ்வின் திகதி பின்னர் அறிவிக்கப்படும். இவர்கள் தலா2500ரூபாபணப் பரிசினை வென்றுள்ளனர்.

பணப்பரிசு பெறுவோர்,

நாகசெல்வன் கஜனி- யா/வேம்படி உயர்தர பாடசாலை, அபிரா இராசலிங்கம்-யா/மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலை, நாகசெல்வன் துவாரகன்- யா/இந்துக்கல்லூரி, ஜனனி கதிர்காமநாதன்- யா/வேம்படி உயர்தர பாடசாலை.

காசநோய் விநாடி வினா திறந்த போட்டி முடிவுகள் வருமாறு,

1ஆம் இடம் 5000/- செல்வி சிறிரஜீவினி திரவியச்செல்வம்- துர்க்காபுரம் மகளிர் இல்லம்.

2ஆம் இடம் 3000/- செல்வி யாழினி கதிர்காமநாதன் - 40/2 கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

3ஆம் இடம் 2000/- செல்வி சுந்தரலிங்கம்நிலானி- சரஸ்வதி வித்தியாலய வீதி, களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு என யாழ். மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி வைத்தியர் ஆர். மணிவாசகன் அறிவித்துள்ளார். (இ-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** நேரியகுளம், இலுப்பைக்குளம், அழகாபுரி, துட்டுவாகை, சின்ன சிறப்பிக்குளம், முதலியார் குளம், கப்பாச்சி, முகத்தாங்குளம், செட்டிகுளம், செட்டிகுளம் இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், கஜசிங்கபுர இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** பரப்புக்கடந்தான், வட்டக்கண்டல், குருவில் குளம், செட்டிகுளம் இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், கஜசிங்கபுர இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும். (இ-9)

## எம்வழி செல்லாமல் பார்வையற்றவர் தம்வழி செல்ல எம் கரங்களை நீட்டுவோமா?

தவக்காலத்திற்குள் வரும் 4வது ஞாயிறு ஆகிய இன்று 'இயேசு பார்வையற்ற ஒரு மனிதரை குணப்படுத்துகின்ற சம்பவத்தை பைபிள் பகுதியிலிருந்து தரப்படுகிறது." பார்வையற்ற அந்த மனிதரை சீடர்கள் நன்கு அறிந்திருக்க வேண்டும். எனவேதான் அவர் பிறவியிலேயே பார்வை யற்றவராக இருப்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். அன்று பாவத்திற்கும், துன்பத்திற்கும் தொடர்பு உண்டு என்ற ஒரு நம்பிக்கை யூதர்கள் நடுவே இருந்தது. எனவேதான் சீடர்கள் அந்த மனிதன் குருடனாய் பிறந்ததற்கு அவனுடைய பாவமா? பெற்றோர செய்த பாவமா? என்ற கேள்வியைக் கேட்கிறார்கள். இங்கே நாம் ஒரு கேள்வியை கேட்கலாம். அவர் பிறவியிலேயே குருடன். பின் எப்படி அவன் செய்த பாவம் காரணமாக இருக்க முடியும்.

இங்கு கிரேக்க அறிஞர்

### பரமபிதா காட்டிய பாதை


பிளேட்டோவின் தத்துவத்தை சற்று நோக்கினால் அவர் ஆன்மா பற்றி கூறும் போது: ஆன்மா என்பது ஓர் உயிர் உருவாவதற்கு முன்னதாகவே இருக்கிறது என தெரிவிக்கின்றார். இக்கோட்பாட்டை யூதர்கள் நம்பினார்கள் எனலாம். எனவே, பார்வையற்றவன் பிறப்பதற்கு முனனதாகவே, அவனுடைய ஆன்மா தவறு செய்திருக்கும். எனவேதான் அவன் குருடனாய் பிறந்திருக்கிறான என்பது சீடர்களின் வாதம்.

இயேசு பாவத்திற்கும் துன்பத்திற்கும் உள்ள தொடர்பைப்பற்றி விளக்க முற்படவில்லை. ஆனால், கடவுளால் எல்லாம் இயலும் என்பதை இங்கே வலியுறுத்திக்கூறுகிறார். கடவுளால் இயலாதது இந்த உலகத்தில் எதுவும் இல்லை. அது பிறவி முடவனாக இருந்தாலும் சரி, பிறவிக்குருடனாக இருந்தாலும்சரி கடவுளால்எல்லாமே முடியும் என்பதை இயேசு உறுதியாகக் கூறுகிறார்.

இயேசு மாற்றுத் திறனாளிகள் மீது சிறப்புக் கவனம் செலுத்தி குணமாக்கினார் என்பதற்கு பைபிளில் புதிய ஏற்பாட்டு நூல்களில் மூன்று சம்பவங்களை நினைவு கூரலாம். யோவான் புத்தகத்தில்9:1-7 பகுதியில் இயேசு சென்று கொண்டிருக்கும் போது பிறவியிலேயே பார்வையற்ற ஒருவரைக் கண்டார். அவர் தரையில் உமிழ்ந்து, உமிழ் நீரால் சேறு உண்டாக்கி, அச் சேற்றைப் பார்வையற்றவருடைய கண்களில் பூசி, 'நீர் சிலோவாம் குளத்துக்குப் போய் கண்களைக் கழுவும்" என்றார். அவரும் போய்க் கழுவிப் பார்வை பெற்று திரும்பினார் என பார்க்கின்றோம்.

இயேசு படகேறி மறுகரைக்குச் சென்று தம் சொந்த நகரை அடைந்தார். மத்தேயு புத்தகத்தில் 9:2-7 பகுதியில் அப்பொழுது சிலர் முடக்குவாதமுற்ற ஒருவரைக் கட்டிலில் கிடத்தி அவரிடம் கொண்டு வந்தனர். இயேசு அவர்களுடைய நம்பிக்கை கண்டு முடக்குவாத முற்றவரிடம் 'மகனே! துணிவோடிரு, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன" என்றார். மேலும் அவனை நோக்கி 'நீ எழுந்து உன்னுடைய கட்டிலைத் தூக்கிக் கொண்டு வீட்டுக்கு போ" என்றார். அவரும் எழுந்து தமது வீட்டிற்குப் போனார என பார்க்கின்றோம்.

மாற்கு புத்தகத்தில் 7: 32-35 பகுதியில் காது கேளாதவரும், திக்கி பேசுபவருமான ஒருவரைச் சிலர் அவரிடம் கொண்டு வந்து, அவர் மீது கைவைத்துக் குணமாக்குமாறு அவரை வேண்டிக்கொண்டனர். இயேசு தமது விரல்களை அவர் காதுகளில் இட்டு உமிழ் நீரால் அவர் நாவைத் தொட்டார். பிறகு வானத்தைப் பார்த்து அவரை நோக்கி 'திறக்கப்படு" என்றார். உடனே அவரது காதுகள் திறக்கப்பட்டன. நாவும் கட்டவிழ்ந்தது. அவர் தெளிவாக பேசினார் என பார்க்கின்றோம். ஏன் இயேசு இந்த புதுமைகளை செய்தார்? தன்னை விளம்பரபடுத்தவா? மகிமை பெறவா? அல்லது இதை ஒரு தூண்டிலாகக் கொண்டு மக்களை தன்பக்கம் இழுக்கவா? இல்லை மாறாக அவருடைய மனித நேயத்தின் மகத்துவத்தை எடுத்துக் காட்டவே.



கிறிஸ்துவை பின்பற்றுபவனின் முக்கிய குணம் 'மனித நேயம்" கொண்டிருத்தல். நாம் நம் மனதில் 'மனித நேயம்" என்ற பண்பை ஊட்டி வளர்க்க வேண்டும். இன்றைய சூழ்நிலையில் தனித்தனியே அல்லல்பட்டு கிடக்கும் மனித சமுதாயத்தைஒன்றிணைக்கும்இணைப்பு சக்தி 'மனித நேயமே". இயேசு மாற்றுத்திறனாளிகளை குணப்படுத்தியதில் எந்த விதமான எதிர்பார்ப்பையும் கொண்டிருக்கவில்லை. மாறாக அவர் மனித குலத்தின் மீது அளவிலா அன்பு கொண்டதே இதற்கு காரணம். அவர் தம்மை மக்களின் நண்பன் என்றும், நண்பனுக்காக நண்பன் போல் உயிரைத் தியாகம் செய்ய முன்வருவதாகவும், மக்களை பாதுகாக்கும் நல் லாயனாக இருப்பதாக போதித்தார். எனவே அவரை பின்பற்றி நாம் நடக்க வேண்டும். எனவே இன்று எம் மத்தியில் வீதியைக் கடக்க பார்வையற்றவர் தடுமாறும் போது மற்றவர்கள் அவனுக்கு உதவட்டும் என்று எம் வழி செல்லாமல் அவர் தம் வழிசெல்ல மனித நேயத்துடன் எம் கரங்களை நீட்டி அவருக்கு உதவுவோமா?

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

# வதிரி பொம்மர்ஸ் வி.கழகம் அரையிறுதி ஆட்டத்திற்கு தகுதி




பருத்தித்துறை உதைப் பந்தாட்ட லீக் அனுமதியுடன் லீக்கில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 நபர் கொண்ட உதைப் பந்தாட்டப் போட்டிகள் தற் பொழுது காலிறுதி ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

அண்மையில் நடைபெற்ற முதலாவது போட்டியில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வெட்டி கருணாகரன் விளையாட்டுக்கழகம் மோதியது. இந்த ஆட்டத்தில் 5:3 என்ற போல் கணக்கில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று அரையிறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றது. (க)

அரியாலை சுதேசிய கொண்டாட்ட

# உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி அரியாலை சரஸ்வதி சம்பியன்



அரியாலை 98 ஆவது சுதேசிய திருநாட் கொண் டாட்ட விழாவில் கடந்த 24 ஆம் திகதி அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்ற உதை பந்தாட்ட போட்டியின் இறுதிப் போட்டியில் ஸ்ரீ கலை மகள் சனசமூக நிலைய அணியினை எதிர்த்து அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய அணி மோதியது. பரபரப்பாக நடைபெற்ற போட் டியில் ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலைய அணியினை 5:2 என்ற ரீதியில் வெற்றி பெற்று சம்பிய னாகியது அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம். (க)

# கஜகோபன் ஹெட்றிக் கோல் ஊரெழு றோயல் வெற்றி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வலிகாமம், பருத்தித்துறை, வடம ராட்சி தீவக லீக்குகளின் அனுமதியுடன் நடைபெறும் புதிய விடியல் உதை பந் தாட்ட சுற்றுப் போட்டியில் கடந்த 23 ஆம் திகதி நடை பெற்ற போட்டியில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து இமையாணன் இளைஞர் அணி மோதியது.

பரபரப்பான ஆட்டத்தில் நட்சத்திர வீரர் கஜகோப னின் ஹெட்றிக் கோலின் உதவியுடன் ஊரெழு றோயல் அணி இமை யாணன் இளைஞர் அணியை 5:0 என்ற கோல்கணக்கில் வீழ்த்தி தனது முதல் வெற்றியை பதிவு செய்தது. (க)

# இன்றைய போட்டிகள்

FA கிண்ண உதைபந் தாட்ட தொடரில் இன்று பிற் பகல் 3.30 மணிக்கு ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் நடை பெறும் போட்டியில் குப்பிளான் குறிஞ்சிக் குமாரன் அணியை எதிர்த்து கல்முனை பிறிலியன்ற் அணியும் இரவு 7 மணிக்கு துரையப்பா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடை பெறும் போட் டியில் குருநகர் பாடும்மீன் விளை யாட்டுக் கழகத்தை எதிர்த்து நீர் கொழும்பு யூபிற்றர்ஸ் விளை யாட் டுக் கழகமும் மோதவுள்ளது. (க)


மணிவிழா நிறைவு கண்ட
எங்கள் மதிப்புக்குரிய
காரைநகரின்
தவப்புதல்வன்
சிவதர்ம வள்ளல்
சிவத்திரு
சண்முகம் சிவஞானம்
அவர்களை
மனதார வாழ்த்துகின்றோம்.

காரைநகர் மாணிக்க வாசகர் மடாலய அன்னதான சபைக்கு தன் அன்னையின் ஞாபகார்த்தமாக ஸ்ரீ மனோன்மணி மண்டபத்தை அமைத்துத் தந்த பெரு வள்ளல்.
அடியார்க்கு அன்னமளிக்க ஈகை செய்யும் அறப்பணி வேந்தன் அகவை 60 நிறைவு கண்ட சிவத்திரு சண்முகம் சிவஞானம் அவர்களுக்கு எங்கள் மணி விழா வாழ்த்துக்கள். அறப்பணிச் செம்மல் அகவை நூறு காண சிவப்பரம்பொருளை வேண்டி நிற்கிறோம்

மாணிக்கவாசகர் மடாலய
அன்னதான சபை, காரைநகர்

(C - 7920)





## மக்களின்...

பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படையினரால் அபகரிக்கப்பட்டு தற்போது கடற்படை முகாமாக மாறியுள்ள தமது நிலத்தை மீட்டு தங்களை மீள் குடியேற்றம் செய்ய வலியுறுத்தி மன்னார் முள்ளிக்குளம் கிராம மக்கள் கடந்த 23ஆம் திகதி வியாழக்கிழமை காலை ஆரம்பித்த கவனயீர்ப்பு போராட்டம் நேற்று சனிக்கிழமை மூன்றாவது நாளாகவும் அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறித்த மக்களுக்கு ஆதரவு தெரிவித்து பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள், வடமாகாண சபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என பல்வேறு தரப்பினர் நேரில் சென்று ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் குறித்த மக்களின் கவனயீர்ப்பு போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மற்றும் மன்னார் நகர சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ்.ஆர்.குமரேஸ் ஆகியோர் நேற்று சனிக்கிழமை காலை முள்ளிக்குளம் கிராம மக்கள் மேற்கொண்டு வரும் கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு மக்களுக்கு ஆதரவு தெரிவித்தனர்.

இதன்போது ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

பல வருட காலமாக முள்ளிக்குளம் கிராம மக்கள் தமது வாழ்வாதாரத்தை இழந்த நிலையில் பல்வேறு துன்ப துயரங்களுக்கு மத்தியில் தமது பூர்வீக கிராமத்தை இழந்து மன்னார் மாவட்டத்தில் பல்வேறு கிராமங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் நிர்க்கதி அற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றன.

எனவே அரசாங்கம் 2015 ஆம் ஆண்டும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இணை அனுசரணை வழங்கி மக்களின் காணி விடுவிப்பு உட்பட பல விடயங்கள் தொடர்பில் வாக்குறுதி அளிக்கப்பட்ட நிலையில் தற்போது இரண்டு வருடங்கள் கடந்த நிலையில் குறித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாத நிலையில் தற்போது மீண்டும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் அரசாங்கம் இணை அனுசரணை வழங்கியுள்ளது.

எனினும் அரசாங்கம் இதற்காக இரண்டு வருட காலத்தை இழுத்தடித்து ஏமாற்றாமல் உடனடியாக மக்களினுடைய காணி, அதாவது முள்ளிக்குளம் மக்களாக இருக்கலாம், கேப்பாப்பிலவு மக்களாக இருக்கலாம், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு-கிழக்கு மக்களாக இருக்கலாம் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற பொது மக்களின் சொந்தமான காணிகளை அரசாங்கம் எவ்வளவு விரைவாக மக்களின் காணிகளை கையளிக்க முடியுமோ அதற்கான துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கை என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மேலுமதெரிவித்தார். (செ-4)

## கண்ணை இழந்த...

கோபமே பழிதீர்க்கும் எண்ணமோ இல்லை என வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார். தேசிய நல்லிணக்கத்திற்கும் ஒருமைப்பாட்டிற்குமான பணியகத்தின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,


மக்களுக்கு இனவாதம் இல்லாத சேவையை செய்வதற்கு அனைத்து தரப்பினரும் முன்வர வேண்டும். எமது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா இங்கு வந்ததுக்கு காரணம், முப்பது வருட போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதற்காகவே. அரசியல் தீர்வு தொடர்பில் பேசும் அதேவேளை அபிவிருத்தியும் தேவை. வடக்கு மக்களின் பிரச்சினையை சந்திரிகா நன்றாக தெரிந்து வைத்துள்ளார். அதற்காகவே அவர் செயற்படுகின்றார்.

எமது நாடு அழகான சிறிய தீவு. இங்கு மத்திய, மாகாண அரசு சேர்ந்து வேலை செய்ய வேண்டும். அவ்வாறு வேலை செய்வதன் மூலமே அழகான நாடாக கட்டியெழுப்ப முடியும். மாறாக இனவாதம் கதைத்து கொண்டிருந்தால் எதுவும் நடைபெறாது. பிரச்சினைகள் தான் ஏற்படும். இங்கு நிறைய பிரச்சினை உள்ளது. ஆனால் அவற்றை பற்றி பேசினால் மட்டும் போதாது. அது தொடர்பான செயறபாடுகளும் வேண்டும்.

அரசியல் வேறு, பொருளாதாரம் என்பது வேறு. ஆகவே இது இரண்டையும் தொடர்பு படுத்தி எமது நடவடிக்கைகளை முன்னெடுக்கக் கூடாது. அவ்வாறு முன்னெடுத்தால் எமது மககளே அதனால் பாதிப்படைவார்கள். நாம் எல்லோரும் சேர்ந்து போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்தல் வேண்டும். வடக்கு மாகாண சபையும், மத்திய அரசும் தனித்தனியாக செயற்பட முடியாது. ஒன்றுக்கொன்று புரிந்துணர்வுடன் தான் செயற்பட முடியும்.

எமது முன்னாள் ஜனாதிபதி, சந்திரிகா மீது புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தால் கண் போயிருந்தது. அவர் கண்ணை இழந்தும் கோபம் கொள்ளஇல்லை. பழிவாங்கவும் வில்லை. நல்லெண்ண ரீதியில் தான் செயற்பட்டு வருகின்றார். தமிழ் மக்களுக்கு ஆதரவும் தெரிவித்துதான் வருகின்றார். ஆகவே அனைத்து விடயங்களையும் மறந்து மக்களுடைய அபிவிருத்தியில் ஒன்றாக வேலை செய்ய வேண்டும். இதுவே இன்றைய தேவை என ஆளுநர் தனது உரையில் குறிப்பிட்டார். (செ-4)

## மேஜர் மகேஸ்...



ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவுக்கும் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் இடையிலான நட்புறவு சந்திப்பொன்று நேற்று முன்தினம் முதலமைச்சரின் வாசஸ்தலத்தில் நடைபெற்றது.

யாழ்.பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க அண்மையில் இலங்கை இராணுவத் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் யாழ்.படைகளின் கட்டளைத் தளபதியாக கடமையாற்றியதை தொடர்ந்து குறித்த பதவியை ஏற்கும் முன்னர் வடமாகாண முதலமைச்சருடன் நல்லிணக்க சந்திப்பொன்றை அவர் மேற்கொண்டிருந்தார். (செ-9)

## 'மாவீரர்கள்...

யில், லைக்கா நிறுவனத்தின் தலைவர் சுபாஷ்கரன் இலங்கையில் உள்ள வவுனியாவில் வீடுகளை இழந்து தவிக்கும் ஏழை, எளிய மக்களுக்கு அளிப்பதற்காக அவருடைய தாய் ஞானாம்பிகை பெயரில் 150 வீடுகளை கட்டியுள்ளார்.

சுபாஷ்கரன் அன்பானவர், கருணை உளளம் கொண்டவர், அவர் கட்டிய வீடுகளை ஏழைகளுக்கு வழங்குவதற்கான விழாவிற்கு என்னை அழைத்திருந்தார். வருகிற ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி மாலை கிட்டத்தட்ட மூன்று, நான்கு லட்சம் பேர் கலந்து கொள்ள உள்ள அந்த விழாவில் மலேசிய செனட் உறுப்பினர் விக்கேஸ்வரன், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், லண்டனைச் சேரந்த எம்.பி.ஜேம்ஸ் பெர்ரி, வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆகியோருடன் நானும் அவ்விழாவில் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு வீட்டுச் சாவி கொடுப்பதாகவும், யாழ்.பல்கலைக்கழகத்துக்கு ஆராய்ச்சி கட்டிட நிதி கொடுப்பதாகவும் திட்டம்.

மறுநாள் ஏப்ரல் 10ஆம் திகதி வவுனியா சென்று வீடுகளை பயனாளிகளிடம் ஒப்படைத்து மரக்கன்றுகளை நடும் திட்டம், அதன பிறகு முல்லைத்தீவு, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு போன்ற இடங்களை பார்வையிட்டு மக்களை சந்திப்பதாகவும் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நான் இரண்டு விடயங்களுக்காக இந்த விழாவில் கலந்து கொள்ள சம்மதித்தேன்.
**காரியம்:** அந்த வீடுகளை திறந்து வைப்பது,
**காரணம்:** காலம் காலமாய் வாழ்ந்த தங்களின் பூமிக்காக, தங்களின் இனத்துக்காக, தங்களது உரிமைக்காக, தங்களது சுய கௌரவத்திற்காக லட்சக்கணக்கில் ரத்தம் சிந்தி, மடிந்து தங்களை தாங்களே சுய சமாதியாக்கிக் கொண்டு பூமிக்குள் புதைந்து கிடக்கும் அந்த வீர மண்ணை வணங்கி, அந்த மாவீரர்கள் வாழ்ந்த, நடமாடிய இடங்களைப் பார்த்து அவர்கள் சுவாசித்த காற்றையும் சுவாசிக்க வேண்டுமென்ற ஆசை வெகு நாட்களாய் என்னுள் இருந்தது. அதை நிறைவேற்றிக் கொண்டு, பல லட்சக்கணக்கில் கூடவிருக்கும் என்னை வாழவைக்கும் தமிழ் மக்களைப் பார்க்க வேண்டும். மனம் திறந்து பேச வேணடும் என்று ஆவலாய் இருந்தேன்.

அதுமட்டுமன்றி இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்திக்க நேரம் கேட்டு, சந்தித்து ஒரு சான வயிற்றுக்காக உயிரைப் பணயம் வைத்து வேறு எந்த தொழிலுமே தெரியாததனால் கடலில் போய் மீன் பிடிக்கும் என்னுடைய மீனவ சகோதரர்களுடைய உயிரை பறித்து அவர்களின் வாழ்வாதாரமான படகுகளை சிறைபிடித்து வைக்கும் சம்பவங்களை அன்றாட பத்திரிகைகளில் படிக்கும் போது நெஞ்சம் துடிக்கிறது. அதைப்பற்றி என்னளவில் அவருடன் இதற்கு ஒரு சுமூகமான தீர்வுகாண வேண்டுமென்று ஒரு வேண்டுகோளை வைக்க எண்ணியிருந்தேன்.

இத்தருணத்தில் நண்பர் தொல். திருமாவளவன் ஊடகங்களின் மூலமாகவும், வைக்கோ தொலைபேசி மூலமாகவும், வேல்முருகன் நண்பர் மூலமாகவும் பல அரசியல் காரணங்களை முன்வைத்து இந்த நிகழ்ச்சியில் நான் கலந்து கொள்ளக்கூடாது என்று அன்புடன் கேட்டுக் கொண்டார்கள். அவர்கள் சொன்ன காரணங்களை முழுமனதுடன் என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்றாலும், அவர்களுடைய அன்பு வேண்டுகோள்ளை ஏற்று நான் இவ்விழாவில் கலந்து கொள்வதை தவிர்க்கிறேன்.

இச்சமயத்தில் நான் ஒன்றை குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். நான் அரசியல்வாதி அல்ல. நான் ஒரு கலைஞன். திருமாவளவன் சொன்னதைப் போல மக்களை மகிழ்விப்பது தான் என்னுடைய கடமை.

இனிவரும் காலங்களில் இலங்கை சென்று அங்கே வாழும் தமிழ் மக்களை சந்தித்து, அவர்களை மகிழவைத்து அந்த புனிதப்போர் நிகழ்ந்த பூமியை காணும் பாக்கியம் கிடைத்தால் தயவு செய்து அதை அரசியலாக்கி என்னை போகவிடாமல் செய்துவிடாதீர்கள் என்று அன்புடனும் உரிமையுடனும் கேட்டுக்கொள்கிறேன் என்று தனது அறிக்கையில் உருக்கமாக ரஜினிகாந்த் தெரிவித்துள்ளார். (செ-11)

## கருணா...

சொல்லி நிறுத்திக் காட்டுங்கள் பார்ப்போம் என்று முன்னாள் மீள்குடியேற்றப் பிரதியமைச்சர் கருணா என அழைக்கப்படும் விநாயக மூர்த்தி முரளீதரன் சவால் விடுத்துள்ளார்.

சர்ச்சைக்குரிய கல்குடா கும்புறுமூலை மதுபான உற்பத்தித் தொழிற்சாலை விவகாரம் தொடர்பில் நேற்று கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு ஆளுமை இருந்தால் கும்புறுமூலை மதுபான உற்பத்திச் தொழிற்சாலை அமைப்பதை நிறுத்திக் காட்ட வேண்டும். நாங்கள் ஆட்சியில் இருந்த போது புதிதாக எதுவித மதுபானசாலையும் அமைக்க முடியாது என்ற முடிவை மாவட்ட அபிவிருத்தி குழுக்கூட்டத்தில் தீர்மானமாக நிறைவேற்றி அதற்குச் செயல்வடிவம் கொடுத்திருந்தோம். மட்டக்களப்பு மாவட்டத்தில் சுங்கான்கேணி, கிரான்குளம் ஆகிய இடங்களில் நிறுவப்பட்ட இரண்டு மதுபானசாலைகளை நாம் தடைசெய்தோம்.

சுங்கான்கேணியில் புதிய மதுபானசாலைக்காகக் கட்டப்பட்டு அரைகுறையாகக் காட்சியளிக்கும் கட்டிடத்தை இப்போதும் நீங்கள் காணலாம். ஆனால், நல்லாட்சி என்று கூறிக் கொண்டு மக்களை ஏமாற்றி வால்பிடிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சிக் காலத்தில், கல்குடாவில் பத்தொன்பது ஏக்கர் காணியில் மதுபான தொழிற்சாலை அமைக்கப்படுவதைக் த.தே.கூட்டமைப்பினரால் தடை செய்ய முடியவில்லை. மேலும், சர்ச்சைக்குரிய அந்த மதுபான உற்பத்தித் தொழிற்சாலை பற்றி செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் குண்டர்களால் தாக்கப்பட்டுள்ளார்கள் என்றார். (செ-11)

## கருக்கலைப்பு...

புகள் காரணமாக ஏற்படும் அவசியமற்ற கர்ப்பமடைதலே இந்த கருக்கலைப்புகள் அதிகரிக்க ஏதுவாக அமைந்துள்ளன.

35 வயதிற்கும் 50 வயதிற்கும் இடைப்பட்ட வயதுடைய பெண்கள் அதிகளவில் கருக்கலைப்பு செய்து கொள்வதாகவும் ஹரிஸ் சந்திர குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## மக்களின் கோரிக்கையை...

அரசாங்கத்தால் நாட்டு மக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்காமல் எவ்வாளவு காலம் செல்லமுடியும் என அவர் இதன்போது கேள்வியெழுப்பினார்.

கடந்த காலங்களில் உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் காலத்துக்கு காலம் நடைபெற்றது.

எனினும் தற்போது தேர்தல்கள் பிற்போடப்பட்டுவருகின்றன.

தற்போது மத்திய வங்கியில் இடம்பெற்ற ஊழல் மோசடியானது உலகில் வேறு எங்கும் இடம்பெற்றிருக்காது.

இவ்வாறு கொள்ளையிடப்பட்ட பணத்தின் மூலம் பல்வேறு முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதாகவும் மகிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தினார். (செ-11)

## கட்டுத் துப்பாக்கி...

மணியளவில் நடைபெற்றுள்ள நிலையில் பிரஸ்தாப இளைஞன் வைத்தியசாலையில் மாலை 05, மணியளவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் மதவாச்சி பூனாவையைச் சேர்ந்த மஞ்சுல பிரசன்னா குமார (வயது 29) என்ற இளைஞரே படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்கு சென்ற மதவாச்சி பொலிஸார் கட்டுத் துப்பாக்கியை மீட்டுள்ளதுடன், சட்ட விரோதமானமுறையில்

கட்டுத் துப்பாக்கியைப் பயன்படுத்தி மிருக வேட்டைக்காக பொறி வைத்தவர்கள் தொடர்பில் புலன் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

## முன்னேற்றம் குறித்து...

பிரசாத் காரியவசம் இலங்கை குறித்து விளக்கமளித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம், காங்கிரஸ் கட்சியின் இரண்டு தூதுக்குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்து இங்குள்ள நிலைமைகளை பார்வையிட்டுள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக, அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவர், காங்கிரஸ் பிரதிநிதிகளை சந்தித்து முக்கிய பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளார்.

அரசாங்கத்தின் நல்லிணக்க செயற்பாடுகள், அரசியல் நிலவரங்கள், சட்டம் ஒழுங்கை அமுல்படுத்தல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் குறித்து அமெரிக்க காங்கிரஸ் பிரமுகர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## மங்களவின்...

எதிர்க்கட்சியின் செயற்பாட்டாளருமான தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார். மங்கள சமரவீர படைவீரர்களை காட்டிக் கொடுத்து வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ள அவர் கலப்பு நீதிமன்ற விசாரணையை ஒப்புக் கொண்டமை, மேஜர் ஜெனரல் கமால் குணரட்னவை இழிவுபடுத்தியமை உள்ளிட்ட பல்வேறு முக்கிய குற்றச் செயல்களில் மங்கள சமரவீர ஈடுபட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். புலம்பெயர் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் தேவைகளுக்கு அமைய மங்கள சமரவீர செயற்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். (செ-11)

CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



CNR World Wide Express
இல.401. மணிக்கூண்டு கோபுர வீதி,
(பெருமாள் கோவில் அருகாமை)
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
021 5674145
077 2931062
follow us : cnrworldwideexpress

(சி-7906)

## 24...

வைத்திய பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சு மக்களிடம் கோரியுள்ளது. (செ-11)

FREE HOME DELEVERY

20L குடிநீர் போத்தல் வீடுகளுக்கு கொண்டு வந்து தரப்படும்



0773384838 (8381)

பணிப்பெண் தேவை

சுன்னாகத்தில் உள்ள வீடொன்றிற்கு தங்கி நின்று வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை. (8402)

தொடர்புகளுக்கு : 0778772380

யா/கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயம்

நூற்றாண்டு விழா ஆலோசனைக்கான கலந்துரையாடல் அழைப்பு

இடம் : பாடசாலை மண்டபம்
காலம் : இன்று 26.03,2017 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : பிற்பகல் 4.00 மணி

கலந்துரையாடலில் அனைவரையும் கலந்து கொள்ளும் வண்ணம் பாடசாலை சமூகம் வேண்டி நிற்கின்றது.

தலைவர்
திரு.த.பாலகுமார்
(பழைய மாணவர் சங்கம்)

(சி-7909)

விசா விண்ணப்பித்தல்

2003ஆம் ஆண்டிலிருந்து அமெரிக்க Green Card விசா விண்ணப்பிப்பதில் அனுபவமிக்க எமது நிறுவனத்தில் USA, Canada, Australia, மற்றும் UK உட்பட ஏனைய ஐரோப்பிய நாடுகளின் விசா விண்ணப்பப் படிவங்களை எமது நிறுவனத்தின் நிபுணத்துவ ஆலோசனையைப் பெற்று மிகச் சரியாக பூர்த்தி செய்து கொள்வதுடன் விசா சம்பந்தமான கடிதங்களையும் ஏற்பாடு செய்து கொள்வதற்கும் மற்றும் விசா நியமனங்கள் (Appointment), பயண காப்பீடு போன்றவற்றையும் பெற்றுக் கொள்ள எமது நிறுவனத்தை அணுகவும்.

எமது நிறுவனத்திற்கு கிளை அலுவலகமோ, பிரதிநிதிகளோ இலங்கையின் எந்தவொரு பாகத்திலும் இல்லை என்பதை அறியத்தருகிறோம்.

Bristolvisa CONSULTATIONS

நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரிகளும் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

No. 8/3/4, Bristol Street, Colombo 01.
077 427 6579, 011 2 393 919
info@bristolvisa.com / www.bristolvisa.com

(I-82)

Mobile Phone Repairing Course



Smart & All Mobile Phones
Hardware , Software and Unlocking

12th Batch start on 01.04.2017
Weekend Batches

சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்.
தனிப்பட்ட கவனிப்பு.
சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.

ics EDUCATION
77, மணிக்கூட்டு கோபுர வீதி
யாழ்ப்பாணம்
(பெருமாள் கோவில் அருகாமையில்)
076-7013060 , 021-7306000

(சி-7910)

கனடாவில் நிரந்தர குடியேறல்/வேலைவாய்ப்பு/கல்வி- கருத்தரங்கு

இனிமேலும் சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல வேண்டாமே!
குறைந்த கட்டணத்துடன் சட்டபூர்வமாக குடும்பத்துடன் கனடாவில் குடியேற இலகுவான அரிய வாய்ப்புகள்





8ம் ஆண்டு வரை படித்தவர்கள் முதல் பல்கலைக்கழக கல்வி முடித்தவர்கள் வரை அனைவருக்கும் கனடாவில் வேலைவாய்ப்புக்களுடன் குடும்பமாக நிரந்தர குடியுரிமை (PR) பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக்கள் பல உண்டு. இதுவரை எம்மவர்கள் கனடாவில் குடியேற பயன்படுத்தாத பல குடியேற்ற வழிமுறைகள் பற்றி கனடாவில் இருந்து வருகை தந்திருக்கும் Immigration அலுவலரால் உங்களுக்கான வாய்ப்புக்கள் பற்றி முழு விபரமும் விளக்கமும் தரப்படும்.

கருத்தரங்கு நாள் 26-03-2017

இறுதிச் சந்தர்ப்பம் | இன்று மாலை 03 மணி

V2 Travels

முற்பதிவு அவசியம் - 0768226236 49 A சப்பல் லேன் யாழ்ப்பாணம்
இன்னும் சில ஆசனங்கள் மட்டுமே உள்ளன

(சி-7864)

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு



UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

(சி-7858)

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

070 330 5500

அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com

லண்டனுக்கு (UK) 5kg க்கு மேல் மிகக் குறைந்த கட்டணம்

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும். அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | நவாலி | சாவகச்சேரி | மீசாலை | மல்லாவி |
| முல்லைத்தீவு | கிளிநொச்சி | திருகோணமலை | வவுனியா | |

(சி-7890)

# மரண அறிவித்தல்



## திருமதி பிலிப் சூசைப்பிள்ளை எலிசபேத் (பூமணி)

பருத்தித்துறை வீதி, நெல்லியடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிலிப் சூசைப்பிள்ளை எலிசபேத் (பூமணி) அவர்கள் கடந்த 24.03.2017 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பிலிப் சூசைப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், அந்தோனிப்பிள்ளை, மத்தியாஸ், வின்சன், போல், அல்பின், ஜெகன், யோகம், ரஞ்சினி, பத்மிமா, பிறேமா, கீத்தா ஆகியோரின் பாசமிகு தாயாரும், சில்வாஸ்ரர், சதாநாயகி, வில்லியம், மேரி யோசேப், கருணாகரி, பிறேமலதா, பிரான்சிஸ், சூரியா, டயானா, சுரேஸ் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (27.03.2017) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து திருவுடல் எடுத்துச் செல்லப்பட்டு கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு சீரிப்பல்லி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றார்கள்.

இவரின் பிரிவால் துயருறும்...
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் பூட்டப்பிள்ளைகள்

பருத்தித்துறை வீதி,
நெல்லியடி.

தகவல்: அல்பின் (டினா ஓடியோ வீடியோ சென்றர், நெல்லியடி)
077 899 8822

(சி-7905)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 110

வள்ளுவர் ஆண்டு 2048 | 26.03.2017 | தொலைபேசி : 021 222 3378

# கால அவகாசம்

## வேண்டும் வேண்டாம்



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

பண்டிதர் பரமலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். விதானையார் விசுவலிங்கம் உட்பட அனைவரது முகத்திலும் இனம்புரியாத கவலை புரையோடியிருந்ததைக் காணமுடிந்தது.

இறைவணக்கத்துடன் மாநாட்டை ஆரம்பிப்பம் என்று பண்டிதர் அறிவித்ததும் அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

**பண்டிதர்:** எல்லோருடைய முகத்திலும் கவலை தெரியுது. என்ன செய்யிறது எங்களுக்காகக் கதைப்பதற்கு எவரும் இல்லாத நிலையில இரண்டு வருட கால அவகாசம் இலங்கை அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது. காலம் கடந்தால் எல்லாம் முடிந்து போன கதைதான்.

(மாநாட்டு உறுப்பினர்களின் நிலைமையை உணர்ந்து பண்டிதர் தனது தலைமையுரையை சுருக்கமாக ஆற்றிமுடித்தார். பண்டிதரின் தலைமையுரை கால அவகாசத்திற்கான ஒரு கண்டனமாக இருக்காததால் விதானையார் கோபமுற்றார்)

**விதானையார்:** பண்டிதர் ஐயா முள்ளிவாய்க்காலில என்ர பிள்ளையை இழந்தனான். அந்த வலி எனக்குத்தான் தெரியும். இது விடயத்தில தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்ர கொழும்புத் தலைமை வாய்திறக்கக்கூடாது.

இலங்கை அரசுக்குக் கால அவகாசம் வழங்கவேணும் எண்டு சொல்லுறதுக்கு இவங்கள் ஆரு. தமிழரின் உரிமை தொடர்பில கதைக்கிற அருகதையே இல்லாத இவங்கள் இப்ப எங்களுக்கு...

(விதானையார் விசுவலிங்கம் ஆத்திரத்தோடு கதைத்தார். மாநாட்டின் ஆரம்பமே சூடாகிவிட்டதை உணர்ந்த வாத்தியார் வைத்திலிங்கம் நிலைமையைச் சமாளிக்க முற்பட்டார்)

**வாத்தியார்:** விதானையார் சொல்லுறதும் சரிதான். எதுவா இருந்தாலும் இரண்டு வருடகால அவகாசத்தில எல்லாம் தெரிந்து விடும்.

(விதானையாரைச் சமாளிப்பதற்காக வாத்தியார் கதைத்தாராயினும். அக்கதை விதானையாருக்கும் ஏனையவர்களுக்கும் கோபமூட்டியது.)

**விதானையார்:** இரண்டு வருடத்தில எல்லாம் தெரியும்... தெரியும்... இரண்டு வருடத்தில திருகோணமலைக் காளி பக்தன் போய்ச் சேர்ந்திடுவார். மற்றவர் மாவையை ஏமாற்றி தமிழரசுக் கட்சியை தன்ர கைக்குள்ள வைத்திருப்பார்.

கூட்டமைப்பு ஏதோவொரு வகையில உடைந்து போய் தனித்தனிக்கட்சிகள் தங்கட பலத்தை அதிகரிக்கும் பணியில கவனம் செலுத்துவினம். பிறகென்ன? இரண்டு வருடத்தில நாங்கள் எல்லாம் மறந்துவிடுவம்.



**கங்காணி:** உண்மை. விதானையார் சொல்லுறது நூறு வீதம் உண்மை. பிரபாகரனைக் கடவுள் எண்டு சொன்னவியள்தான் முதலில பிரபாகரனைத் திட்டினவியள். இலங்கை அரசோட சேர்ந்து தங்கட நலன்களைக் கவனித்தவியள் இந்தக்கூட்டம் இருக்கும்வரைக்கும் தமிழருக்கு எதுவும் கிடையாது; கிடைக்கவும் விடாங்கள்.

**மூப்பர்:** கங்காணியார் கூட்டமைப்பின்ர தலைமை பிழை விடுகிறதா இருந்தால் கூட்டமைப்பின்ர ஏனைய அங்கத்துவக் கட்சிகள் ஒன்றாக இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக தங்களை அடையாளப்படுத்த வேண்டியது தானே!

**கங்காணி:** அப்படிச் செய்யிறதுக்கு இலங்கை அரசாங்கமும் விடாது. அரசாங்கத்தைப் பொறுத்தவரை கூட்டமைப்பின் தலைமைதானே அதற்குப் பக்கபலம்.

**சாத்திரியார்:** அதுமட்டுமல்ல கூட்டமைப்பின்ர முக்கிய புள்ளிகளுக்கு நிறையச் சலுகைகள்- சன்மானங்களும் வழங்கப்படுகுதல்லோ. செல்வத்தாருக்கு நாலு கோடி ரூபா பெறுமதியான வாகனம், சாமுக்கு வாகனம் உட்பட இதர வசதிகள், மாவிட்ட புரத்தார் கொல்லங்கலட்டியில பெரிய அரண்மனை கட்டுகிறாராம். எங்கட சனங்கள் பாவங்கள். தங்கட வீடுகளுக்கு விடச் சொல்லி அவையள் இராப் பகலா போராட்டம் நடத்துகினம்.

**விதானையார்:** கொல்லங்கலட்டி அரண்மனைக்கு பிரதேச சபையின்ர அனுமதி பெறப்படவில்லை எண்டும் ஒருகதை.

**பண்டிதர்:** அதில ஒரு பிரச்சினையும் இல்லை. முந்தின சேமன் இருக்கிறார்தானே முந்திப் பிந்தித் திகதி போட்டு அனுமதி கொடுக்கிறதுதானே.

**விதானையார்:** அப்ப பொது சுகாதாரப் பரிசோதகர்களின்ர அனுமதி, திட்டமிடல் பிரிவின்ர சிபாரிசு எதுவும் கிடையாதோ.

**பண்டிதர்:** அகப்பை பிடிக்கிற கை நம்ம கை எண்டால் அடிப்பந்தியென்ன நுனிப்பந்தியென்ன.

**வாத்தியார்:** சரி... சரி... மாவிட்டபுரத்தாரும் வீடு கட்டி இந்த மண்ணில இருக்கட்டுமன். எல்லாவற்றுக்கும் குறை அளந்தால் அவையள் தான் என்ன செய்ய முடியும்.

**விதானையார்:** வாத்தியாருக்கு இண்டைக்கு என்ன நடந்தது. எல்லாம் அந்தப் பக்கமா நிண்டு கதைக்கிறார். நாங்கள் வீடு கட்டுறதைக் குறை கூறல்ல. எல்லாம் நல்லா இருந்தால் தானே நாடு முன்னேறும். நாங்கள் சொல்லுறது என்ன வெண்டால் தங்கட சொந்த மண்ணில மீளக்குடியமருவதற்காகப் போராட்டம் நடத்துகிற மக்களின்ர போராட்டத்தில மக்கள் பிரதிநிதி எண்டு இருக்கிறவியள் பங்குபற்றலாம்தானே!

தங்கட தங்கட அலுவல்களைப் பார்க்கிற அதே நேரம் எங்கட மக்களின்ர பிரச்சினைகளையும் பார்க்கத்தானே வேணும்.

**வாத்தியார்:** விதானையார் நீங்கள் சொல்லுறதுக்கு நானும் உடன்பாடு தான். கோடிக்கணக்கான பெறுமதியில வாகனங்கள் கிடைக்கும் என்பதற்காக தமிழ் மக்களின்ர உரிமையை நாங்கள் வித்து விடக் கூடாது. மக்கள் பிரதிநிதிகள் எண்டால் அவர்கள் தங்கட இடங்களில நடக்கிற நிர்வாக ஒழுங்குகளையும் மேற்பார்வை செய்ய வேணும். நாலு கோடி ரூபாவுக்கு வாகனம் கிடைக்குது என்பதற்காக மன்னார் நானாட்டான் வைத்தியசாலையில எல்லாம் ஒழுங்கா நடக்குது எண்டு நினைக்கக்கூடாது.

**மூப்பர்:** வாத்தியார் நீங்கள் சொல்லுறதைப் பார்த்தால் நானாட்டான் வைத்தியசாலையில ஏதோ நடந்திருக்குதுபோல.

**வாத்தியார்:** முட்டு, மூச்சடைப்புக்காரணமாக பெண்ணொருவரை நானாட்டான் வைத்தியசாலைக்கு கொண்டு போயிருக்கினம். அங்க இருக்கிற டாக்குத்தர் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறன் சாப்பிட்டு முடிந்ததும் வாறன் எண்டு சொல்லியிருக்கிறார்.

**சாத்திரியார்:** அவ்வர் சாப்பிடும் வரைக்கும் மூச்சடைப்புப் பொறுத்துக் கொள்ளுமாமோ?

**கங்காணி:** வாத்தியார் பிறகென்ன நடந்தது.

**வாத்தியார்:** சாப்பிட்டு முடிந்து டாக்குத்தர் வரவில்லையாம். உடனடியாக அந்தப் பெண்ணை வேறு வைத்தியசாலைக்கு உறவினர்கள் கொண்டு போய் ஒரு மாதிரியா அந்தப் பெண்ணைக் காப்பாற்றிப் போட்டினம்.

**வாத்தியார்:** அப்ப சைற்றத்திற்கு எதிராக மருத்துவர்கள் போராடுகினமே அது சரியோ.

**பண்டிதர்:** சைற்றத்திற்கு எதிராக மருத்துவபீட மாணவர்களும் மருத்துவர்களும் போராடினாலும் மக்கள் சமூகத்தின்ர ஆதரவு அந்தப் போராட்டத்திற்குக் கிடைக்கல்ல என்பதுதான் உண்மை.

**கங்காணி:** உண்மைதான் வாத்தியார். நானும் பாக்கிறன் எங்கட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் சுழற்சி முறையில உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினவியள். ஆனால் ஒரு சனமும் அதைத் திரும்பிப் பார்க்கல்ல. இதை நாங்கள் சொன்னால் எங்களில கோபப்படுவினம். ஆனால் சைற்றத்திற்கு எதிரான போராட்டத்திற்கு பொது மக்களின்ர ஆதரவு ஏன் கிடைக்காமல் போனது என்பதை மருத்துவர்களும் மருத்துவ பீட மாணவர்களும் ஆழமாகச் சிந்திக்கவேணும்.

**பண்டிதர்:** சைற்றத்திற்கு எதிராக மருத்துவர்களும் மருத்துவபீட மாணவர்களும் முன்வைக்கின்ற கருத்துக்களில நியாயம் இருக்கத்தான் செய்யுது. ஆனால் நடைமுறையில அரச மருத்துவர்களில எத்தனை வீதமானவர்கள் தங்கட கடமையைத் தெய்வீகமாக உணர்ந்து செய்யினம் என்பதை நாடளாவிய ரீதியில கணக்கிட வேணும். மருத்துவர்களின்ர பணி முழுத்திருப்தியாக இருந்தால் நிச்சயம் சைற்றத்திற்கு எதிராக பொதுமக்கள் கிளர்ந்தெழுந்திருப்பினம்.

எல்லாம் ஒண்டுதான் என்ற வெறுப்பு வந்ததால தான் சைற்றத்திற்கு எதிராக மருத்துவர்களும் மருத்துவபீட மாணவர்களும் அநாதைகளாக நின்று போராட வேண்டி வந்தது. இது தான் உண்மை.

நானாட்டானில நடந்தது போன்ற சம்பவங்கள்தான் சைற்றத்திற்கு எதிரான போராட்டத்தை மக்கள் கண்டு கொள்ளாமல் விடுவதற்குக் காரணம். இதனை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொண்டால், தங்கட ஆதரவை தர மக்கள் எப்பவும் தயாராக இருக்கினம். இப்படி பண்டிதர் கூறியதும் அதனை அங்கீகரிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# கால அவகாசமா? மின்சார நாற்காலியா?

2015 ஆம் ஆண்டு ஐ.நா.மனிதவுரிமைகள் ஆணையத்தின் கூட்டத் தொடர் நடந்து கொண்டிருக்கிறது. இலங்கையில் நடந்த போர்க்குற்றம் தொடர்பில் விசாரணை வேண்டும் என்ற விடயப் பொருள் காரசாரமாக விவாதிக்கப்படுகிறது. வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த கொடும் யுத்தம், தமிழின அழிப்பு என்ற கருத்து முன்வைக்கப்படுகிறது.

படையினரிடம் சரணடைந்தவர்களுக்கு- படையினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு நடந்தது என்ன? என்ற கேள்விகள் எழுகின்றன.

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் கடைசி மகன் பாலச்சந்திரனை படையினர் சுட்டுக் கொன்ற கொடூரம் சனல்-4 காணொளியில் பார்க்கப்படுகிறது.

ஒரு இக்கட்டான சூழ்நிலையில் ஐ.நா.மனிதவுரிமைகள் ஆணையத்தின் தீர்மானங்களை இலங்கை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்படுகிறது.

அது தொடர்பில் இன்று வரை எந்த முன்னேற்றமும் இல்லை என்ற கட்டத்தில் இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் வழங்கப்படுகிறது.

பட்டதுயர்களை மறப்பதும் எதிரியின் நாசகாரங்களை நினைப்பொழிப்பதும் கால அசைவில் நடக்கக்கூடியவைதான்.

எனவே வன்னி யுத்தத்தில் நடந்த கொடூரங்கள், அட்டூழியங்கள், மனிதப் படுகொலைகள் என அனைத்தும் கால அசைவில் மறக்கப்பட்டு விடும்- மறைக்கப்பட்டு விடும் என்ற அடிப்படையில் ஐ.நா. தீர்மானத்தை அமுல்படுத்த இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் வேண்டும் என்று இலங்கை அரசு கேட்கிறது.

இரண்டு ஆண்டு கால அவகாசம் வழங்குவதா? இது விடயத்தில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நிலைப்பாடு என்ன? என்றொரு கேள்வியை நல்லவன், பெரியவன் கேட்கவே செய்வான். இதற்கு என்ன பதில் அளிக்க முடியும்.




ஆம், தமிழ்மக்களின் அரசியல்தலைமை இரண்டு வருடகால அவகாசத்தை ஏற்றுள்ளது. கால அவகா சம் வழங்கப்படவேண்டும் எனத் தீர்மானம் எடுத்துள்ளது

## மகிந்தவிடம் கேட்பாரா மைத்திரி

எனப்பதில் கொடுக்கப்பட,

அட! அப்படியா? தமிழர்களின் அரசியல் தலைமையே கால அவகாசத்திற்கு உடன்பட்டிருக்கும்போது மைத்திரியின் நல்லாட்சி நல்லாட்சிதான் என்று வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கருதுவர். அக்கருத்துநிலை இலங்கை அரசுக்கு இரண்டு ஆண்டு கால அவகாசத்தை எளிமையாகக் கொடுத்துவிடுகிறது. கால அவகாசத்திற்கு தமிழ் அரசியல் தலைமை உடன்படுகிறது என்பதை வெளிநாட்டுப் பிரதிநிதிகள் தெரிந்து கொள்வரேயன்றி, தமிழ் அரசியல் தலைமை விலைபோய் விட்டதென்பது தெரியாத விடயமாகவே இருக்கும்.

இவை பற்றி இனிப்பேசிப் பிரயோசனமில்லை. போரில் பாதிக்கப்பட்ட மக்கள் பாவங்கள். காணாமற்போன உறவுகளுக்கு இனி விமோசனம் எதுவும் இல்லை என்பதே நிலைமை.

இவை ஒருபுறம் இருக்க இலங்கை அரசுக்கு வழங்கப்பட்ட கால அவகாசத்தை வரவேற்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில கெட்டவர்கள் தாங்கள் செய்வது கெடுதி என்று தெரிந்திருந்தாலும் தொடர்ந்தும் கெடுதி செய்து கொண்டே இருப்பார்கள். அவர்களைக் காப்பாற்றுபவர்கள் தொடர்ந்தும் அந்தப் பணியைத் தப்பாமல் செய்வர். இந்தத் தத்துவத்தின் அடிப்படையில்தான் கால அவகாசத்தைக் கூட்டமைப்பு வரவேற்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.





ஐ.நா.மனிதவுரிமைகள் பேரவை இலங்கை அரசுக்கு வழங்கிய கால அவகாசத்தை வரவேற்பதாக கூட்டமைப்பு விடுத்த அறிக்கைகூட துரோகத்தனமானது தான்.

இலங்கை அரசுக்குவழங்கப்படும் கால அவகாசத்திற்கு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முண்ணணி (ஈ.பி.ஆர். எல்.எப்.) தனது கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளது. அப்படியானால் கால அவகாசத்திற்கு ஈ.பி.ஆர்.எல்.எப். ஆதரவு இல்லை என்பதே பொருள். கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சியொன்று கால அவகாசத்தை எதிர்ப்பதாகக்கூறும் போது கால அவகாசத்தை கூட்டமைப்பு வரவேற்கிறது என அறிக்கைவிடுவது எந்த வகையிலும் நியாயமாகாது.

கால அவகாசத்தை வரவேற்கவேண்டும் எனக் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமை விரும்புமாயின்- கால அவகாசத்தை வரவேற்று அறிக்கை விடுவதென அவர்கள் இலங்கை அரசாங்கத்திற்கு உறுதி மொழி வழங்கியிருந்தால் தங்கள் பெயர்களை- கூட்டமைப்பில் இடம்பெறும், கால அவகாசத்தை ஆதரிக்கும் கட்சிகளின் பெயர்களை குறித்து தமது ஆதரவை வெளிப்படுத்தியிருக்க வேண்டும்.

இதைவிடுத்து கால அவகாசத்தை வரவேற்பதாக கூட்டமைப்பு அறிக்கை விடுவது கூட்டமைப்பிற்குள் இருக்கக்கூடிய ஒட்டுமொத்தக் கட்சிகளும் வரவேற்பதாகப் பொருள்படும்.

ஆக, அறிக்கையில் கூட கபடத்தனம் என்றால் என்ன செய்யமுடியும்.

சரி, நமக்கு நாமே பகை என்ற திருவாசகத் தத்துவத்தின் படி நாமே நமக்கு பகையானோம் என்று விட்டால்,

இரண்டு வருட கால அவகாசத்தைப் பெற்றுக் கொண்ட இலங்கை அரசு தமிழ்மக்களுக்கு என்ன செய்யப்போகிறது, எதனை வழங்கப் போகிறது என்ற கேள்விகள் நியாயமானவையே.

இந்தக் கேள்விக்கான பதிலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமைதான் வழங்க வேண்டும்.

ஆனால் கால அவகாசத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் அரச் அமைச்சர்கள் சிலர் வெளியிடுகின்ற கருத்துக்களைப் பார்க்கும் போது சீ... இவர்கள் எத்துணை அயோக்கியர்கள் என்றே எண்ணத் தோன்றும்.

ஐ.நாவுக்கு ஒரு முகம்; தென்னிலங்கையில் ஒரு முகம்; தமிழர் தாயகத்திற்கு வந்தால் அதற்கொரு முகம் என்றவாறு எத்தனை மாற்றங்கள்.

கால அவகாசம் கிடைத்தது அவர்களுக்கு ஒரு பெரும் பேறு. எனினும் அதனை வெளிக்காட்டக் கூடாது என்பதற்காக காட்டிக்கொடுத்துவிட்டார்கள் என்று மகிந்த ராஜபக்ஷ தரப்பு வீம்பு பேசுகிறது.


கால அவகாசத்திற்குப் பின்னர் அமைச்சர்கள் சிலர் கூறும் கருத்துக்களுக்கு எதிராகக் கருத்துரைக்க நம்மவர்கள் தயாரில்லை.

சரி மைத்திரி தரப்பாவது; கால அவகாசம் வேண்டாம் என்றால் மின்சாரக் கதிரையில் இருக்கப் போகிறீர்களா? என்றொரு கேள்வியை மகிந்தவிடம் கேட்கலாமல்லவா? அட நீங்கள் நினைப்பது போல எதுவும் நடக்காது. கால அவகாசம் முடியும் கட்டத்தில் எந்தப் பெறுமதியும் இல்லாத ஒரு தீர்வு தரப்படும். அந்தத் தீர்வோடு 2019 ஜெனிவாக் கூட்டத் தொடரில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் உரையாற்றுவார். கூடியிருப்பவர்கள் கைதட்டி கரகோசம் செய்வர். இலங்கை ஒரு நல்ல நாடு என்று விருதும் வழங்கப்படும். அந்தளவோடு தமிழர்கள் நொந்து கெட்டு நூலாகிப் போய் விடுவர். அவ்வளவுதான்.

**விதுரன்**




# பூனைகளைச் சிறைப்படுத்திய எலிகள்



பூனைகள் இல்லா உலகில் யாருக்குக் கொண்டாட்டம்? சொல்லவும் வேண்டுமா? நிச்சயம் எலிகளுக்குத்தான்.

பூனைகள் இல்லாத ஊர் இந்த உலகில் இருக்குமா? இருக்கிறதே.

நளினப்பட்டி என்ற ஊரில் பூனைகளே இல்லை.

இந்தத் தகவலைப் பல நாடுகளில் உள்ள எலிகளுக்கும் கடிதம் மூலம் தெரிவித்தன நளினப்பட்டியில் உள்ள தலைமை எலிகள்.

"அப்படியா?" என ஆச்சரியப்பட்டு அந்த ஊரைக் காண ஆபிரிக்காவில் இருந்து குலி, மாலி என்ற இரண்டு எலிகள் விமானம் மூலம் நளினப்பட்டிக்கு வந்தன.

விருந்தாளி எலிகளுக்குத் தடபுடலாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

அனைவருக்கும் சிறப்பு விருந்து பரிமாறப்பட்டது.

ஒரு பாழடைந்த கோட்டைதான் எலிகளின் கோட்டை.

விருந்தாளி எலிகளும் அங்கு தங்க வைக்கப்பட்டன.

"இந்த ஊரில் பூனைகள் இல்லை என்பதை நாங்கள் எப்படி நம்புவது?" என குலி எலி கேட்டது.

"சந்தேகம் இருந்தால், நீங்கள் ஊரைச் சுற்றிப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்" என்று நளினப்பட்டி எலி தலைவர் பதில் கூறியது.

"அப்படியென்றால் இன்று இரவே நாங்கள் சோதனைக்குத் தயார்" என இரு எலிகளும் உற்சாகமாயின.

இரவில் இரு ஆபிரிக்க எலிகளும் சோதனைக்குப் புறப்பட்டன.

தெருத் தெருவாகச் சுற்றின.

சந்து பொந்துகளில் எல்லாம் எலிகள் ஏறி இறங்கிப் பார்த்தன.

அட! எங்குமே பூனைகள் தென்படவில்லை.

அவைகளுக்கு வெகு ஆச்சரியம்.

"இந்த ஊரில் பூனைகள் இல்லைத்தான்" என்று இரு எலிகளுப பேசிக் கொண்டன.

ஊர்க்கோடியில் ஒரு பாழடைந்த மலைக்கோயில் ஒன்று உள்ளது.

அங்கு மட்டும் ஆபிரிக்க எலிகள் போவதற்கு, நளினப்பட்டி எலிகள் தடை விதித்திருந்தன.

அப்போதுதான் குலி எலிக்கு ஞாபகம் வந்தது.

"அந்த மலைக்கோயிலுக்குச் செல்லக் கூடாது என ஏன் உள்ளூர் எலிகள் தடை விதித்தன?" எனக் குலி எலி, மாலி எலியைப் பார்த்துக் கேட்டது.

(தொடரும்)










# வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள், இல.3,2 ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்) 021 567 1532



பிரபல நடிகை கே.ஆர்.விஜயா பற்றி?

ஜெனிவாவில் இலங்கைக்கு இரண் பாண்டு இலங்கை அரசுக்கு வெற்றி...

தமிழ்நாடு அரசியல் கட்சிகள் பற்றி?

**பாலசிங்கம் — சுழிபுரம்**

தற்போதைய உலகில் அன்பு வழியா ஆயுதவழியா தேவை?

மண் மீட்க ஆயுதம் தூக்கியதால் ஆயிரம் ஆயிரம் என் இனத்து இளைஞர்கள் மண்ணோடு மண்ணாகிப் போய்விட்டார்கள். மண் மீட்புக்காக எம் ஆயுதப்போராட்டம் தோற்கடிக்கப்பட்டது.

1987ஆம் ஆண்டு காந்திய நாட்டிடம் கை நீட்டி திலீபன் அறவழிப் போர் புரிந்தான். இறுதியில் அந்த தியாகி நாவரண்டு துஞ்சித் துடித்து மாண்டுபோனான். இப்போது கூட சில அறவழிப் போராட்டங்கள் நடைபெறுகின் றன. முதலில் நாம் யாருக்கு எதிராக எந்தப் போராட்டத்தை தொடங்குகின்றோம் என்பதை சிந்திக்க வேண்டும். அறம் எடுபடாதவர்களிடம் நாம் அறம்பற்றி பேசி என்ன பயன் சொல்லுங்களேன்.

**வேல்நந்தன் — புலோலி**

தமிழ்நாடு அரசியல் கட்சிகள் பற்றி?

எம்.ஜி.ஆரினால் வளர்க்கப்பட்டு ஜெயலலிதாவினால் கட்டிக் காத்து உச்சத்துக்கு கொண்டு சென்ற இரட்டை இலைக்கு வைக்கப் படுகிறதே உலை. இதைவிட ஏதும் வேண்டுமோ.

**ரஜீவா — அல்வாய்**

வியாசரே தங்களைப்பற்றி சொல்லுங்களேன்?

மகாபாரதக் கதையினை விநாயகர் எழுத எழுத்தாணி உடைந்துவிடுமளவிற்கு வேகமாக வியாசர் கூறுகிறார். மகாபாரதத்தை எழுதிய அந்த விநாயகர் பெயர்தான் இந்த வியாசரின் பெயரும். இதைவிட என்னைப் பற்றி எதுவும் கூறிவிட முடியாது. தங்களின் கேள்விகளுக்கு பதில் எழுதுவதில் நான் மிக்க மகிழ்வடைகிறேன்.

**சியான் — கிளிநொச்சி**

கணவனைப் பிரிந்து வாழும்போது கணவன் இறந்து, அதன்பின் வந்து உருகி அழும் பெண்களைப்பற்றி?

பிரிதல் என்பது புரிதல் இன்றி வருவது. சில வேளைகளில் ஒருவர் உயிர் பிரிந்தவுடன் அந்தப் பிரிவு இவ்வளவு கால புரியாமையை தெளிவுபடுத்திவிடும். தற்காலிக பிரிவு நிரந்தர பிரிவாகிவிட்டதை நினைத்தால் நிச்சயம் உருக்கம் வந்தே தீரும். அதை குறைகூறிப் பயன் இல்லை.

**அகிலேஸ்வரன் — மருதங்கேணி**

வெற்றிலையை மெல்லுவோர் வெற்றி பெறுவார்களா?

வெற்றி பெறுகிறார்களோ இல்லையோ நிச்சயம் புற்றுநோய் பெறுவார்கள்.

**அகில் — உரும்பிராய்**

கடிதக்காதல் கசங்கிப் போவது ஏன்?

இன்றநெற், ஈமெயில், பேஸ்புக்,வைபர் என்று உலகம் எங்கோ போய்க்கொண்டிருக்கிறது. இவன் கடிதத்தை நீட்டுகிறானே போகப்போக என்னென்னத்தை நீட்டுவானோ தெரியாது என்று தான்.

**கஜல் — உடுப்பிட்டி**

காரணமில்லாமல் சிரிக்கும் பெண்களின் சிரிப்பின் அர்த்தம் என்னவோ?

எந்தக் காரண காரியமும் இல்லாமல் ஒரு ஆண் அழப் போகிறான் என்று.

**அன்பு வாசகர்களே!**

அரசியல்,ஆன்மீகம்,அறிவியல், பொழுது போக்கு கேள்விகளை

021 567 1532

எனும் இலக்கத்திற்கு SMS அனுப்பி வையுங்கள்.

**ஜெனனி — கல்வியங்காடு**

பிரபல நடிகை கே.ஆர்.விஜயா பற்றி?

1948ஆம் ஆண்டு நவம்பர் 30ஆம் திகதி பிறந்த தெய்வநாயகி எனும் அழகிய பெண் பிள்ளைதான் பின்னாளில் புன்னகை அரசியாய் தமிழ் சினிமாவை கட்டி ஆண்டவர். 1963 இல் தனது 15ஆவது வயதில் நடிகையாக அறிமுகமாகி 450 படங்களுக்கு மேல் நடித்துள்ள இவர் இன்னும் நல்ல தேக ஆரோக்கியத்துடன் வாழ்ந்துவருகிறார்.

**கரன் — யாழ்ப்பாணம்**

புத்தகத்தைத் தூக்கிப் பிடிக்க மனம் வருவதில்லையே?

இதற்கான பதில் அடுத்த கேள்வியின் பதிலில் உள்ளது கண்ணா.

**பகீர்துசன் — தெல்லிப்பழை**

நல்ல ஜோக் ஒன்று சொல்லுங்கள் வியாசரே?

தகப்பன் :- பகீர்துசன் நீ பரீட்சையில் பாஸ் பண்ணினால் உனக்கு ஒரு சைக்கிள் வாங்கித் தருகிறேன்.

பாஸ் பண்ணவில்லை என்றால் பத்துச் சைக்கிள் வாங்கித் தருகிறேன். அதையாது வைத்துப் பிழைத்துக்கொள்

மகன் :- ???



**ஜெயா — நெல்லியடி**

மகாபாரதம், இராமாயணம் நிஜமாக நடந்தவையா?

சில விடயங்கள் நம்பிக்கை ரீதியானது. அவற்றில் ஆராய்ச்சி செய்வது முறையன்று. காலங்காலமாக நம்பிக்கை என்ற போர்வைக்குள் இருக்கும் இதிகாசங்கள் நடந்தனவா? நடக்கவில்லையா? என்று ஆராய்வதை விட்டு விடுவோம். அவை மனிதனை மனிதனாக வாழ வாழவைக்கின்றன. எம் அடுத்த சந்ததிக்கு அதை, அந்த நம்பிக்கை என்கின்ற கட்டுக் கோப்பு குலையாமல் கையளிப்போமே தயவு செய்து.

**சரன் — யாழ்ப்பாணம்**

ஜெனிவாவில் இலங்கைக்கு இரண்டாண்டு அவகாசம் வழங்கல் இலங்கை அரசுக்கு வெற்றிதானே?

உண்மையில் இது எதிர்க்கட்சித் தலைமைக்குக் கிடைத்த பெரியவெற்றி. இலங்கை அரசுக்கு இரண்டாண்டு கால அவகாசம் வழங்க வேண்டும் என அதிகம் பிரயத்தனம் செய்தவர்கள் அவர்கள்தான்.
அட எதிர்க்கட்சித் தலைமை என்றால் அது தமிழ்த் தலைமை ஆச்சே. நாசமறுக்க எம் இனத்தை கொன்று வதைத்தவர்க்கு நாமே தப்பிக்க வழி வெட்டிக்கொடுத்திருக்கிறோமே. என் அறிவார்ந்த தமிழ்ச் சமூகமே இன்னும் நீ வீட்டுக்குள் தான் இருக்கப் போகிறாயா?

**தமிழ் — யாழ்ப்பாணம்**

அன்புள்ளவர்களை வெறுக்கும் ஜென்மங்கள் திருந்தாதா?

எப்போது மனிதர்களிடத்தே சுயநலம் தொற்றிக் கொண்டதோ அப்போது அன்பு என்பது கிலோக்கணக்கில் பிரித்துக் கொடுக்கும் பொருளாக மாறிவிட்டது.
அன்புக்காக ஏங்குபவர்களை தட்டிக் கழித்து விட்டு போலி வேடம் போடுபவர்கள் பின் திரியும் ஜென்மங்கள் திருந்த வாய்ப்பே இல்லை. அவர்களைப் பொறுத்தவரை உன்னால் 1 கிலோ அன்பு தரப்பட்டால் என்னால் 1/2 கிலோ அன்பு தரப்படும் என்பது மட்டும்தான்.

**காவியா — மீசாலை**

உங்களுக்கு காதல் வந்திட்டுதாமே?


முப்பது வருடங்களின் முன் வந்து விட்டது. இனி சாணேறி என்ன முழமேறி என்ன சறுக்காமல் இருந்தால் சரி.

**சியா — பருத்தித்துறை**

தத்துவம் ஒன்று சொல்லுங்களேன்?

மீதி கொடுத்தா சின்னக்கடை மீதிக்கு பதிலா மிட்டாய் கொடுத்தா பெரியகடை.

# கவிதைக் கலசம்



## வாள் வேண்டாம் வாழ்

சிலை வைப்பாரென
எண்ணாதீர்
சீரழியும் இளைஞரே
வாள்கொண்டு
போர் செய்ய
வாலிபம் என்ன
வரப்பிரசாதமா?
கருவில் உன்னைச்
சுமந்தவளுக்கு
நீ செய்யும்
கைமாறுதான் என்ன?
தன்னை வருத்தி
உன்னை வளர்த்த
தந்தைக்கு
உன் உபகாரம் இதுவா?
தலை வருடி
உச்சி முகர்ந்து
தன்னலமற்ற அன்பைப்
பொழியும் தாயும்
தன் பிள்ளை நீயென
நம்பும் தந்தையும்
எதிர்பார்ப்பது நீ
வாள்வெட்டியாகவும்
வால்வெட்டியாகவும்
வாழாவெட்டியாகவும்
வாழக்கூடாது என்பதையே!

கு.யசிபன்

## உறவைத் தேடி

பற்றி எரிந்த நாட்டிற்கு
இரையானோம்
அடையாளங்கள்
அழிந்துபோக
துன்பதுயரங்களுக்குள்
தடைப்பட்டு
அவமானங்களை
அணைத்துக்கொண்டே
பிறப்பின் உரிமைகளை மறந்து
அலைபுரண்டு ஓடிச்சென்றோம்
அடைக்கலம் தேடிய வண்ணம்
கோபம் புன்னகை மறந்து
வீரத்தில் திறன்களை இழந்து
அச்சவாழ்க்கை முற்றுகையிட
சொந்த மண்ணில்
முகத்தை புதைத்து
மரணத்திற்கு
வரவேற்பளித்தோம்
இனி இழப்பதற்கு
எதுவுமில்லாமல்
நெஞ்சில் ரவைகளின்
அடையாளம் பதித்து
குண்டுகளின் முழக்கம்கேட்டு
இரத்த மழைகளில் நனைந்து
அழுவதற்கு கண்ணீர்
இல்லாமல்–இன்று
அலைந்து கொண்டிருக்கின்றோம்
காணாமல்போன
உறவுகளைத் தேடிய படி...

முல்லை அன்ரன்

## காதலர் தினமாய்...

கனமும் மறவாமல்
நீ– என்
நினைவுகளில் நிறைகின்றாய்!
எனக்கும் உனக்குமான
நேசங்கள்
ஜென்மங்கள் மாறினாலும்
மாறாதது...!
அத்தகைய நேசத்தை
பகிர்ந்திட
ஒருநாளை வரையறுப்பதில்
உடன்பாடில்லை
எனக்கு!
வா காதலா...
தினமும் காதலர் தினம்
கொண்டாடிடலாம்

ஜெ.சிந்து

## சீ்சீ...

அந்தோ
தலையில் அடித்துக் கொள்கிறான்
தமிழன்!
விலை போனவர்களால்
தமிழர் நிலை மாறியதே!

தேடிச் சென்ற மூலிகை
காலில் சிக்கியதுபோல்
ஐ.நா. எம்மைக் கண்டு கொண்டது

எம் இனத்தை கருவறுத்தவர்
கழுத்தில் கயிறிடும் காலம்
நெருங்கியது என்று நிம்மதித்தோம்

நடந்ததோ வேறு!
ஒட்டுமொத்த தமிழினத்தின்
விருப்பையும் புறந்தள்ளி
இன்னும் இரண்டு வருடம்
இதற்கு இணங்கியது
தமிழ்த் தலைமை

இறைவா!
இதை நிட்டுரம் எதுவுமுண்டோ

தாய் தந்தையை இழந்த பிள்ளை
அநாதை(யாய்) இல்லத்தில் தவிக்கிறது
மனைவி பிள்ளைகளை பிரிந்து
தந்தை சிறையில் வாடுகிறான்

அரக்கர் கொட்டிய குண்டில்
இலட்சக்கணக்கில் என்னினம்
மாண்டுபோன கதையை
மண்மூடி மறைத்திட நினைக்கும்
மாண்புமிகு சீமான்களே
உங்கள் மனக்கதவுகளை
சற்றுத் தட்டித் திறந்திடுங்கள்

விலைபோகும் என்னினத் தலைமையே!
விலைபோகா தலைவர்கள்
வரிசையில் நீங்களுமா?
ச்சீ ச்சீ...

மாவை. நா.கஜேந்திரன்

# மௌனத்தின் தேடல்– 346



## ஏழைத்தாய்

உழைத்து உருக்குலைந்த மேனி
உட்கார்ந்து தண்ணீர்
பருகி வா நீ
உற்றார் உதவியற்ற
ஏழைத்தாய் நீ
உனக்கு யார்
இங்கே உதவி
உழைத்தால் தான்
உணவு என்ற
உன் நிலை போக்கி
உயர்வளிக்க யாரிங்கே
உன்னை நம்பி
உழைத்து வாழும்
உந்தன் வாழ்வு
உந்தன் கையில்
இரவும் பகலும்
மாறும் உலகில்– அதுபோல்
உயர்வும் தாழ்வும்
மாறும் வாழ்வில்

சி.திவ்வியா
யா.ப.மெ.ம.வி

## நம்பிக்கை

தண்ணீர்
தாகம் மட்டுமல்ல
எங்களின் எல்லா
தாகத் தீர்ப்புகளும்
இனிமேல்
நம் கையில்தான்?

தேன்நிலா
நல்லூர்

## ஏழையின் பசிப்பிணி

நாக்கு வரண்டிட
தலைகள் கிறுகிறுக்க
வெந்தெடுக்கும் வெயிலில்
வியர்வைத் துளிகளைப்
பிரசவித்து
காய்கின்றாய் வயல்வெளியில்
கால் வயிறு கஞ்சியுடன்
குடும்பப் பசிப்பிணியைப்
போக்கிடவே...

செ.வினுஷா
யாழ்.பல்கலைக்கழகம்

## உழைக்கும் உத்தமர்கள்

வாழப்பிறந்த பூமியில் இறைவன்
வாழ வகுத்த வழி ஏராளம்
பிறர் கையை நம்பாமல்
தன் கையை நம்புபவன் இறைவன்
படைத்த அற்புதமான
அறநெறிச்செல்வர்கள் ஆவார்
உச்சி வெயில் தன்
உச்சிதனைப் பிளந்தாலும்
வாடைக்காற்றினில் உடல்
மெலிந்து போனாலும்
சேற்றிலே கால் வைத்து
தனக்கும் பிறருக்கும் உழைக்கும்
உத்தமர்களின் தியாகத்தை
பிறர் எள்ளி நகைப்பரோ இல்லை
சிரமேற்றிப் போற்றுவரோ
இத்தனையாம் அறியாத இவர் வாழ்வை
வானோங்கிப் பாட வாருங்கள் எம் மக்களே!

ஜெ.அனோஜினி
யா/உ.ம.க

## உழைப்பே உயர்வு தரும்

கொளுத்தும் வெயிலில் உறக்கமின்றி
வயது முதிர்ச்சியிலும் மனம்தளராது
விடா முயற்சியுடன்
வியர்வைத்துளிகள்
சிந்தும் உன்னதமான தாயே
உன் களைப்பை போக்க
நீரை ருசிக்கிறாய்
ஆயிரம் மக்களின் பசியை தீர்ப்பது
உன் உழைக்கும் கரங்களல்லவா
உன் பணியை வாழ்த்துகிறோம்

சி.பிரியங்கா
மட்டுவில் தெற்கு

## விவசாய பயணம்

இயற்கை விஞ்ஞானம்
முடிவில்லாத அர்த்தமற்ற பயணம்!
இயற்கை விவசாயம்
ஆத்மாக்களின் விடிவின் பயணம்!
எனவே , உயிர் மடியாதிருப்பதற்காக
விடிவிற்காகவும் கடின உழைப்பின்
விவசாயத்தை மேற்கொள்ள
விவசாயி பெண் ஒருவர்
நெல் அரிசி உணவே பசி தீர்க்கும்
என சித்தரிக்கும் , கஞ்சி குடிக்கும்
காட்சியுடன்! காட்சி!

சி.சுகிர்தமலர்
உரும்பிராய்

## அழைப்பை ஏற்றது உழைப்பு

காணாமல் ஆக்கப்பட்டாரோ
கடலலையால்
காவு கொள்ளப்பட்டாரோ
குடும்பத் தலைவன்!
அன்று விதி வரைந்திட்ட
வெற்றிடத்தில் இருந்தே– தலைவி
அழைப்பு விடுத்தால்
உழைப்புக்கு– உதவிக்கு வரச்சொல்லி
வாழ்க்கைச் சாலையில்
வறுமை நடந்த
தடமறிந்திடவே!!

அராலியூர்
சோ.சிவகுமாரன்

# மௌனத்தின் தேடல் –347



**அன்பு வாசகர்களே !**


உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 29.03.2017ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# குரங்குகள் படிக்க பள்ளிக்கூடம்





'ஏண்டா இப்படிக் குரங்கு சேட்டை பண்ற? முதல்ல உன்னை பள்ளிக்கூடத்தில சேர்த்தாதான் எனக்கு நிம்மதி' குழந்தைகளைத் திட்ட அம்மாக்கள் பயன்படுத்தும் வார்த்தைதான் இது. அட குரங்குச் சேட்டை பண்றவங்களை மட்டுமா? குரங்குகளையே பள்ளிக்கூடத்தில சேர்க்குறாங்கப்பா... இங்கே இல்லை, இந்தோனேசியாவில்.

ஓராங்குட்டான் வகை குரங்குகளுக்கு பொதுவாகவே மற்ற விலங்குகளைவிடத் தாய்ப்பாசம் அதிகம். இந்தவகைக் குரங்குகள் பிறந்து ஏழு, எட்டு ஆண்டுகள் வரையிலும் அம்மாவுடனேயே சுற்றும். இவை தன் அம்மாவைப் பார்த்து, அதன் செய்கைகளைக் கவனித்து, அவற்றை பாவனை செய்துதான், சாப்பிடுவது... மர மேறுவது எனப் பல்வேறு விடயங்களைக் கற்றுக் கொள்கின்றன. சில நேரங்களில் அம்மாவை இழந்துவிட்ட அல்லது தவறவிட்ட குரங்குகள் சரியான வளர்ச்சியின்றி இறந்து விடுகின்றன.


இரண்டாண்டுகளுக்கு முன்பு, இந்தோனேசியாவுக்கு அருகிலுள்ள ஒரு காட்டில் தாய் இன்றித் தவித்து வந்த ஓராங்குட்டான் குரங்கு ஒன்றை 'இன்டர்நஷனல் அனிமல் ரெஸ்க்யூ' **(International Animal Rescue)** அமைப்பு மீட்டது.

அந்த குரங்குக்கு அசோகா என்று பெயர் வைத்துப் பராமரித்தது. அதற்கு தானாகவே உணவைச் சாப்பிடுவது போன்ற சில பயிற்சிகளை தரத் தொடங்க, அந்த அமைப்பைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு யோசனை தோன்றியது.

'இது போல காட்டுக்குள் தாயின்றி வளரும் ஓராங்குட்டான் குரங்குகளைக் காப்பாற்றி அவற்றுக்கென்று ஒரு பள்ளிக்கூடம் நடத்தினால் என்ன?' உடனடியாக அசோகா போன்ற ஆறு ஓராங்குட்டான் குரங்குகளைத் தேடி அவற்றை மீட்டு, வெஸ்ட் கெட்டா பாங்க் காட்டுக்குள் அவற்றுக்கென ஒரு பள்ளியைத் தொடங்கினர்.


'என்ன சாப்பிட வேண்டும்? என்ன சாப்பிடக்கூடாது? தாவுவது, ஓடுவது, மரமேறுவது எப்படி? காட்டுக்குள் என்னென்ன ஆபத்துகள் இருக்கும்? அதிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வது எப்படி?' எனப் பல்வேறு பயிற்சிகள் அந்த குரங்குகளுக்கு அளிக்கப்படுகின்றன. தற்போது 102 குரங்குகளுக்கு அந்த பள்ளிக்கூடத்தில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மரத்தின் உச்சியில் சென்று விளையாடுவது எப்படி என்பதுதான் இந்தக் குரங்களுக்கு முழு ஆண்டுத் தேர்வு மாதிரி. அதன் பிறகு, இந்தக் குரங்குகள் மீண்டும் காட்டுக்குள்ளேயே விடப்படும்.

சுட்டிகள் படிக்கும் பள்ளிக் கூடத்திலேயே வால்தனங்கள் அதிகம் இருக்கும். இந்தக் குரங்குகள் படிக்கும் பள்ளிக்கூடம் சொல்லவா வேண்டும்.




## நீரில் நடக்கும் பல்லி!

பாசிலிஸ்க் **(Basilisk)** எனப்படும் பச்சை நிறப் பல்லியினால், தண்ணீரில் நடக்க முடியும். இது, மத்திய மற்றும் தென் அமெரிக்காவின் மழைக் காடுகளில், ஆறுகள் மற்றும் ஓடைப் பகுதிகளில் வாழ்கின்றன. இது, நீரில் மூழ்காமல் நடக்கும். எப்படி என்றால், இந்த வகைப் பல்லியின் கால்கள், தன் எடையைச் சமமாக நீரில் பரப்பும். மிக வேகமாகச் செல்லும். 400 மீற்றர் நீளம் உள்ள ஏரியையும் மூழ்காமல் கடந்துவிடும். இந்த பச்சைப் பல்லியின் வாலின் நீளம், உடலில் முக்கால் பங்கு இருக்கும். பூச்சி, எறும்பு, முட்டை மற்றும் சிறு மீன்களை உட்கொள்ளும்.



## தேள் பண்ணை!

உலகில் தேள் பண்ணைகள் உள்ள ஒரே நாடு, கியூபா. இந்த நாட்டில் 2006ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு மாகாணத்திலும் தேள் பண்ணைகளை ஆரம்பித்து, நவீன முறையில் விஷத்தைச் சேகரிக்கிறார்கள். தேளின் விஷம், முக்கியமான மருந்துகள் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகிறது. கியூபா நாட்டின் தேள் விஷம், அந்த நாட்டின் வணிகத்திலும் முக்கிய பங்காற்றுகிறது.



## காகிதப் பாலம்!

சீனாவின் சுஸொவ் **(Susov)** பகுதியில், ரேஞ்ச் ரோவர் கார்களின் 45ஆவது ஆண்டு கொண்டாட்டத்துக்காக மூன்றே நாட்களில் காகிதப் பாலம் ஒன்று உருவாக்கப்பட்டது. அதன் மீது ரேஞ்ச் ரோவர் காரை விளம்பரத்துக்காக நிறுத்தியுள்ளனர். முழுவதும் மறுசுழற்சியில் உருவாக்கப்பட்ட காகிதங்களே பயன்படுத்தப்பட்டுள்ளன. மொத்தம் 2,374 கிலோ எடையில், 5 மீற்றர் நீளத்துக்கு உருவாக்கப்பட்ட இந்தப் பாலத்தின் காகிதங்கள் பசையாலோ, போல்ட்டுகளாலோ இணைக்கப்படவில்லை, காகிதங்களை நெருக்கமாக அடுக்கிவைத்தே உருவாக்கப்பட்டுள்ளது.

## தண்ணீர் உறிஞ்சும் வீதி!



இங்கிலாந்தில் உள்ள டார்மாக் **(TARMAC)** என்ற கட்டுமானப் பொருட்களைத் தயாரிக்கும் நிறுவனம், 'டாப் மிக்ஸ் பெர்மிபல்' எனும் புதிய வகை கொங்கிறீட் கலவை ஒன்றைத் தயாரித்துள்ளது.

இந்தக் கலவையால் போடப்படும் வீதிகளில் 4,000 லீற்றர் தண்ணீரை ஊற்றினாலும், ஓரிரு நிமிடங்களில் பூமிக்குள் உறிஞ்சப்பட்டுவிடும். கொங்கிறீட் வீதியின் அடிப்பகுதியில், பெரிய கூழாங்கற்களையும் கொங்கிறீட் துண்டுகளையும் போடுகிறார்கள். அதனால், தண்ணீர் கீழ் நோக்கி உறிஞ்சப்பட்டு, அடிப்பகுதியை அடைந்து விடுகிறது. நடைபாதைகள், தெருக்கள் மற்றும் பார்க்கிங் பகுதிகளில் மழைநீர் தேங்குவதை இதன் மூலம் தவிர்க்கலாம் என்பதால் இது நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.




# ஈனப்பிழைப்பு

ம்!.....

என்னையறியாமலே நிம்மதிப் பெருமூச்சு ஒன்று வெளியாகிறது. காலை ஏழு மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்ட நான், இப்போதுதான் வைத்தியசாலையிலிருந்து வெளியேறுகிறேன்.

மணிக்கட்டை உயர்த்தி நேரத்தைப் பார்க்கிறேன் சரியாக 12.10ஐக் காட்டுகிறது கைக்கடிகாரம். நான் போகவேண்டிய பஸ் 12.30க்குப் புறப்படும் அதைப் பிடித்துவிட்டால் நேரத்துக்கு வீட்டிற்குப் போய்விடலாம். கால் அடிகளை சற்று வேகமாக எடுத்து பஸ்தரிப்பை அடைகிறேன். அ...அதோ... நான் போக வேண்டிய பஸ் நிற்கிறது. சன நெரிசலிடையே புகுந்து ஒருவாறு பஸ்ஸில் ஏறியதும் பார்வையைச் சுழற்றுகிறேன். எல்லா இருக்கைகளும் நிரம்பியிருந்தால் என்ன செய்வது என சங்கடத்துடன் தயங்கி நின்றேன்.

நான் ஒரு நீரிழிவு நோயாளி. மாதந்தோறும் கிளினிக்குக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு வந்து போவது வழக்கம். இந்தத் தள்ளாத வயதில் பஸ்ஸில் நின்று பயணம் செய்வது என்னால் இயலாத காரியம். என்ன செய்யலாம் என தீவிரமாக யோசித்தேன். இதில் பயணித்தால் நேரத்தோடு வீட்டிற்குப் போய்விடலாம். இதைவிட்டால் அடுத்த பஸ் 1.30க்கு தான் வெளிக்கிடும். எனது மனப்போராட்டத்தைப் புரிந்து கொண்டானோ... அல்லது புறத் தோற்றத்தைக் கண்டு மனம் இளகினானோ தெரியவில்லை. மூன்றாவது சீற்றில் அமர்ந்திருந்த ஒரு இளைஞன் எழுந்து நின்று எனக்கு இடம் கொடுத்தான்.

"ஐயா! இப்பிடி இந்த சீற்றிலை வந்து இருங்கோ"

அவனுக்கு நன்றி சொல்லிவிட்டு, நான் அந்த இருக்கையில் அமர்ந்து கொண்டேன். மனிதம் இன்னும் மரித்துப் போகவில்லை மனம் நினைத்துக் கொண்டது. பஸ் நடத்துநர் இன்னமும் வந்து பயணச்சீட்டுக்களைக் கொடுக்கத் துவங்கவில்லை. வெளியே எறிக்கும் வெயிலின் வெப்பம் பஸ்ஸின் தகரங்களில் பட்டுத் தெறித்ததனால் உள்ளே இருந்த பிரயாணிகள் புழுக்கத்தினால் துடித்தனர். ஓட்டுநரையும் நடத்துநரையும் மனதளவில் சபித்தனர்.

இதற்கிடையில் பஸ்ஸிற்குள் சில்லறைப் பொருட்களை விற்கும் வியாபாரிகள் வேறு. குழந்தைகள் இனிப்பு வகைகளைக் கண்டதும் அதனை வாங்கித் தருமாறு அடம்பிடிக்க, சில பெற்றோர் வாங்கிக் கொடுத்தனர். ஒரு சிலருக்கு அது பிடிக்கவில்லை 'வாயைப் பொத்திக் கொண்டு வீட்டவா உன்னைக் கவனிச்சுக் கொள்ளுறன்' தாயின் கண்டிப்பு பிள்ளைக்குப் பிடிக்கவில்லை. அது சிணுங்கத்தொடங்கியது. ஏன் இப்ப அழுகிறாய்?.

"நீங்கள் ஏன் கிள்ளினனீங்கள் "



இப்படியாக எனக்கு மறுபுறத்திலிருந்த இருக்கையில் சுவாரஸ்யமாய்ப் போய்க் கொண்டிருந்தது சம்பாஷணை. இதில் லயித்திருந்த நான் அப்போதுதான் கவனித்தேன். பஸ்ஸின் முன் வாசற்படியூடாக ஒரு இளம் பெண் கையில் குழந்தையுடன் ஏறினாள். அவளது கண்களில் ஒரு மிரட்சி. பார்வையை ஒருதரம் முன் இருக்கையிலிருந்து கடைசி இருக்கைவரை சுழல விட்டவள், மெதுவாக முன்னால் இருந்தவர்களிடம் கையை நீட்டி,

"அம்மா" தர்மம் போடுங்க... ஐயா தர்மம் போடுங்க" என்று குரல் கொடுத்தாள். முன்னால் இருந்தவர்களோ அவளை ஏறெடுத்தும் பாராது தமது பார்வையை வேறெங்கோ திருப்பிக் கொண்டனர்.

சிறிது நேரம் தாமதித்தவள் அடுத்த இருக்கையிலிருந்தவர்களிடம் திரும்பினாள். "ஐயா பிள்ளைக்குப் பசி ஏதும் தாங்கோய்யா" மீண்டும் அவர் முன் கையை நீட்டினாள். அவளை ஒருதரம் ஏறெடுத்துப் பார்த்த அந்த நடுத்தர வயதுடையவர் கேட்டார்,

" ஏனம்மா உனக்கு கைகாலெல்லாம் நல்லாய்த்தானே இருக்கு. இதை விட்டிட்டு ஏதும் தொழில் செய்து பிழைக்கலாமே..."

தலையைத் திருப்பிக் கொண்டவள் மற்றைய வரிசைக்குத் தாவினாள். அந்த மனிதர் சொன்னதுபோல் அவள் நல்ல வாட்டசாட்டமாகத்தான் இருந்தாள். சற்றே அழுக்கான சேலை அணிந்திருந்தாள். தலைமுடியை உயர்த்தி ஒரு சிறு கொண்டை. பிள்ளையும் தலைமயிர் கலைந்திருந்தாலும் உடல் அளவுக்கு மீறிய சட்டையுடன் பார்ப்பதற்குச் சுமாரான தோற்றத்தைக் கொண்டிருந்தது. அதுவும் தன் பங்கிற்கு கையை நீட்டியதைப் பார்க்க எனக்கு மனதுக்குள் ஒரு குமைச்சல். மெதுவாக எனது சட்டைப்பைக்குள் கையை விட்டுத் துழாவினேன். இருபது ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து அவளிடம் நீட்டினேன்.

கையில் அதை வாங்கிக் கொண்டவள் என் முகத்தைப் பார்த்துக் கைகூப்பினாள். பிள்ளையும் அதனைப் பின்பற்றிய போது எனக்கு ஆச்சரியமாய் இருந்தது. வேறு சிலரும் பத்து ரூபா, ஐந்து ரூபா நாணயங்களைக் கொடுத்தனர். ஓரிருவர் சில்லறை இல்லை என்று சொல்லிக் கைவிரித்தனர்.

நான் கொடுத்த பணத்தில் பிள்ளைக்குப் பசி போக்க எதையாவது வாங்கிக் கொடுப்பாள் என நினைத்து என் மனம் ஆறுதல் தேட முற்பட்டது. அவள் பின் வாசலால் பஸ்ஸை விட்டு இறங்கிப்போனாள்.

"ஒரு ஐம்பது ரூபாயாவது தேறியிருக்கும். என் மனம் அவளது வருவாயை எடை போட்டது. அந்தச் சமயத்தில் பார்த்து என் உடலில் ஒரு உபாதை தலைகாட்டியது. அது வேறொன்றுமல்ல. இயற்கைக் கோளாறுதான். உடனடியாக நான் சிறுநீர் கழிக்கவேண்டிய அவசரம். வயது போன காலத்தில் இவற்றையெல்லாம் பேந்து ... பின்னே என்று அலட்சியப்படுத்த முடியாத நிலை. மெதுவாக பஸ்ஸை விட்டு இறங்கி பொது மலசலகூடத்தை நோக்கி நடந்தேன்.

அந்தப்பெண் என் முன்னால் போய்க் கொண்டிருந்தாள். குழந்தை தாயைச் சுரண்டி "அங்கையம்மா அப்பா..." என்று சொல்லி எதிர்ப்புறத்தைச் சுட்டிக்காட்டியது. அவள் குழப்பமடைந்ததை அவதானித்த நான், எனது அவசரத்தையும் மறந்து நின்று நிதானமாக அவளை ஆராய முற்பட்டேன். இந்த மனமே ஒரு விசித்திரமானதுதான். மற்றவர்களைப் பற்றி ஆராய்ச்சி நடத்துவதால் என்ன பலன்தான் கிடைத்துவிடப் போகிறது. வீணாக நேரத்தை விரயம் செய்வதுதான் மிஞ்சும். இருந்தாலும் என்னுள் ஒரு குறுகுறுப்பு.

அவள் குழந்தை சுட்டிக்காட்டிய சந்து நோக்கி நடந்தாள். நானும் வந்த வேலையை மறந்து அவள் போன திசையில் திரும்பி நடந்தேன்.

எனக்கு ஏன் இந்த வேவு பார்க்கும் வேலை என நான் என்னையே கேட்டுக் கொண்டாலும் கால்கள் நடந்து அவ்விடத்தை நெருங்கிவிட்டன. அவன், அவளது கையிலிருந்த பணத்தைப் பறித்ததுடன் அவளது நெஞ்சுச் சட்டைக்குள்ளும் கையைவிட்டுத் தடவி எடுத்துக்கொண்டான்.

"ஐயோ! பிள்ளைக்குப் பசி. ஏதாவது வாங்கிக் குடுக்கவேணும்" அவள் வாய்விட்டு அரற்றினாள். பெரிதாகச் சத்தம் போட்டால் அவளது தொழிலுக்கே ஆபத்து வந்துவிடுமே என்ற இங்கிதத்துடன் வாய்க்குள் எதையோ புறுபுறுத்தாள்.

அவன் வேகமாக தெருவில் இறங்கி நடந்தான். எனக்குவிளங்கி விட்டது. மதுபானசாலை இருக்கும் வீதி அந்தப் பக்கம்தான் இருக்கிறது. அவளைத் திரும்பிப் பார்த்தேன். முகம் வாடியிருந்தது. வவுனியாவிற்குப் புறப்படும் பஸ்ஸை நோக்கிப் போய்க்கொண்டிருந்தாள்.

இப்போதுதான் இயற்கையின் உபாதை மறுபடியும் எனக்கு உறைத்தது. அவசர அவசரமாக மலசலகூடத்தை நோக்கி நடையைக் கட்டினேன்.

அப்பாடா! இப்போதுதான் என் உடம்பே இலேசாகிவிட்டது போன்றதோர் உணர்வு. அதேசமயம் மற்றுமோர் பிரச்சினை தலைதூக்கியது.

எனது வயிற்றுக்குள் ஒரு பிசைவு. சிறிது சிறிதாக அது அதிகரிப்பதற்கான அறிகுறி தென்பட்டது. பெருங்குடல் சிறுகுடலையே விழுங்கிவிடும் போல் பசி வயிற்றைப் புரட்டி எடுக்கத் தொடங்கியது.

அதிகாலையில் நான் மெற்போமின் குளிசைகளைப் போடுவதற்காக இரண்டு இடியப்பங்களை சாப்பிட்டுவிட்டுப் புறப்பட்டது. இப்போது மணி 12.40 ஐக் காட்டியது. எனது பஸ்ஸும் போய்விட்டது. இனி 1.30 இற்குத்தான் பஸ். அதுவரை இந்த நீரிழிவு உடம்பு பசியைத் தாங்காது.

ஒரு நல்ல சைவ ஹோட்டலாகப் பார்த்துப் போய் வடையும் சாப்பிட்டு சீனி போடாமல் ஒரு ரீயும் சாப்பிடலாம் என நினைத்துக் கொண்டேன்.

நான் ஹோட்டலின் வாசலில் காலடி எடுத்து வைத்தபோது அந்தப் பெண்ணை அந்த ஹோட்டல் வாசலில் கண்டேன். கல்லாவில் இருந்தவர் அவர்தான் ஹோட்டலின் முதலாளியோ அல்லது காசாளரோ தெரியவில்லை. அவரிடம் கெஞ்சிக் கொண்டிருந்தாள்.

"ஐயா! பிள்ளைக்குப்பசி ஏதும் சாப்பிடக் குடுங்கோய்யா"

அவர் அவள் மீது சீறி விழுந்தார்.

"சீ... போ அங்காலை. வாடிக்கையாளர் வாற நேரத்தில கடைக்கு முன்னால நிண்டு கொண்டு"

முகத்தைத் தொங்கப்போட்டுக் கொண்டு அவள் போனாள். என்னை அவள் கவனிக்கவில்லை. அந்தக் குழந்தைக்கு ஏதாவது வாங்கிக் குடுக்க வேணும் என்று மனம் குறுகுறுத்தது. அது அதிகப் பிரசங்கித்தனம் என மூளை அறிவுறுத்தியது. எனவே நான் உள்ளே போய் இருக்கையில் அமர்ந்து கொண்டேன்.

பரிசாரகன் நான் கேட்டுக் கொண்டவாறே இரண்டு வடைகளைக் கொண்டு வந்து வைத்தான். நான் அதைச் சம்பலில் தொட்டு சாப்பிட்டு முடித்தேன். வயிற்றுக் கொதிப்பு அடங்கியது. அதற்கான பணத்தைச் செலுத்திவிட்டு இரண்டு வடைகளைப் பொதியாகக் கட்டிக்கொண்டு கடையை விட்டுப் புறப்பட்டேன்.

சில சமயம் அந்தப் பெண் எங்காவது எனது கண்ணில் தென்பட்டால் இதைக் குழந்தைக்குக் கொடு என்று சொல்லிக் கொடுத்துவிடலாம் என்றொரு நப்பாசை எனதுள்ளத்தில் துளிர்த்துக் கொண்டிருந்தது.

முன்பு எதேச்சையாக என் கண்ணில் பட்டுக்கொண்டிருந்தவள் இப்போது நான் வலிந்து தேடியும் அகப்படவில்லை. என்னுடைய பஸ் சரியாக 1.30 இற்குப் புறப்பட்டு விட்டது.

யாழ்.நகர சாலைகளில் பஸ் ஊர்ந்து கொண்டிருந்தது. நான் சாளரத்தினூடாகப் பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்தேன். சட்டென எனது கண்களில் ஒரு காட்சி மின்னலெனத் தோன்றி மறைந்தது.

ஒரு கடையின் முன் வாசற்படிக்கட்டில் அந்தப் பெண் அமர்ந்திருந்தாள். அவளது பிள்ளை அருகில் இருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. யாரோ ஒருவர் அவரைக் கைகாட்டி அவளை விரட்டிக் கொண்டிருந்தார். நிச்சயம் அவர் அந்தக் கடையின் சொந்தக்காரராய் இருக்கவேண்டும்.

எனது மடியில் வைத்திருந்த வடைப் பொதி கனப்பதை என்னால் உணர முடிந்தது. கூடவே எனது மனமும்தான்.

மலரன்னை

# மீறப்பட்ட வாக்குறுதிகள்...

2015ல் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவின் தலைமையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு இலங்கை இணை அனுசரணை வழங்கியதன் மூலம் அனைத்துலக அமைப்பின் நம்பகத்தன்மையைப் பெற்றுக் கொண்டது.

ஜெனிவாவில் இலங்கையால் வழங்கப்பட்ட வாக்குறுதிக்கு ஏற்ப, தற்போதைய இலங்கை அரசாங்கமானது நாட்டில் காணப்பட்ட உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றியதுடன், இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த பொதுமக்களின் நிலங்களையும் விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தது.






2015இல் நிறைவேற்றப்பட்ட பேரவையின் தீர்மானத்தில், போரின் போது இடம்பெற்ற மீறல்கள் தொடர்பாக குறிப்பாக இறுதிக்கட்ட யுத்தத்தில் 40,000 வரையான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் நீதி மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்காக அனைத்துலக நீதிபதிகள் மற்றும் வெளிநாட்டு வல்லுநர்களை உள்ளடக்கிய நீதிப் பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

அனைத்துலகச் சட்டத்தின் பிரகாரம், 'மனிதாபிமானத்திற்கு எதிரான போர்க்குற்றங்கள் இனப்படுகொலை எனவே வரையறுக்கப்பட்டுள்ளது. போர்க்குற்றங்கள் தொடர்பில் உள்நாட்டு நீதிப் பொறிமுறைகள் ஒருபோதும் வெற்றியளிப்பதில்லை.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் என்பது இலங்கை அரசால் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட குற்றங்களாகும். ஆகவே அனைத்துலகக் குற்றங்களின் அடிப்படையில் இலங்கை அரசே போர்க்குற்றவாளியாகக் காணப்படுகிறது. இந்நிலையில் கம்போடியா, கிழக்குத் தீமோர், கொசோவோ, சியராலியோன் போன்ற நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட கலப்பு நீதிமன்றங்கள் மற்றும் விசாரணைகள் போன்றே இலங்கை தொடர்பிலும் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என கருதப்படுகிறது' என ஐ.நா. மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் செயிட் ராட் அல்ஹூசைன் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்துலக நீதிபதிகள், பாதுகாப்பு சட்டவாளர்கள், சட்டத்தரணிகள், விசாரணையாளர்கள் போன்றோரை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றம் ஒன்று உருவாக்கப்பட்டு இலங்கையில் இடம்பெற்ற மீறல்களில் அனைத்துலக மனித உரிமைச் சட்டம் மற்றும் போர்க் குற்றங்கள் போன்றன எவ்வாறு மீறப்பட்டுள்ளன என்பது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் இது தொடர்பில் இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மார்ச் 3 அன்று இடம்பெற்ற ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 34ஆவது கூட்டத்தொடரின் விவாதத்தின் போது அல் ஹூசைன் வலியுறுத்தினார்.

இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் எனவும் வர்த்தக மற்றும் பொதுமக்களின் ஏனைய நடவடிக்கைகளில் இலங்கை இராணுவத்தினர் தலையீடு செய்வது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் ஐ.நா. மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் அலுவலகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள் மற்றும் ஏனைய மனித உரிமை மீறல்கள் போன்றன தடைசெய்யப்பட்டுள்ளன என்பதுடன் இவ்வாறான மீறல்கள் இடம்பெறுமாயின் அவை தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு தண்டனை வழங்கப்படும் என இலங்கை இராணுவ, புலனாய்வு மற்றும் பொலிஸ் ஆகியவற்றின் அனைத்துப் பிரிவுகளுக்கும் இலங்கை அரசாங்கம் உடனடியாக அறிவித்தல் விடுக்க வேண்டும் என மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளரின் அலுவலகத்தால் விடுக்கப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அனைத்து வகையான கண்காணிப்புக்கள், சித்திரவதைகள் மற்றும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், பாதிக்கப்பட்டவர்கள், சமூக ஆர்வலர்களுக்கு எதிரான திட்டமிட்ட பழிவாங்கல்கள் போன்றன உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என அனைத்துப் பாதுகாப்புப் படையினருக்கும் அரசாங்கம் கட்டளை வழங்க வேண்டும் எனவும் உயர் ஆணையாளரின் அலுவலகம் இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளது.

நாட்டில் இடம்பெற்ற இனப்படுகொலை மற்றும் பலவந்த காணாமற் போன சம்பவங்கள் தொடர்பாக விசாரணை முன்னெடுக்கப்படுவதுடன், இவ்வாறான மீறல்களில் ஈடுபட்டவர்கள் மற்றும் இதற்கான கட்டளைகளை வழங்கிய பொறுப்புநிலை அதிகாரிகள் போன்ற அனைவரும் எவ்வித பாரபட்சங்களுமின்றி நீதியின் முன் நிறுத்தப்படவேண்டும் எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணை செய்வதில் இலங்கை அரசாங்கம் மேலும் காலத்தை இழுத்தடிப்புச் செய்வதாகவும் இது நாட்டில் நிலையான அமைதி மற்றும் நிலைத்தன்மையை எட்டுவதில் அச்சுறுத்தலாக அமையும் எனவும் அல் ஹூசைன் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கமானது சில சட்ட சீர்திருத்தங்களை மேற்கொண்டுள்ளதுடன், நல்லிணக்கம் தொடர்பில் நல்லெண்ண சமிக்ஞைகளைக் காண்பிப்பதாகவும், ஆனால் இதுவரை முன்னெடுக்கப்பட்டுள்ள நகர்வுகள் திருப்திகரமானதாக இல்லை எனவும் ஒத்துழைப்பு அற்றதாகவும் காலத்தை இழுத்தடிப்பதாகவும் உள்ளதாக அல் ஹூசைன் எச்சரித்துள்ளார்.

அனைத்துலக நீதிபதிகள் மற்றும்சட்டவாளர்களைக்கொண்ட சிறப்பு போர்க்குற்ற விசாரணை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என உயர் ஆணையாளர்கோரிக்கை விடுக்கின்ற போதிலும் ஏற்கனவே இதனை இலங்கை அரசாங்கம் மறுத்துள்ளது. இக்கோரிக்கை அடங்கிய பேரவையின் தீர்மானத்தை ஏற்றுக் கொண்ட போதிலும் இதனை இன்னமும் நடைமுறைப்படுத்தவில்லை.

கலப்புநீதிப் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும் என்பது மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தில் உட்சேர்க்கப்பட்ட போது இலங்கையின் நீதிச் சேவை மீது அனைத்துலக சமூகம் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளில் இலங்கை அரசாங்கமானது நாட்டின் நீதிச்சேவையை சுயாதீனமானதாக ஆக்கியுள்ளது. ஆகவே கலப்பு நீதிமன்றம் என்கின்ற கோரிக்கை தற்போது தேவையற்றதாகும்' என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கலப்பு நீதிமன்றம் ஒன்றை உருவாக்குவதற்கான சட்ட சீர்திருத்தத்தை மேற்கொள்வதற்கு இலங்கை நாடாளுமன்றின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு கிடைக்க வேண்டும். அத்துடன் அரசியல் சாத்தியமற்ற, கருத்து வாக்கெடுப்பு ஒன்றும் நடத்தப்பட வேண்டும். நீண்ட காலமாக இலங்கை நாடாளுமன்றம் பெரும்பான்மை சிங்களவர்களையே கொண்டுள்ளது. ஆகவே இந்த விடயத்தில் சிங்களவர்களின் ஆதரவைப் பெறமுடியாது. அத்துடன் சிங்கள இனத்தைச் சேர்ந்த இராணுவத்தினர் போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தண்டனை பெறுவதில் தாமும் பங்கு வகிப்பதை சிங்கள மக்கள் விரும்பமாட்டார்கள்.

நாட்டில் சட்ட ஆட்சியை ஏற்படுத்துவேன் மற்றும் தமிழ் மக்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான பணிகளை முன்னெடுப்பேன் என வாக்குறுதி வழங்கியே மைத்திரிபால சிறிசேன நாட்டின் ஜனாதிபதியானார். இவருக்கு இலங்கையின் பிரதான இரு அரசியற் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி போன்றவற்றின் ஆதரவுகள் மட்டுமல்லாது நாட்டின் சிறுபான்மையினரின் ஆதரவும் கிடைக்கப்பெற்றன.

ஆனால் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகி இரண்டு ஆண்டுகள் கடந்த போதிலும், நாட்டை பிளவுபடுத்தும் ஆபத்தைக் கொண்ட இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் இவர் தோல்வியுற்றுள்ளார். இவர் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளை முடிவுக்குக் கொண்டு வருவதில் தீவிரமாகச் செயற்படுவாராயின் தமிழர் பகுதிகளில் நிலவும் இராணுவ ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டு வருவதுடன், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ஒழிப்பதற்கான நடவடிக்கையையும் முன்னெடுத்திருப்பார்.

ஆனால் இதற்குப் பதிலாக 30/1 தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வெளிநாட்டு நீதிபதிகளைக் கொண்ட கலப்பு நீதிப்பொறிமுறை உருவாக்குதல் மற்றும் ஏனைய பரிந்துரைகளை ஜனாதிபதி நிறைவேற்றத் தவறியுள்ளார். இலங்கை இராணுவத்தினர் மீது பாரபட்சமற்ற சுயாதீன விசாரணையை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்.

ஐ.நா.பாதுகாப்புச் சபையின் ஊடாக இலங்கை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றின் முன் நிறுத்துவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும்.

இதேவேளையில், இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான நகர்வுகளை முன்னெடுத்து வருகிறார். இவருக்கு பௌத்த மதகுருமார் மற்றும் ஒரு பகுதி சிங்கள மக்கள் தமது ஆதரவுகளை வழங்குகின்றனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 50 வரையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது ஆதரவுகளை மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கியுள்ளனர்.

மகிந்த ராஜபக்ஷவை ஆட்சியிலிருந்து அகற்றுவதற்கு பங்களிப்பைச் செய்த தமிழ் மக்கள் இலங்கை அரசாங்கமானது ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தை அரசாங்கம் நிறைவேற்றமையால் அதன் மீதான தமது நம்பிக்கையை இழந்து வருகின்றனர். அரசாங்கம் தனது வாக்குறுதிகளை நிறைவேற்றாவிட்டால், கிட்டிய எதிர்காலத்தில் ராஜபக்ஷ ஆட்சி உருவாவதை எவரும் எதிர்பார்க்க முடியும்.



நன்றி: இணையம்

# தீர்க்கப்படாத தமிழர் பிரச்சினை

உங்களுடைய ஆட்கள் எங்களுடைய வீடுகளை ஆக்கிரமித்துள்ளமையால் நாங்கள் தெரு நாய்களின் நிலைக்கு ஆளாகியுள்ளோம் என ஆர்ப்பாட்டம் ஒன்றில் கலந்து கொண்டிருந்தவர்கள் தாங்கி நின்ற பதாகைகளில் எழுதப்பட்டிருந்தது. இந்த ஆர்ப்பாட்டத்தில் சேலை அணிந்த தமிழ்ப் பெண்கள் தமது பிள்ளைகளுடன் பங்கேற்றிருந்தனர்.

பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கில் உள்ள இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான முகாம் ஒன்றிற்கு அருகில் வீதியோரமாக ஒரு மாதத்திற்கு மேல் தற்காலிக கூடாரங்களை அமைத்து அதில் தங்கியவாறு இந்த மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பெரும்பான்மை சிங்கள மக்களைக் கொண்ட இலங்கை இராணுவத்தினர் எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் யுத்தம் முடிவுறும் வேளையில் தமது நிலங்களை ஆக்கிரமித்ததாகவும் ஆனால் தமது நிலங்களைத் தம்மிடம் கையளிப்பதற்கு இராணுவத்தினர் மறுப்பதாகவும் இந்த மக்கள் கூறினர்.



இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தெரிவு செய்யப்பட்ட இலங்கையின் தற்போதைய அரசாங்கமானது நிலங்கள் கையளிக்கப்படும் என வாக்குறுதி வழங்கிய போதிலும் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

இவர்களது நிலங்கள் இவர்களிடம் கையளிக்கப்படும் என இலங்கை அரசாங்கம் அண்மையில் அறிவித்த போதிலும் இதனை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் பிரச்சினைகளில் நில விவகாரமும் ஒன்றாகும்.

சிங்கள பெரும்பான்மை மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் நில விவகாரம் என்பது முக்கிய காரணியாக உள்ளதாக தமிழ் மக்கள் கருதுகின்றனர்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன தெரிவு செய்யப்பட்ட போது நாட்டில் அமைதி ஏற்படும் என்கின்ற நம்பிக்கை ஏற்பட்டது. மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்வதில் இலங்கையின் மொத்த சனத்தொகையில் 15 சதவீதத்தைக் கொண்ட தமிழ் மக்கள் தமது ஆதரவை வழங்கியிருந்தனர்.

இதேபோன்று மக்கள் தொகையில் 10 சதவீதத்தைக் கொண்ட தமிழ் பேசும் முஸ்லிம் சமூகத்தினரும் மைத்திரிபால சிறிசேனவிற்கு தமது பெரும்பான்மை ஆதரவை வழங்கியிருந்தனர்.

மகிந்த ராஜபக்ஷவின் அதிகாரத்துவ ஆட்சியை முடிவிற்குக் கொண்டு வர வேண்டும் என தமிழ் மக்கள் விரும்பினர். போரின் போது புலிகள் அழிக்கப்பட்டதுடன் தமிழ் மக்கள் பெருமளவில் படுகொலை செய்யப்படுவதற்கும் இவர்களின் சொத்துக்கள் அழிக்கப்படுவதற்கும் காரணமாக இருந்த மகிந்த ராஜபக்ஷவை ஆட்சியிலிருந்து விரட்டுவதற்காக மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகத்தெரிவு செய்யப்பட்ட போது தமிழ் மக்கள் மிகவும் மகிழ்வடைந்தனர்.


மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்கு வரும்போது பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வருவதாக வாக்குறுதி அளித்தார். விரைவில் நாடாளுமன்றில் புதிய அரசியல் சாசன சீர்திருத்தத்தை முன்வைப்பதையும் இவ்வாண்டு இறுதிக்குள் நாடு தழுவிய மக்கள் கருத்து வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதையும் மைத்திரிபால சிறிசேன தனது இலக்காகக் கொண்டுள்ளார்.

நாடாளுமன்றிற்கு அதிக அதிகாரத்தை வழங்கும் விதமாக நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதுடன் மாகாணங்களுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்ந்து வழங்குவதாகவும் வாக்குறுதி வழங்கப்பட்டது. இதன் மூலம் தமிழ் மக்கள் வாழும் மாகாணங்களில் முழுமையான சுயாட்சி இல்லாது தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே ஆளக்கூடிய நிலைப்பாட்டை உருவாக்க முடியும்.

அத்துடன் கலப்பு நீதிப் பொறிமுறையை உருவாக்குவதுடன் போரின் போது காணாமற்போன மற்றும் கடத்தப்பட்ட பல ஆயிரக்கணக்கான தமிழ் மக்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிவதற்கான காணாமற் போனோர் தொடர்பாக விசாரணை செய்வதற்கான அலுவலகம் ஒன்றை அமைப்பதாகவும் மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தால் வாக்குறுதி வழங்கப்பட்டது.

18 மாதங்களாக எவ்வித விசாரணையுமின்றி ஒருவரை சந்தேகத்தின் பேரில் தடுத்து வைப்பதற்கு அனுமதி வழங்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இல்லாமல் ஆக்குவதாகவும் போரின் போது அழிக்கப்பட்ட அல்லது சுவீகரிக்கப்பட்ட உடைமைகளுக்கு நட்டஈட்டை வழங்குவதாகவும் உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழு ஒன்றை அமைப்பதாகவும் வாக்குறுதி வழங்கப்பட்டது. போரின் போது இடம்பெற்ற பல்வேறு மீறல்களையும் விசாரணை செய்வதற்காக வெளிநாட்டு நீதிபதிகள் மற்றும் சட்டவாளர்களைக் கொண்ட கலப்பு நீதிப் பொறிமுறை ஒன்றை அமைப்பது தற்போது சர்ச்சைக்குரிய விடயமாக மாறியுள்ளது.

தற்போது இடம்பெற்று வரும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரிலும் இலங்கை தொடர்பான விவாதம் இடம்பெறுகிறது. இந்நிலையில் இலங்கை அரசாங்கமானது அனைத்துலக சமூகத்திற்குதான் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் எனவும் இதற்கு அனைத்துலக சமூகம் மேலும் மேலும் அழுத்தங்களை இடவேண்டும்எனவும்தமிழ் மக்கள் விரும்புகின்றனர். ஆனால் அனைத்துலக சமூகம் தன்மீது வசைபாடுவதை நிறுத்த வேண்டும் என இலங்கை விரும்புகிறது.



இரண்டு பிரதான கட்சிகளைக் கொண்டே தேசிய அரசாங்கம் உருவாக்கப்பட்டுள்ளது. போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அனைத்துலக விசாரணை ஒன்று இடம்பெறுவதற்கு சிங்கள மக்கள் ஒருபோதும் விரும்ப மாட்டார்கள். இவர்களது விருப்பிற்கு மாறாக ஜனாதிபதி செயற்பட்டால் தனது வாக்குப் பலத்தை அவர் இழக்க வேண்டியேற்படும் என அஞ்சுகிறார்.

நாடாளுமன்றில் சிங்கள பிரதிநிதிகள் பெரும்பான்மையாக உள்ளதால் அரசியல் யாப்பில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கும் கலப்பு நீதிப் பொறிமுறையை உருவாக்குவதற்குமான ஆதரவை ஜனாதிபதியால் பெறமுடியவில்லை. போர்க்குற்றச்சாட்டு தொடர்பில் அனுதாபம் காண்பித்தால், கலப்பு நீதிப் பொறிமுறை தோல்வியடையும்' என முன்னணி மனித உரிமைச்செயற்பாட்டாளர் ஜெகன் பெரேரா எச்சரித்துள்ளார்.

'மகிந்த ராஜபக்ஷவின்எண்ணங்களுடன் முக்கிய பதவிகளில் உள்ளவர்கள் தற்போதும் செயற்படுவது அரசியல் யாப்பு சீர்திருத்தத்திற்குத் தடையாக உள்ளது' என இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார். 'இலங்கையில் தற்போதும் சித்திரவதைகள் தொடர்கின்றன' என ஐ.நா மனித உரிமைகள் பேரவையைச் சேர்ந்த முக்கிய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் தொடர்ந்தும் அதிருப்தியுடனேயே வாழ்கின்றனர். வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் தென்னிலங்கையர்களை விட பொருளாதாரத்தில் நலிவுற்றவர்களாக உள்ளனர். இவர்கள் புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளில் வாழும் தமது உறவுகளிலேயே அதிகம் தங்கி வாழ்கின்றனர்.

அவுஸ்திரேலியா, பிரிட்டன், கனடா, மலேசியா, மத்திய கிழக்கு போன்ற நாடுகளில் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழ்கின்றனர். இவர்களில் அதிகமானோர் போர் காரணமாக நாட்டை விட்டுத் தப்பிச் சென்றவர்களாவர். இவர்களில் சிலர் தமது சொந்த இடத்தில் முதலீடு செய்வதற்காகத் தற்போது திரும்பி வந்துள்ளனர்.

தமிழ் பிரதேசங்களில் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் அதிகம் காணப்படுகின்றன. இவர்கள் தமது வாழ்வைக் கொண்டு நடத்துவதில் பல்வேறு சுமைகளைச் சந்திக்கின்றனர். இந்தியாவிலிருந்து இலங்கைக்கு போதைப்பொருட்களும் கடத்தப்படுகின்றன. தமிழ் மக்கள் தொழில் வாய்ப்பற்றவர்களாகவும் இது தொடர்பில் ஊக்குவிப்பு வழங்கப்படாதவர்களாகவும் உள்ளதைக் காணமுடிவதாக யாழ்ப்பாணத்திற்குப் பயணம் செய்த அனைத்துலக வங்கியாளர் ஒருவர் தெரிவித்தார்.

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது இலங்கையின் எதிர்க்கட்சியாகச் செயற்படுகின்ற போதிலும் இன்னமும் முன்னேற்றங்கள் எட்டப்படவில்லை.

போரில் தோல்வியுற்ற தமிழ் மக்கள் மீண்டும் ஒன்றுசேர்ந்து போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு சதித்திட்டம் தீட்டுவதாக மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் சிலர் கூறி வருகின்றனர். இது சாத்தியமற்ற ஒன்றாகும். 2009 இல் புலிகள் முற்றுமுழுதாக அழிக்கப்பட்டு விட்டனர்.

இந்நிலையில் மேலும் மேலும் தமிழ் மக்கள் ஓரங்கட்டப்படுகின்றனர். இலங்கை மீது அனைத்துலக சமூகம் அழுத்தம் கொடுக்கும் என்றே தமிழ் மக்கள் நம்பு கின்றனர். 'நாங்கள் நிலைமாறு கால நீதிப் பொறிமுறையை முன்னெடுக்கத் தவறினால், தென்னிலங்கை வாழ் சிங்கள சமூகம் ஒருபோதும் தமிழ் மக்களின் பிரச்சினையை முன்னெடுக்காது என தமிழ் இளைஞர்கள் கருதுகின்றனர். ஆகவே இதன் மூலம் அடுத்து வரும் தலைமுறையானது புதிய பயங்கரவாதப் பாதையை நோக்கித் தள்ளப்படுவதை எவராலும் தடுக்க முடியாது' என சமரவீர எச்சரித்தார்.

வழிமூலம் -**The Economist**

மொழியாக்கம் -நித்தியபாரதி

# மிட்ஃபீல்டர் அலோன்சாவை இழக்கும் கால்பந்து உலகம்

மிட்ஃபீல்டர்கள் - ஒரு கால்பந்து அணியின் பில்லர்கள். அளவாக, அதேநேரத்தில் அனலாக ஓடி அளந்தெடுத்து பாஸ் .கொடுத்து இஞ்ச் பெர்ஃபெக்ட் கிராஸ் வைத்து டைமிங் ஹெட்டர் செய்து ஆட்டத்தை, அணியை மெருகெற்றும் வல்லவர்கள். கோல் அடிப்பதை விட, அசிஸ்ட் செய்வதிலேயே பரம திருப்தி அடையும் புண்ணியவான்கள். அட்டாக்கிங் கில் மிரட்டி, டிஃபன்சில் நீக்குப்போக்காக பம்மி, மிட்ஃபீல்டில் 'பாஸ்' ஓவியம் வரைந்து, அணியின் பிம்பத்தை மெருகேற்றும் நம்பிக்கை நட்சத்திரங்கள். டெக்னிக்கல் ரீதியாக கில்லாடிகள்.

ஒரு அணி சிறப்பாக விளையாடுகிறது எனில் அற்குக்காரணம் மிட்ஃபீல்டர்ஸ் எனும் நடுக்கள ஆட்டக்காரர்கள்தான். மான்சஸ்டர் யுனைடட் அணி ஒரு காலத்தில் கால்பந்து உலகை ஆளக் காரணம் ஸ்கோல்ஸ், கிக்ஸ் எனும் மிட்ஃபீல்டர்ஸ். அவர்கள் கோலோச்சிய காலத்தில் அந்த அணி பல தொடர்களில் சம்பியன். ஜாம்பவான்களின் ஓய்வுக்குப்பின், அவர்களுக்கு நிகரான மாற்று வீரர்கள் கிடைக்கவில்லை. இன்னும் அந்த அணி மீண்டபாடில்லை. அதாவது பழைய இராஜாங்கம் இல்லை.

உலகின் முன்னணி கால்பந்து தேசங்களில் ஒன்று ஸ்பெயின். சீரான இடைவெளி [illegible] சிறந்த நடுக்கள ஆட்டக்காரர்களை உற்பத்தி செய்யும் அட்சய தொழிற்சாலை. சேபி அலோன்சா, அந்த நாட்டைச் சேர்ந்த வர் என்பதில் ஆச்சரியமில்லை. அவர் கடந்த வாரம் டுவிட்டரில் ஒரு பதிவிட்டிருந்தார்.

Lived it. Loved it.
Farewell beautiful game.

- இதுதான் அந்த ட்வீட்.

அலோன்சா ஓய்வு முடிவை அறிவித்த போது ஒட்டுமொத்த கால்பந்து ரசிகர்களுமே வருந்தினர். கால்பந்து உலகில் ஒருசில வீரர்களுக்குத்தான் எதிரணி ரசிகர்களின் பாராட்டு கிட்டும். சேபி அலோன்சா அப்படிப்பட்டவர். மாற்று அணியினராலும் மதிக்கப்பட்டவர்.

1981 நவம்பர் 25இல் ஸ்பெயினின் தொளோசா நகரில் கால்பந்து வீரரின் மகனாக பிறந்தார் சேபி அலோன்சா. அவருடைய தந்தை பெரிக்கோ அலோன்சா முன்னணி வீரர், ஸ்பெயினின் ரியல் சொசைடாட் கிளப் அணிக்காக தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் லா லிகா கோப்பையை வென்றவர். இனம் இனத்தோடுதானே சேரும்! தந்தை, சகோதரர்கள் கால்பந்து பயிற்சி செய்வதைப் பார்த்து பார்த்து, 'நானும் கால்பந்து வீரன்' ஆவேன். சபதம் ஏற்றார் அலோன்சா. மற்ற சிறுவர்களைப் போல் கோல் அடிப்பதில் முனைப்புக் காட்டவில்லை. பந்தை பெர்ஃபெக்டாக பாஸ் செய்வது, கோல் அடிக்க அசிஸ்ட் செய்வது அலோன்சாவுக்குப் பிடித்த அம்சங்கள்.

உள்ளூர் ஆட்டங்களில் அலோன்சா காட்டிய முனைப்பைப் பார்த்து, அப்படியே கொத்திச் சென்றது ரியல் சொசைடாட். 18 வயதில் பெரிய கிளப்பில் இடம். முந்தைய சீசனில் சொதப்பியதால் 2001-02 சீசனில், அணியில் பல மாற்றங்கள் செய்தாக வேண்டிய கட்டாயம். அணியின் பயிற்சியாளராக இருந்த டோஷாக், வெறும் இருபது வயதே நிரம்பிய அலோன்சாவை கப்டனாக நியமித்தார். கால்பந்து உலகின் புருவங்கள் உயர்ந்தது. ஒரு இளம் வீரருக்கு கிடைத்த மிகப்பெரிய கௌரவம் அது.

அடித்துப் பிடித்து 2002-03 சீசன் முடிவில் அலோன்சா தலைமையிலான ரியல் சொசைடாட், புள்ளிகள் பட்டியலில் இரண்டாம் இடம் பிடித்தது. அவர்களைப் பொறுத்தவரை இது சாதன்னை. பெரும் சாதனை. இது சாத்தியமாகக் காரணம் நடுக்களத்தில் அலோன்சா ஆடிய கதகளி. இந்த நாட்டியத்தைப் பார்த்து, 'வாடா மவனே...' என அள்ளி அணைத்துக் கொண்டது ஸ்பெயின் அணி. 2003இல் ஸ்பெயின் அணியில் இடம். தேசிய அணியில் அடியெடுத்து வைத்த அதே ஆண்டில் தேடி வந்தது ஸ்பெயினின் சிறந்த கால்பந்து வீரர் என்ற விருது.

அலோன்சாவின் இந்த புகழுக்குக் காரணம் டோஷாக். "அலோன்சா நடுக்களத்தில் விளையாடும்போது அவர் ஒட்டுமொத்த அணியின் திறமையும் மேம்படுத்துகிறார்"- இது டோஷாக் சொன்ன வார்த்தைகள். இதை உன்னிப்பாகக் கவனித்தனர் மற்ற மனேஜர்கள். விளைவு, 2004இல் லிவர்பூல் அணி இவரை விலைக்கு வாங்கியது. அந்த கிளப்பில் இணைந்த முதல் சீசனிலேயே, சம்பியன்ஸ் லீக் கோப்பையை வென்று தந்தார். இறுதிப்போட்டியில் ஏசி மிலன் அணிக்கு எதிராக அவர் அடித்த கோல் முக்கியத்துவம் வாய்ந்தது. அலோன்சா, டாரஸ், கெராகர், ஜோர்டு ஆகியோர் இணைந்து விளையாடிய காலகட்டம் தான் லிவர்பூல் அணியின் பொற்காலம்.

2004 முதல் 2009 வரை லிவர்பூல் அணியில் விளையாடிய அலோன்சா, அந்த அணிக்கு சுப்பர் கோப்பை, ஃபா கோப்பை, கம்யூனிட்டி கோப்பை என பல கோப்பைகளை வென்று தந்தார். இருப்பினும் லிவர்பூல் அணிக்காக தன்னால் ஒரு பிரீமியர் லீக் தொடரை வென்று தர முடியவில்லை என்ற ஏக்கம் கடைசிவரை இருந்தது.

அலோன்சா பழகுவதிலும் எளிமையானவர். களத்தில் மட்டுமே ஆக்ரோஷம் காட்டுவார். லிவர்பூல் அணியின் பயிற்சியாளராக இருந்த பெனிட்டஸ், அலோன்சாவை ரியல் மாட்ரிட் அணிக்கு விற்க முயன்றபோதும், லிவர்பூலை விட்டுச் செல்ல மனமில்லாமல் இருந்தார். இருந்தாலும் அணியின் நலன் கருதி ரியல் மாட்ரிட் அணியின் ஒப்பந்தத்துக்கு ஒப்புக் கொண்டார். ரியல் மாட்ரிட் அணிக்குத் தாவிய பின் அவரது ஆட்டம் மேலும் மெருகேறியது. 2009- 2014 வரை ரியல் மாட்ரிட் வென்ற பல்வேறு கோப்பைகளிலும் அணிக்கு முக்கிய பங்காற்றினார். ரியல் மாட்ரிட் பத்தாவது முறையாக சம்பியன்ஸ் லீக் வென்று சாதனை படைத்த போதும் இவர் அந்தத் தொடரில் முத்திரை பதித்திருந்தார்.

நடுக்கள ஆட்டக்காரராக இருப்பினும் தன்னுடைய ஷாட்களினால் மிகவும் பிரபலமடைந்தார். ஃப்ரீ கிக், பனால்டி கிக் போன்றவற்றில் கைதேர்ந்தவர். தான் விளையாடிய அனைத்து அணிக்களுக்குமே அர்ப்பணிப்பு உணர்வுடன் விளையாடியவர்.





ஸ்பெயின் அணிக்காக 114 ஆட்டங்களில் விளையாடி இருக்கிறார். ஒரு உலகக் கோப்பை, இரண்டு யூரோ கோப்பை வென்ற ஸ்பெயின் அணியில் இடம்பெற்றது அவர் செய்த பெரும் பாக்கியம். "ஒரு அணி நடுக்களத்தில் வெற்றி பெற்றால் அந்த போட்டியிலும் எளிதாக வெற்றி பெறலாம்" என்ற பொலிசியைப் பின்பற்றும் அலோன்சா, 2012 ஆம் ஆண்டு லா லிகாவின் சிறந்த நடுக்கள ஆட்டக்காரர் விருதை வென்றதோடு, 2013, 2014ஆம் ஆண்டுகளில் பதினொரு பேர் அடங்கிய சம்பியன்ஸ் லீக்கின் சிறந்த அணியிலும் இடம் பிடித்துள்ளார்.

இந்த தலைமுறையின் சிறந்த பயிற்சியாளர்களான பெப் கார்டியோலா, ஜோசே மொரினியோ, பெனிட்டஸ் மற்றும் ஆன்சலோட்டி அனைவரும் ஒரே கருத்தையே முன்வைக்கின்றனர். "எங்கள் அணியின் நடுக்கள ஆட்டத்தை மேம்படுத்தினோம்" என்பதுதான் அது. இந்த நான்கு பேருடைய அணிகளிலும் அலோன்சா விளையாடி இருக்கிறார். வாட்டே மேஜிக்!


தன் ஆட்டத்தைப் பற்றியும் அணிக்கு என்ன தேவை என்பதையும் தெளிவாக தெரிந்து வைத்திருந்தார். அதனாலேயே தான் விளையாடிய அனைத்து அணிகளிலும் முத்திரை பதிக்க முடிந்தது. அலோன்சா தன்னுடைய ஸ்டைலை பற்றி பேசும்போது, "களத்தில் உள்ள 90 நிமிடங்களும் அணியை சீராக வழி நடத்த உதவுவேன். என்னைச் சுற்றி எதிரணி வீரர்கள் சூழ்ந்து இருக்கும் போதுதான் என்னால் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியும். என்னைப் பொறுத்தவரை பந்தை எதிரணியிடம் இருந்து பறிப்பது மட்டும் ஆக்ரோஷமான ஆட்டம் இல்லை. வேகமாக பந்தை பாஸ் செய்து, சீரான வேகத்தில் களத்தில் முன்னேறுவதும் ஆக்ரோஷமான ஆட்டம் தான்" என நுணுக்கமாக விபரிக்கிறார்.

ரியல் மாட்ரிட் அணியிலிருந்து ஜேர்மனியின் பேயர்ன் முனிச் அணிக்கு 2014இல் மாறினார். அணி மாறினார். ஆட்டம் மாறவில்லை. போர் தளபதி போல அலோன்சா, நடுக்களத்தில் தன் படைகளை வழிநடத்தி வருகிறார். எல்லாவற்றுக்கும் மேலாக அனைவருடனும் நட்புடன் பழகும் இவரது குணத்தால் தன்னுடன் விளையாடிய வீரர்களையும் பயிற்சியாளர்களையும் கவர்ந்தார்.

அத்தனை கோப்பைகளையும் விருதுகளையும் வென்ற போதிலும் சாதாரணமாகவே இருந்தார். பேயர்ன் முனிச் அணியுடனான ஒப்பந்தம் 2017 சீசனுடன் முடிகிறது. அத்துடன் கால்பந்துக்கு குட்பை சொல்லி விட்டார். நடுக்களத்தில் ஒரு வீரர் எப்படி ஆட வேண்டும், எப்படி ஆடக்கூடாது, ஒரு நடுக்கள வீரர் எப்படியெல்லாம் அணிக்கு உதவியாக இருக்க வேண்டும் என்பதற்கு அலோன்சா சிறந்த உதாரணம். மீண்டும் ஒரு தேர்ந்த மிட்ஃபீல்டரை மிஸ் செய்யப் போகிறது கால்பந்து உலகம். (க)

## காலத்தால் அழியாத கானங்கள் ...

படம்: நவராத்திரி
இசை: கே.வி.எம்.
பாடியவர் : ரி.எம்.சௌந்தரராஜன்



இரவினில் ஆட்டம் பகலினில் தூக்கம்
இதுதான் எங்கள் உலகம் எங்கள் உலகம்
இரவினில் ஆட்டம் பகலினில் தூக்கம்
இதுதான் எங்கள் உலகம் எங்கள் உலகம்

பிறப்புக்கும் முன்னால் இருந்தது என்ன உனக்கும் தெரியாது
இறந்த பின்னாலே நடப்பது என்ன எனக்கும் புரியாது
இருப்பது சில நாள் அனுபவிப்போமே எது தான் குறைந்து விடும்
எது தான் குறைந்து விடும்..

இரவினில் ஆட்டம் பகலினில் தூக்கம்
இதுதான் எங்கள் உலகம் எங்கள் உலகம்

பாவமென்றால் ஒரு பெண்ணையும் ஆணையும் இறைவன் படைப்பானா
பயணம் போகும் பாதையில் திராட்சை கொடியை வளர்ப்பானா
பாவமென்றால் ஒரு பெண்ணையும் ஆணையும் இறைவன் படைப்பானா
பயணம் போகும் பாதையில் திராட்சை கொடியை வளர்ப்பானா
ஆனது ஆகட்டும் போனது போகட்டும் அருகே வரலாமா
அருகே வரலாமா ஆ..ஆ..
இரவினில் ஆட்டம் பகலினில் தூக்கம்
இதுதான் எங்கள் உலகம் எங்கள் உலகம்

கவிஞன் பாடிய காவியம் படித்தால் போதை வரவில்லையா
கல்லில் வடித்த சிலைகளை பார்த்தால் மயக்கம் தரவில்லையா
எதிலே இல்லை யாரிடம் இல்லை எவர் இதை மறந்து விட்டார்
எவர் இதை மறந்து விட்டார்..

இரவினில் ஆட்டம் பகலினில் தூக்கம்
இதுதான் எங்கள் உலகம் எங்கள் உலகம்

# கனவுகளும் பலன்களும்



கன்வில் உடல் உறுப்புக்கள் வந்தால்

கை உடைந்து விட்டது போலக் கனவு கண்டால் அவமானத்துக்கு உள்ளாக நேரும். பல விதத் தொல்லைகள் ஏற்படும். காதுகளையோ அல்லது காதில் நோய் ஏற்படுவது போலவோ கனவு கண்டால் குடும்பத்தில் கலகம் ஏற்படும்.

கண்களில் ஏதாவது விழுந்து அவை சிவந்து விட்டது போலவும், அழுவது போலவும் கனவு கண்டால் உடல் நலக் கேடும் துன்பமும் உண்டாகும். கண்கள் படபடத்துக் கொள்வது போலக் கனவு கண்டால் விபத்து நேரும் அல்லது யாராவது நெருங்கிய உறவினர் மரணமடைவார். வலது கண் இமை மட்டும் துடிப்பது போலக் கனவு கண்டால் நல்லது நடக்கும்.

எதிர்பாராத பணவரவு ஏற்படும். ஒருவர் தான் விகாரத் தோற்றமடைந்து விட் டது போலக் கனவு கண் டால் நீண்ட நாள் ஆசை விரைவில் நிறைவேறும்.

தலைமுடி சிக்குப் பிடிப்பது போலக் கனவு கண்டால் குடும்ப உறுப்பினர் ஒருவரால் தொல் லைகள் ஏற்படும். நரைத்திருப்பது போலக் கனவு கண்டால் காதலில் வெற்றி கிட்டும். தலையில் வழுக்கை விழுவ்து போலக் கனவு கண்டால் நோய் ஏற்படலாம்.

கனவில் பசு, மாடு வந்தால்

பசு, மாடு விரட்டுவதாகக் கனவு கண்டாள். என்ன செய்வது?

கனவு சொல்லும் பலன்கள் ஏராளமானவை. பசு, மாடு விரட்டுவது, பட்ட மரம் துளிர்ப்பது, பெரிய விளக்கு தன்மேல் விழுவது, தேன்கூடு, வீட்டுக்குள் பாம்புப் புற்று போன்றவை கனவில் வந்தால், அதனால் குடும்பத்திற்குள் ஏதோ பிரச்சினை ஏற்படும் என்பார்கள்.

இதற்கு மறுநாளே சிவன் கோயிலுக்குச் சென்று வருவதும், பசுவை பூஜிப்பதும் சிறந்த பரிகாரங்களாகும். கெட்ட கனவுகள் கண்ட உடனேயே கீழே உள்ள வாராஹி காயத் திரியை ஜெபியுங்கள்.

மஹிஷத்ஜாயை வித்மஹே தண்ட
ஹஸ்தாயை தீமஹி
தந்தோ வாராஹி ப்ரசோதயாத்

கனவில் ஆடை, ஆபரணங்கள் வந்தால்

ஆடை ஆபரணங்கள் களவு போவது போலக் கனவு கண்டால் பிறரால் ஏமாற்றப்படுவர். கடன் வாங்கியவர் திருப்பிக் கொடுக்க மாட்டார். கைப் பொருளும் நட்டமாகும்.

வெண்பட்டாடை அணிந்திருப்பது போலக் கனவு கண்டால் பெண்களின் சேர்க்கையும் அதனால் இலாபமும் ஏற்படும்.

பச்சை நிற ஆடையை அணிந்திருப்பது போலக் கனவு கண்டால் வெளியூர் சென்று சம்பாதிப்பர்.

ஆடைகள் ஏராளமாக இருப்பது போலக் கனவு கண்டால் துணிப்பஞ்சம் ஏற்படும். (தொடரும்)

# சரித்திரத்தில் இடம்பிடித்த மதுரக்குரலோன் சாந்தன்



தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்ட வரலாற்றில் தனது மெல்லிசைக் குரலினால் எழுச்சிப்பாடல்களை மக்கள் மனதில் விதைத்து விதையாகிப்போன மாவீரர்களுக்கு உயிர் கொடுத்து எழச்செய்தவர் எஸ்.ஜீ.சாந்தன் அவர்கள். தேசிய தலைவர் வே.பிரபாகரன் அவர்களினால் ஆறு தடவைகள் பரிசுகளைப் பெற்றவர். நோர்வே, பிரான்ஸ், நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து, டென்மார்க் ஆகிய நாடுகளுக்குச் சென்று எழுச்சிப்பாடல்களைப் பாடி கொடிகட்டிப் பறந்தவர். இவர் சிறந்த நடிகராகவும் வில்லிசைக்கலைஞனாகவும் திகழ்ந்தார். 21வயதில் எஸ். ஜீ.சாந்தன் என்ற தனது சொந்தப் பெயரில் இசைக்குழுவை ஆரம்பித்துகான மழை பொழிந்தவர்.

பாடல் உலகிற்குள் இவரின் பிரவேசம்

இவரின் தந்தையார் குணரத்தினம் அவர்கள் கொழும்பில் கடை வைத்திருந்தார். விடுமுறைக்காலத்தில் தந்தையாரிடம் போய் நிற் பார். ஒருமுறை சிவராத்திரி விடுமுறைக்காக கொழும்பு செட்டித் தெரு கதிரேசன் கோவிலில் இசைக்குழு நிகழ்த்தினார்கள். அதில் கலாநிதி சின்னச்சாமி, முத்தழகன் போன்றோர்கள் பாடினார்கள். அந்தச் சமயத்தில் இவரையும் பாடச்சொல்லி அழைத்தார்கள். அவரும் 1972 இல் அதாவது 12 வயதில் முதல் முதலாக "மருதமலை மாமணியே முருகையா" என்ற பாடலைப் பாடிப் பெரும் வரவேற்பைப் பெற்றார். அதன் பின்னர் இவரைத் தூக்கிக் கொண்டு ஜிந்துப்பிட்டி முருகன் கோவிலிலும் பாட வைத்தனர். இதுவே அவரின் பாடல் உலகின் பிரவேசமாகும்..

இந்த மண் எங்களின் சொந்தமண்

ஈழத்தின் தலைசிறந்த புரட்சிப்பாடகரான இவர் 1991ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து கிளிநொச்சியிலிருந்தபொழுது விடுதலைப்புலிகள் தமது ஒலிநாடாவிற்குப் பாடும்படி இவரைக் கேட்டுக் கொண்டனர். அவரும் சம்மதித்து 1991 இல் வெளியான "இந்தமண் எங்களின் சொந்த மண்" என்ற ஒலிப் பதிவு நாடாவில் அவரும் பாடகி சியாமளாவும்இணைந்து ஜோடியாக "பூமலர்ந்தது கொடியினில் ஒரு புலி பிறந்தது மடியினில்" என்ற பாடலினைப் பாடினார்கள். இந்தப்பாடல் தான் இவரின் முதலாவது பாடலாகும். இரண்டாவது பாடல் "இந்தமண் எங்களின் சொந்தமண்"

பிட்டுக்கு மண்சுமந்த பெருமான்

"நம்பினோம் மூத்த விநாயகனே
நாடியே வந்தோம் உம் சந்நிதியில்" இது தான் இவர் பாடிய முதலாவது பக்திப்பாடல். 1993 இல் பாடினார். இப்பாடலை இணுவில் வீரமணி ஐயர் அவர்கள் எழுதினார். 1997 ஆம் ஆண்டு "கோபுரவாசல்" என்ற ஒலிநாடா மட்டக்களப்புத் திருத் தலங்களை வைத்துப்பாடப்பட்டது. மொத்தம் பத்துப்பாடல்கள். அதில் இவர் "பிட்டுக்கு மண் சுமந்த பெருமான்" என்ற பாடலினைப் பாடினார். இந்தப் பாடலினைப் பாடும் போது கூட ஒலிப்பதிவு கருவி கூட பழுதடைந்துவிட்டது. பின்னர் ரேப்றெக் கோடரில் தான்பதிவு செய்தார்கள். சிறிது காலத்திற்குப் பின்னர் அந்தப்பாடலை திரும்பச் செய்ய வேண்டும் என்றார்கள். ரேப்றெக்கோடரில் செய்ததை புதுவை இரத்தினதுரை அவர்களிடம் போட்டுக் காட்டினார்கள். அவர் சொன்னார் இது நன்றாக இருக்கிறது. திரும்ப பாடவேண்டிய தேவையில்லை .இதையே நீங்கள் போடலாம் என்றார். பின்னர் இசையை மட்டும் ஒலிப்பதிவு செய்தனர். உண்மையாக இந்தப்பாடல் ஒலிப்பதிவு செய்யப்பட்டதல்ல ரேப்றெக்கோடரில சாம்பிளாகச் செய்யப்பட்டது. இந்தச் சாம்பிள் பாடல் தான் அவரை கோபுர உச்சிக்கு கொண்டு வந்து நிறுத்தி யது. 350இற்கு மேற்பட்ட பக்திப்பாடல்களைப்பாடினார்.

பல குரல்களில் கதைக்கும் வல்லோன்

இவர் கலைஞர் மு.கருணாநிதி, நடிகர் செந்தில், நடிகர் கவுண்டமணி, நடிகர்உசிலமணி, நடிகர்ராதாரவி, நடிகர்சிவாஜிகணேசன் போன்றர்களைப் போல் கதைப்பார். இவற்றோடு சீர்காழி கோவிந்தராஜன், ஜேசுதாஸ், எஸ்.பி.பாலசுப்பிரமணியம், திருச் செல்வநாதன் போன்ற பாடகர்களின் குரலினை அதே மாதிரிப்பாடுவார். பன்முகப்பட்ட ஆளுமையை கொண்ட இவரின் பாடல்களை ஏனைய பாடகர்கள் இலகுவாகப் பாடமுடியாது. அந்தள விற்கு இவரின் பாடல்களில் இழுவை இருக்கும். பலமேடைக ளில் பல பாடகர்கள் இவரின் பிட்டுக்கு மண்சுமந்த பெருமான் என்ற பக்திப்பாடலினைப்பாடுகின்றார்கள். மிகவும் கஷ்டப்பட்டே பாடுகின்றார்கள். எஸ்.ஜீ.சாந்தன் அவர்களுக்கு இழுத்துப்பாடுவது இறைவன் கொடுத்த மிகப் பெரிய கொடையாகும். இவர் சினி மாப்பாடல்களில் உள்ள தத்துவப் பாடலினை பல இசைக்குழுக் களில் பாடியுள்ளார். அதிலும் ஜே.ஆர். சுகுமாருடன் இணைந்து "நாளை நமதே" என்ற பாடலினை "ஈடுவைத்து ஈடு வைத்து லந்தலாலா" என்ற தோற்றப்பாடுடன் பாடுவார்.

ஒத்திகை பார்த்த பின்னரே பாடுவார்

முன்பு இவர் பாடிய பாடல்களை முப்பது தடவைகள் பாடி ஒத் திகை பார்த்துப் பாடினார். பாடும் போது அப்படியே அந்தப்பாடல் கள் மனதில் பதிந்து விடும். பாடி முடிந்தாலும் அந்தப்பாடலை நினைவாற்றலுடன் திருப்பப்பாடுவார். பாடல் அசைவை 20 தடவைகளுக்கு மேலே இழுத்து இழுத்துப் பாடுவார். சொற்கட்டை நுணுக்கமாகக் கையாளுவார். ஒரு பாடல் பாடும் போது சரியாக வரவில்லை என்றால் திரும்பத் திரும்ப பாடிப்பயிற்சி எடுப்பார். சுருதியைச் சரியாகக் கடைப்பிடிப்பதிலும் தொண்டையைக் கவனமாக வைத்திருப்பதிலும் மிகக் கவனமாக இருப்பார்.

இசையுலகை விட்டு......

1961ஆம் ஆண்டு மார்கழி மாதம் 20ஆம் திகதி புங்குடுதீவில் பிறந்த இவர் தனது 57ஆவது வயதில் 26.02.2017 அன்று காலமானார். இவரின் இரண்டு மகன்கள் மாவீரர்கள் ஆவார்கள். அவர் இத்தினத்தில் இறந்தாலும் அவரின் குரல் இன்றும் இந்த மண் எங்களின் சொந்த மண் என்று பாடிக்கொண்டேயிருக் கிறது. தலை சிறந்த பாடகர் எஸ்.ஜீ.சாந்தன் அவர்களின் பாடல் கேட்டு

பூக்கள் பூப்பெய்தும்
மூங்கில்கள் தனக்குத்தானே துளை
போட்டுக் கொள்ளும்
வானம் பொழியும்
வயல்கள் கருத்தரிக்கும்
நிகழ்காலம் நிதர்சனமாகும்.

மீண்டும் அவர் விழிக்கும் போது நாம் சுதந்திரக் காற்றைச் சுவாசிப்போம். அப்போது அவரின் எழுச்சிப் பாடல்கள் எங்கள் காதுகளில் மீண்டும் கேட்கும்.

ஜெயம் ஜெகன்

சினிமா செய்தி

# எங்கிட்ட மோதாதே



தமிழ் சினிமா எப்போதும் இரண்டு துருவங்களால் தான் ஆளப்படும். எம்.ஜி.ஆர்-சிவாஜியில் ஆரம்பித்து தற்போது இருக்கும் சிவகார்த்திகேயன்-விஜய் சேதுபதி வரை இரண்டு நடிகர்கள் மோதல் நடந்து வருகின்றது. இதில் 80களில் நடந்த ரஜினி-கமல் ரசிகர்களின் மோதலை நம் கண்முன் கொண்டு வர முயற்சி செய்துள்ளது இந்த எங் கிட்ட மோதாதே, மோதல் கவர்ந்ததா? பார்ப்போம்.

தமிழ் சினிமாவை இன்று வரை இரண்டு துருவங்கள் ஆண்டு வருகின்றது. அதில் இன்றும் இளைஞர்களுக்கு சிம்ம சொப்பனமாக இருப்பது ரஜனி-கமல். இவர்களின் ரசிகர்கள் 80களில் எப்படி இருந்தார்கள் என்பதை நட்ராஜ், ராஜாஜி மூலம் ராமு செல்லப்பா கண் முன் கொண்டு வந்துள்ளார்.

நட்ராஜ் ரஜனி ரசிகர், ராஜாஜி கமல் ரசிகர், இருவரும் தங்கள் நாயகர்களின்

ஆனால், அப்போதெல்லாம் ஒரு ரசிகர் நோட்டு கொடுத்தால் மற்றொரு ரசிகர் சைக்கிள் கொடுப்பது போல் ஆரோக்கியமான போட்டியாக இருந்ததை நம் கண்முன் கொண்டு வருகின்றனர்.

அதிலும் நட்ராஜ் ரஜனியாகவே மாறிவிட்டார். தலை முடியை கோரிவிடுவதிலிருந்து வேகவேகமாக நடப்பது என அப்லாஸ் அள்ளுகின்றார். ராஜாஜி படம் முழுவதும் வீரவசனம் பேசி கடைசியில் அடி தான் வாங்கிவருகின்றார்.

சஞ்சிதா ஷெட்டி, பார்வதி நாயர் எல்லாம் ஹீரோயின் வேண்டும் என்பதற்காக வந்து



பட ரிலீஸ் போது கட்-அவுட் வரைபவர்கள். ரஜனி-கமல் படங்கள் வெளிவரும் போதும் திருநெல்வேலியில் உள்ள ராதாரவியின் திரையரங்கு பலிக்கடா ஆகின்றது.

அடித்து துவம்சம் செய்கிறார்கள் ரசிகர்கள். இதனால் இனி ரஜனி-கமல் படமே எடுக்கக் கூடாது என ராதாரவி முடிவு செய்ய, ஆனால், அவரின் எதிர்கால அரசியல் ஆசை கொஞ்சம் யோசிக்க வைக்கின்றது.

இவர்களை எதிர்க்க முடியாது, ஓட்டு முக்கியம் என்பதால், படம் எடுப்போம், ஆனால், கட்-அவுட் வைக்க கூடாது என கூறி நட்ராஜ், ராஜாஜிக்கு ஷாக் கொடுக்க, அதன் பின் என்ன ஆனது என்பதே இந்த எங்கிட்ட மோதாதே.

இன்றைய காலகட்டம் இல்லை, எந்த காலக் கட்டத்திற்கும் பொருந்தக்கூடிய கதை இது. தற்போது தான் சமூக வலைத்தளங்களில் கேவலமாக ரசிகர்கள் சண்டை நடக்கின்றது.


செல்கின்றார்கள். காதல் காட்சிகள் பெரிதும் ரசிக்க முடியவில்லை. ராதாரவி மகா கலைஞன் என்பதை படத்திற்கு படம் நிரூபிக்கின்றார்.

இனி படமே எடுக்கமாட்டேன் என கூறிவிட்டு, ஓட்டுக்காக அடுத்த நொடியே மாறும் காட்சி எல்லாம் சீனியர்... சீனியர் தான். படத்தின் பின்னணி இசை நன்றாக இருந்தாலும் பாடல்கள் ஏதுமே மனதில் ஒட்டவில்லை நட்ராஜன் சங்கரன் அவர்களே.


இன்றைய காலகட்ட இளைஞர்கள் 80களில் நடந்த ரசிகர்கள் சண்டை(ஆரோக்கியமான)-யை காட்டியவிதம்.
ரசிகர்களின் மோதலை அரசியல்வாதிகள் எப்படி அரசியலாக்குகின்றனர் என்பதை தெளிவாக காட்டியுள்ளனர்.

படத்தில் வரும் கட்-அவுட்டுகள் யார் வரைந்தார்கள் என்று தெரியவில்லை, அத்தனை தத்ரூபம், மீண்டும் பேனர் கலாசாரம் ஒழிந்து கட்-அவுட் வரைவது வந்தால் நன்றாக இருக்கும் என நம்மையே நினைக்க வைக்கின்றது.

காதல் காட்சிகள் மற்றும் பாடல்கள் மொத்தத்தில் ரஜனி-கமல் ரசிகர்கள் மட்டுமல்ல அனைத்து தரப்பு ரசிகர்களும் பார்க்கலாம்.







# ரஜனிக்கு கடும் எதிர்ப்பு

400 கோடி செலவில் 2.0 படத்தை தயாரித்து வரும் லைகா நிறுவனத்தின் உரிமையாளர் சுபாஸ்கரன் நடத்தி வரும் ஞானம் அறக்கட்டளை இலங்கையில் 150 வீடுகளை கட்டி இடம்பெயர்ந்த தமிழர்களுக்கு வழங்கவுள்ளது.

அந்த விழாவில் சுப்பர்ஸ்டார் ரஜனிகாந்த் கலந்து கொள்ளவுள்ளதாக சமீபத்தில் தகவல் வெளியானது.

இதற்கு விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். தமிழ்மக்களை வஞ்சிக்கும் சிங்களத்தின் கொடும் போக்கைக் கண்டித்து எல்லோரும் பேசவேண்டிய நேரத்தில், அதை திசைதிருப்பும் உத்தியாகவே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறதோ என்கிற ஐயம் எழுவதைத் தவிர்க்கமுடியவில்லை.

ரஜனிகாந்த் போன்ற புகழ்பெற்ற நடிகர் ஒருவரை வைத்து ஒருவிழாவை நடத்தி அந்த ஒளி வெள்ளத்தில் மக்களின் உண்மையான குறைகளை இருட்டில் தள்ளி விடுவது மட்டுமன்றி, பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வு மிக வேகமாக நடந்துகொண்டிருக்கிறது என்று உலகத்துக்குக் காட்டவும் இந்நிகழ்ச்சி பயன்படும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்கமுடியாது.

லைகா நிறுவனம், மிகப்பெரும் செலவில் தயாரிக்கப்படுகிற அந்தப்படத்துக்கான உலக அளவிலான விளம்பரமாக அந்நிகழ்ச்சியைப் பயன்படுத்திக்கொள்ள எண்ணுகிறது. சிங்கள அரசாங்கத்துக்கும் தனியார் முதலாளிக்கும் நன்மை பயக்கும் இந்நிகழ்வைச் செயற்படுத்த, எவ்வித நியாயமுமின்றி உறவுகள், உடைமைகள், உரிமைகளையும் இழந்து நிற்கும் அப்பாவி மக்களின் கொடுந்துயரம் பயன்படுகிறது என்பதை நினைக்கும்போது உள்ளம் கொதிக்கிறது.

கலைஞர்கள் மக்களை மகிழ்விப்பவர்களாக மட்டுமே இருக்கவேண்டும். எனவே, நடிகர் ரஜனிகாந்த், இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உலகத்தமிழர்களின் வெறுப்புக்கு ஆளாகவேண்டாம் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

# அழுவதற்கும் அழிவதற்கும் ஒரு இனமா?



போராட்ட வாழ்க்கைக்குள் வலிந்து தள்ளப்பட்டுள்ளது தமிழினம்.

யுத்தம் நடந்த மூன்று தசாப்த காலங்களில் உயிரைக் காத்துக் கொள்ளப் போராடியது. அதற்குப் பின்னர் கடந்த ஏழு ஆண்டுகளில் சிங்களப் படைகளின் ஆக்கிரமிப்புக்குள்ளான நிலங்களை - உறவுகளை உயிருடன் மீட்கவும் போராடி வருகிறது.

இதைவிட வாழ்வாதாரத்தை பெருக்கவும் படித்துப் பெற்ற பட்டங்களுக்குரிய அரச வேலைவாய்ப்பைக் கோரியும் போராட வேண்டியுள்ளது.

ஆக, தமிழர் தாயகத்தில் போராட்டங்கள் ஓய்ந்த காலம் என்று எதுவுமே இருக்காது என்பதை உணர்த்தும் வகையில் போராட்டங்கள் தொடர்கின்றன.

தமிழினம் போராட்டம் நடத்தித்தான் உயிரைக் காப்பாற்ற வேண்டியுள்ளது- உரிமைகளை நிலை நாட்டவேண்டிய நிலையும் உள்ளது.

தமிழினத்தின் இந் நிலைக்கு விதி - சதி காரணம் எனலாம்.

விதிதான் காரணம் என்று விலகிச் செல்ல முற்பட்டால் தமிழினத்திற்கு எதிராக நடந்த சதிகள் அனைத்தும் மறைக்கப்பட்டு விடும்.

இறுதியில் சதிகளும் விதியால் விளைந்தது தான் என்று கூறி எல்லாமே விதியென்றாகிவிடும்.

ஆனால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை விதியால் விளைந்தது என்று ஏற்கமாட்டார்கள்.

அவ்வாறு ஏற்க வேண்டும் என்று யாரும் நிர்ப்பந்திக்க முடியாது.

அந்த மக்களுக்கு ஆட்சியாளர்கள் பதில் கூற வேண்டும். ஆனால் அரச தரப்பினர் உரிய பதிலைக் கூறத் தயாரில்லை.

இறுதிக்கட்டப் போரில் ஆயுதம் தரித்த சிங்களப் படையினரிடம் காயங்களுடனும் கண்ணீருடனும் கையளித்த உறவுகளை மீட்கத் துடிக்கும் உறவினர்களுக்கு என்ன பதிலைக் கூற முடியும்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கூறுவதைப்போன்று ஈவிரக்கமின்றி கூறமுடியுமா?

காணாமற்போன தமது பிள்ளைகள், உறவுகள் எங்கோ ஒரு மூலையில் உயிருடன் உள்ளனர் என்ற நம்பிக்கையில் உறுதியுடன் போராடி வருகையில் அவர்கள் உயிருடன் இல்லையென்று கூறினால் என்ன செய்வது? விதியைத்தான் நொந்து கொள்ள முடியும்.

இறுதிக் கட்டப்போரிலே படைகளிடம் சரணடையுமாறு அறிவிக்கப்பட்டபோது உயிருடன் அவர்கள் மீளத் திரும்ப மாட்டார்கள் என்று தெரிந்திருந்தால் சரணடைந்திருப்பார்களா?-யாராவது தங்களுடைய உறவுகளை ஒப்படைத்திருப்பார்களா?




காணாமற் போனவர்கள் காணாமற் போனவர்கள்தான் என்று நல்லாட்சியின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்த பின்பும் தமிழ் மக்கள் ஏன் போராட வேண்டும்?

தமது உறவுகள் உயிருடன் உள்ளனர் என்பதை அவர்கள் நூற்றுக்கு 100 வீதம் நம்புகின்றனர்.

காணாமற் போனது பொருளல்ல உயிர்கள். உயிர்களை இழந்தவர்களுக்கத்தான் அதன் வலி தெரியும். ஊழல் வழக்கில் சிக்கிச் சிறை சென்ற புதல்வர்களுக்காகக் கண்ணீர் வடித்த மகிந்தவிற்கு தனது ஆட்சிக் காலத்தில் அரச படைகள் முள்ளிவாய்க்கால்- கொலைக்களத்தில் ஆடிய கோரத்தாண்டவம் தெரியாதா? அல்லது படைகளுக்கு உத்தரவிட்டு தமிழினத்தை அழித்தொழிக்க முற்பட்ட கோத்தபாயவுக்கு புரியாதா?

எனவே தமிழ் மக்களின் கண்ணீரைப் பெருக்கி அதில் சிங்கள மக்களின் ஆதரவைப் பெருக்கும் நோக்கத்தைக் கைவிட வேண்டும்.

தமிழினம் இழக்கக்கூடாத அனைத்தையும் இழந்து நாதியற்றுள்ளது.

90 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களை தன்னகத்தே கொண்ட இனமாகவும் தாய்,தந்தையை இழந்த நிலையில் சிறுவர் இல்லங்களில் எத்தனையோ ஆயிரம் பிள்ளைகள் வாழும் சூழ்நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளது.

இத்தகைய கொடுமைகளுக்கு மத்தியில் உறவுகளைத் தொலைத்த நிலையில் மனவேதனையுடன் நாளாந்தம் கண்ணீருடன் பொழுதைக் கழிக்கும் தமிழ் மக்களின் துன்பம் நீடிக்கிறது.

கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்பாக 35 நாட்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட காணாமற்போனவர்களின் உறவினர்களின் போராட்டம் இன்றும் தொடர்கிறது.

அதுமட்டுமன்றி முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட நிலையிலும் ஏனைய வழிகளாலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஒன்றிணைந்து மாவட்ட செயலகத்திற்கு முன்பாக 18 ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் முன்னெடுக்கப்படும் காலவரையறையற்ற போராட்டம் பத்து நாட்களைக் கடந்துள்ளது.

இவ்வாறு வடக்கில் அனைத்து மாவட்டங்களிலும் கிழக்கிலும் காணாமற்போனவர்களின் உறவினர்களால் பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

உள்நாட்டு -வெளிநாட்டு அரச தலைவர்கள் வடக்கு - கிழக்கிற்கு வருகைதரும் போதெல்லாம் காணாமற்போனவர்களின் உறவினர்கள் கைகளில் புகைப்படங்களுடன் கண்ணீர்விட்டுக் கதறியபடி வீதிகளில் போராட்டங்களில் ஈடுபடுவர்.

பிள்ளைகளைப் படைத்தரப்பிடம் பறிகொடுத்து விட்டு ஏங்கித் தவிக்கும் தமிழ்த் தாய்மாருக்கு சிங்களத் தலைவர்கள் கட்டாயம் பதிலளிக்க வேண்டும். அவர்களின் நீண்டகாலத் துயரைப் போக்க வேண்டும் என்பதே ஒவ்வொரு தமிழனின் கோரிக்கை.

அதேவேளை படைகளிடம் அகப்பட்ட தமது பூர்வீகக் காணிகளை மீட்டு அங்கு சென்று வாழ வேண்டும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ் மக்களின் இத்தகைய போராட்டங்கள் நியாயமானவை. இதை அரச தலைவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

நல்லாட்சியை சொல்லாட்சியுடன் நிறுத்திவிடாமல் செயலிலும் காட்ட வேண்டும். ஐ.நா. இரண்டு வருடங்கள் கால அவகாசம் வழங்கிவிட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதற்கு வரவேற்பு தெரிவித்து விட்டது.

இதனூடாக தமிழர் பிரச்சினைகளைத் தீர்ப்பதாகக் கூறி நல்லாட்சியை சிக்கலின்றி நகர்த்திச் செல்லலாம் என்று கருதாமல் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

பல்வேறு தரப்பினரின் எதிர்ப்பையும் மீறி ஐ.நா. சபையால் இலங்கை அரசுக்கு வழங்கப்பட்டுள்ள இரண்டு வருடகால அவகாசத்திலாவது தமிழ் மக்களின் கண்ணீரைப் போக்க வேண்டும் என்பதே தமிழரின் எதிர்பார்ப்பு.




காண்டீபன்

# facebook

## கூட்டுக்குடும்பம்



ஒரு கிராமத்திற்கு அரசு அதிகாரிகள் வந்து இருந்தனர். வீதிக்கு வீதி தமுக்கு அடித்து அனைவரையும் மந்தை வெளிக்கு வரச் சொன்னார்கள். ஊர் மக்கள் அனைவரும் ஒன்றாக மந்தைவெளியில் இருக்கும் ஆலமரத்தடியில் ஒன்று கூடினர்.

ஒரு அதிகாரி பேசத் தொடங்கினார். அதாவது யார்யாருக்கு சொந்தமாக வீடு இல்லையோ, வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள கூலித்தொழிலாளர்கள், விதவைகள், ஊனமுற்றோர்கள் போன்றோருக்கு அரசு சொநதமாக வீடு கட்டித்தர முன் வந்துள்ளது என்று கூறி னார். மேலும் அதற்கான மனுக்களைக் கொடுத்து பூர்த்தி செய்து தரச் சொன்னார்.

மேற்கூறிய அனைவரும் வரிசையில் நின்று வாங்கிக் கொண்டிருந்தனர். ஆனால் ராசு மட்டும் அமைதியாக அமர்ந்திருந்தான். அவன் குடும்பத்து ஆண்கள் கூட வரிசையில் நின்றிருந்தனர்.

ராசு வராததைக் கண்டு ஊர்ப் பெரியவர் ஒருவர் நீ மட்டும் ஏம்ப்பா வரிசையில் நிற்கவில்லை, உன் பெரிய குடும்பத்திற்கு ஒரு சின்ன சொந்தவீடு கூட கிடையாதே என்று கேட்டார். ராசு ஒரு முறை அவரை ஆழமாக பார்த்தான். பிறகு பேசத்தொடங்கினான்.

பெரியவரே உங்கள் அக்கறைக்கு மிக்க நன்றி, ஆனாலும் அரசு தரும் அந்த வீடு எனக்கு வேண்டாம். ஏனெனில் எங்கள் குடும்பம் ரொம்பப் பெரியது. எங்கள் தாத்தா, பாட்டி, பெரியப்பா, அப்பா, சித்தப்பா, மூவரின் குடும்பமும் கூட்டுக் குடும்பமாக வாழ்கின்றோம்.

எங்கள் குடும்பத்திற்கு வந்த மருமகள்கள் கூட எங்களைப் பிரிக்க நினைக்கவில்லை. இன்றும் பலரும் போற்றும்படி ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறோம். நாங்கள் கூலித்தொழிலாளிகள் தான், வாடகை வீட்டில்தான் இருக்கிறோம்,

சொந்த வீட்டிற்கு ஆசைப் பட்டு அரசு கொடுக்கும் வீட்டிற்கு சென்றால் எங்கள் கூட்டுக்குடும்பம் பிரிந்து விடும். அரசு என்ன கூட்டுக் குடும்பங்களுக்கான சற்று பெரிய வீடாகவா கட்டித்தருகிறது?

எங்கள் குழந்தைகள் கூட இந்த பிரிவை தாங்க மாட்டார்கள். அதனால்தான் நான் வரிசையில் நிற்கவில்லை என்று கூறினான்.

வரிசையில் நின்று கொண்டிருந்த ராசுவின் குடும்பத்திற்கு இதைக்கேட்டு சவுக்கால் அடித்தது போல் இருந்தது. வெட்கி தலை குனிந்து வரிசையை விட்டு விலகி வந்து ராசுவை அணைத்துக் கொண்டு கண்ணீர் விட்டனர்.

சொந்த வீட்டிற்கு ஆசைப் பட்டு ஒரு நிமிடம் அனைத்தையும் மறந்துவிட்டோமே என்று புலம்பினர். உன்னைப் போல யோசிக்கத் தவறி விட்டோம்.இன்னும் அதிகப்படியாக உழைத்து நமக்கான சொந்தவீட்டை நாமே கட்டுவோம் என்று உறுதி எடுத்தனர்.

இதைப்பார்த்த கிராமமே வியந்தது. வரிசையில் நின்ற பல கூட்டுக்குடும்பத்தினரும் வரிசையை விட்டு விலகினர். இதைப் பார்த்த அதிகாரிகள் ஆச்சரியப்பட்டனர். அதிசயித்தனர்.

கூட்டுக் குடும்பத்தில் உள்ள அனைவரும் சேர்ந்து வாழ நினைக்க விட்டாலும் அந்த குடும்பத்தில் யாரோ ஒருவருக்கு அந்த விருப்பம் இருந்தால் அவர் குடும்பத்தில் உள்ளவர்கள் பிரிந்து செல்லாமல் பார்த்து கொள்வார்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1025

Search for people, places and things · Nagendram · Home

### சோபிகா




### திவ்வியன்




### தனலக்ஷன்




### ரவிராஜ்




### சம்பவன்




### லாவன்யா



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்


வலம்புரியின் மருத்துவச்சுடர் 77

## மதுப்பழக்கத்திலிருந்து விடுதலைபெற நினைப்பவர்களுக்கு...



மது அடிமை நிலைமையிலிருந்து விடுபட்ட ஒருவர் அவர் பல விடயங்களில் மிகுந்த அவதானமாக இருக்கவேண்டும்.

குறிப்பாக அவர் வேலை செய்யும் இடங்களில் குடிக்கின்ற நண்பர்கள் அதிகமாக இருந்தால் அவர் அவ்வாறான வேலை செய்யும் இடங்களைத் தவிர்த்துக் கொண்டு தனது வேலைக்கான மாற்று ஏற்பாடுகளைச் செய்வது மிகவும் அவசியமானது.



அதுபோல் அவர் பார்க்கின்ற வேலைகாரணமாகவோ, பழக்க தோசம் காரணமாக அவர் வேலையின் பொழுது மீண்டும் குடிக்க கூடிய சாத்தியங்கள் ஏற்படலாம்.

எனவே குடியிலிருந்து மீண்டு புதிய வாழ்க்கையைத் தொடங்கும் ஒருவர் எப்பொழுதும் விழிப்பாக இருக்கவேண்டும். அவதானமாக இருக்கவேண்டும்.

சம்பளம் எடுக்கும் நாட்களில் மதுவைநோக்கிய இழுவிசைகளும் தள்ளுவிசைகளும் மிக அதிகமாகும் சாத்தியங்கள் காணப்படும். அதுபற்றிய உள்ளுணர்வோடு இருந்தால் எவ்வாறான ஆபத்தான சந்தர்ப்பங்களில் இருந்துதப்பித்துக் கொள்ளலாம்.


குடும்பங்களில் நடப்பதுபோல் வேலைசெய்யும் இடங்களிலும் சிலர் பழையகுடிக்கின்ற நிலையில் இருந்த வாழ்க்கையையும் பிரச்சினைகளையும் குத்திக் காட்டிக் கதைக்கலாம். இவ் வேளைகளில் எல்லாம் உணர்ச்சி வசப்படாது அமைதியாக இருந்து அதனை எதிர்கொள்ளப் பழக வேண்டும்.

நான்இப்பொழுதுமாறிவிட்டேன் என்றுமனதினுள் அடிக்கடி சொல்லிக் கொள்ளலாம். சிந்தனை ஓட்டம் தெளிவாக இருக்குமாயின் மதுப்பழக்கத்திலிருந்து நிரந்தரமாகவிடுதலைபெறமுடியும்.

**Dr.சா.சிவயோகன்**
**(உளநலமருத்துவநிபுணர்)**




## சிறுநீரகங்கள் முக்கியமாக ஆறு தொழில்களைச் செய்கின்றன




1. நாம் உண்ணும் உணவுகளில் இருந்து உருவாகின்ற யூரியா கிரியாற்றினின் மற்றும் நைதரசன் கலந்தகழிவுப் பொருட்களை சிறுநீரக வெளியேற்றுதல் சாதாரணமாக ஒருவர் நாள் ஒன்றுக்கு 1.5 லீற்றர் முதல் 2 லீற்றர் வரையான சிறுநீரைக் கழிக்கின்றார்.

2. உடலில் நீரின் அளவையும் மற்றும் பொட்டாசியம், சோடியம், கல்சியம் போன்ற தாதுப் பொருட்களின் **(Minerals)** அளவையும் சமநிலையில் பேணுதல்.

3. உடலில் கார, அமிலத் தன்மையை **(Acid- Base Balance)** பேணுதல் சாதாரணமாக குருதியின் **PH - 7.4** ஆகும்.

இந்த **PH** இனை பேணுவதில் சிறுநீரகம் சுவாசப்பை மற்றும் உடலில் உள்ள பிற அம்சங்கள் என்பன சம்பந்தப் படுகின்றன. **PH - 7.2** இலும் குறைவடைந்தால் உயிராபத்து ஏற்படலாம்.

4. உடலில் குருதி அமுக்கத்தை **(Blood Pressure)** சீரான அளவில் பேணுதல் இதயம் சுருங்கும் போது குருதிக்குழாய்களில் உள்ள அமுக்கத்தை **(Systolic Pressure) 120-140 mm Hg** க்குள்ளும் இதயம் தளர்வடையும் போது குருதிக்குழாய்களில் உள்ள அழுத்தத்தை **(Dias tolic Pressure) 70-90mm Hg** இடையிலும் பேணுதல்.

இவ்விடயத்தில் சிறுநீரகத்தால் சுரக்கப்படும் **(Renin)** என்ற சுரப்பு **( Hormone)** முக்கிய பங்கை வகிக்கின்றது.

5. உடலில் உள்ள கல்சியத்தின் சம நிலையை பேணுவதில் சிறுநீரகங்கள் முக்கிய பங்கை வகிக்கின்றன.

எமது உடலில் ஒருகிலோ கிராம் கல்சியம் வரை உள்ளது. அதில் 95 வீதமானவை எலும்புகளிலும் மிகுதியானவை குருதியிலும் மற்றும் சில கலங்களிலும் உள்ளது. எமது உடலில் அகத்துறிஞ்சப்படும் கல்சியம் தொழிற்பாட்டுக்குரிய நிலையை அடைய வேண்டும்.

இதற்குரிய நொதியங்களை **(Hydrolase)** சிறுநீரகம் சுரக்கின்றது.

6. செங்குருதிக்கலங்களில் **(Red Blood Corpuscle )** உள்ள 'ஹீமோகுளோபினின்**(Hemoglobin)** உருவாக்கத்திற்கு தேவையான எரித்திரோ பொயிற்றின் ஒட்சிசனை காவுவதில் பங்காற்றுகின்றன.

ஒருவருக்கு **Hemoglobin** இன் அளவு குறைவடைந்தால் அடிக்கடி களைப்பு, சோர்வு போன்றபிரச்சினைகள் ஏற்படுகின்றன.

**Dr.T.பேரானந்தராசா**
**பொதுவைத்தியநிபுணர்.**

மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் **0768363858** என்ற இலக்கத்திற்கு **SMS** செய்துவிடுங்கள்.